Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 11 ஞாயிற்றுக்கிழமை (24.03.2013) பக்கங்கள் 20 ஓசை – 175
















# அமெரிக்கப் பிரேரணையின் அழுத்தங்கள் அரசியல் தீர்வுக்கு உதவப்போவதில்லை



இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்க பிரேரணை என்பது தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் உரிமைப் பிரச்சினைத் தீர்வுக்கு உதவப் போவதில்லை என்றும், மாறாக தமிழ், முஸ்லிம், சிங்கள மற்றும் ஆளும் அரசாங்க கட்சிகள் யாவும் ஒன்றுபட்டு செயற்படுவதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளே உள்நாட்டு பிரச்சினையை தீர்க்கவும், அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காணவும் அவசியமானது எனவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள ஊடகங்களுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும்' என்பது போல் எமது பிரச்சினைகளை நாம் மட்டுமே பேசித் தீர்க்க முடியும்.

அரசியல் தீர்வு என்ற குழந்தையை நாம் பிரசவிப்பதற்கு வெளியுலக விருப்பங்களும், உதவிகளும் ஒரு மருத்துவிச்சியின் சேவையினையே எமக்கு வழங்க முடியும்.

வெளியுலகத் தீர்மானங்கள் எவையும் தத்தமது நாடுகளின் நலன் சார்ந்த இலங்கை அரசுடனான விருப்பு வெறுப்புகளை கொண்டிருக்க முடியாது.

மாறாக அவை தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வு குறித்த நலன்களை பிரதான நோக்காக கொண்டிருப்பதையே நாம் விரும்புகின்றோம்.

எமக்கு தேவை தமிழ் பேசும் மக்களுக்கான கௌரவமான ஓர் அரசியல் தீர்வு. அதற்கான

19 ஆம் பக்கம் பார்க்க

# ஐக்கிய இலங்கைக்குள் தமிழ்மக்களுக்கு தீர்வு



## வலியுறுத்துகிறது இந்தியா

(புதுடில்லி)

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ்மக்களுக்கு பூரண உரிமைகளும் சுதந்திரமும் வழங்கப் படக்கூடிய வகையிலான தீர்வுத் திட்டத்தையே தாம் வலியுறுத்துவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் நடைபெற்ற வி.கே.கிருஸ்ணா மேனன் நினைவுப் பேருரையில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

இலங்கை நட்பு நாடு பாதுகாப்பு விவகாரங்களில் பாதிப்பு ஏற்படாத வகையில் உறவுகள் தொடரும்.

19 ஆம் பக்கம் பார்க்க

## முள்மகுடம் சூட்டுவதற்கு ஜெனிவாவில் நடவடிக்கை

### ஜனாதிபதி தெரிவிப்பு

(அம்பாறை)

கடந்த காலங்களில் மரண பயத்துடன் வாழ்ந்த மக்கள் தற்போது சுதந்திரமாக வாழ்வதற்கு வழியமைத்துக் கொடுத்து தேசத்தின் மகுடம் சூட்டிய தமக்கு முள் மகுடம் சூட்டுவதற்கு ஜெனிவாவில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய நிகழ்வான தேசத்துக்கு மகுடம் - 2013 கண்காட்சியை அம்பாறையில் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மகிந்த இவ்வாறு தெரிவித்தார். இங்கு உரையாற்றும் போது சிறிது நேரம் தமிழிலும் ஜனாதிபதி உரையாற்றினார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தத்தில் அமைதிகாத்த தி.மு.க. இப்போது கூச்சலிடுவது ஏன்?

### கேட்கிறது பா.ஜ.க.

(புதுடில்லி)

இறுதி யுத்தத்தின் போது தமிழ் மக்களை பாதுகாக்க முடியாத இந்தியாவும், திராவிட முன்னேற்றக் கழகமும், தற்போது ஏன் கூச்சல் இடுகின்றன என்று இந்திய எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா தெரிவித்துள்ளது. அதன் தலைவர்களில் ஒருவரான வெங்கையா நாயுடு இதனைத் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தம் இடம்பெற்ற போது, இராணுவத்தினரும், விடுதலைப்புலிகளும் நடத்திய தாக்குதல்களில் பொது மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இதன் போது இந்தியாவும்,

19 ஆம் பக்கம் பார்க்க

## தீர்மானத்தை அமுல்படுத்த தவறின் இலங்கை மீது சர்வதேச நடவடிக்கை

### எச்சரிக்கிறது அமெரிக்கா



(வொஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்தத் தவறினால் சர்வதேச ரீதியான நடவடிக்கை எடுக்க நேரிடும் என அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

வொஷிங்டனில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்ரோரியா நூலண்ட் இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

அவர்கள் நடைமுறைப்படுத்தாத திட்டங்களை நடைமுறைப்

19 ஆம் பக்கம் பார்க்க

## கால அவகாசம் அரசுக்கு வேண்டாம் சர்வதேசத்தை கோரும் சம்பந்தன்



(கொழும்பு)

இலங்கை அரசுக்கு இனியும் கால அவகாசம் கொடுத்துப் பயனில்லை. எனவே, பிரேரணைகள் நிறைவேற்றிக் காலத்தை வீண் விரயமாக்காமல் அடுத்தகட்ட நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எடுக்கவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இலங்கை அரசுடன் தமிழ்த் தலைவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்களை அது உதாசீனப்படுத்தியபடியால்தான் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு நீதியை, தீர்வைப் பெற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தை

19 ஆம் பக்கம் பார்க்க

## இராஜதந்திர தளர்வுநிலை விசாரணை நடத்த தீர்மானம்

(கொழும்பு)

அமெரிக்காவினால் இலங்கைக்கெதிராக ஜெனிவா மனித உரிமை பேரவையில் அதிக வாக்கு வித்தியாசத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் ஏற்பட்ட இராஜதந்திர தளர்வு நிலை குறித்து உடனடியான விசாரணைகளை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தியாவின் பல மாநில அரசாங்கங்கள் இலங்கைக்கு சார்பாக இருக்கும் நிலையில், தமிழ் நாட்டின் அழுத்தங்களுக்கு இந்திய அரசாங்கம் அடிபணிந்தமை, இலங்கையின் இராஜதந்திர அதிகாரிகளின் பலவீனம் என அரசாங்கத்தில் உள்ள சிலர்

19 ஆம் பக்கம் பார்க்க

# டெங்குத் தொற்றிற்கு இலக்கான மூவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றும், நேற்று முன்தினமும் டெங்குத் தொற்றிற்கு இலக்காகிய மூவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ்வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சாவகச்சேரி மற்றும் யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலிருந்து தலா ஒவ்வொருவரும், நேற்று முன்தினம் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து ஒருவருமாகவே இந்த மூவரும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்களுடன் இந்த மாதத்தில் இதுவரை 36 பேர் டெங்குத் தொற்றிற்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

# காணாமல் போனவர்கள் தொடர்பில் செஞ்சிலுவைச் சங்கத்தில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒருவருட காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் காணாமற் போனவர்கள் சம்பந்தமாக சுமார் நூறு வரையான முறைப்பாடுகள் அவர்களது உறவினர்களினால் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடபகுதியிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது காரியாலயங்களை மூடிவிட்டு வெளியேறிச் சென்றதனை அடுத்தே இது சம்பந்தமாக காணாமற்போனவர்கள் சம்பந்தமான முறைப்பாடுகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பெற்று கொழும்பில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்கி வருவதாகவும் அவர்கள் காணாமற்போனவர்கள் குறித்து தேடுதல் நடத்தி அவர்கள் குறித்த தகவல்களை அறிந்து அவர்களை மீளவும் குடும்பத்துடன் இணைத்து வருகின்ற மனிதநேயப் பணிகளை ஆற்றி வருகின்றனர்.

வடக்கில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பணியாற்றிய காலத்தில் இதனை நேரடியாக மேற்கொண்டு வந்ததாகவும், தற்சமயம் வடக்கில் இருந்து அது வெளியேறிய நிலையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (பா)

# விவசாய அபிவிருத்திக்குழு வலி.கிழக்கில் உதயம்

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேசத்தில் வலி.கிழக்கு விவசாய அபிவிருத்திக் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக அரியட்டி தம்பிநாதவம், உப தலைவராக கி.றஞ்சன், செயலாளராக ந.உமாகாந்தன், உப செயலாளராக த.இராசரத்தினம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 31 கிராம சேவையாளர் பிரிவிலிருந்தும் ஒரு உறுப்பினர் வீதம் நிர்வாக சபைக்கு 30 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (08)

# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்க கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தீவகத்தின் அதிசயமாக நெடுந்தீவு; மக்களின் தொடர் ஆதரவே காரணம்

## - நெடுந்தீவு பிரதேச சபை அறிக்கை

(நெடுந்தீவு)

எதுவித வசதிகளுமற்று, அபிவிருத்தியின்றி வறண்ட தேசமாகக் காணப்பட்ட நெடுந்தீவுப் பிரதேசம் 1990 ஆம் ஆண்டின் பின் பல்வேறு வாழ்வாதார மேம்பாட்டு செயற்றிட்டங்களையும், அபிவிருத்திகளையும் பெற்று இன்று தீவகத்தின் அதிசயமாக விளங்குகின்றது.

நெடுந்தீவு மக்கள் தொடர்ச்சியாக ஒருமித்த தலைமையின் கீழ் அணிதிரண்டு ஆதரவளித்ததன் மூலமே இத்தகைய வியக்கத்தகு சாதனைகளை நிலைநாட்ட முடிந்தது என நெடுந்தீவு பிரதேச சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நெடுந்தீவில் ஒரு பொழுதேனும் தரித்திருந்து மக்கள் நலப்பணியாற்ற முடியாதவர்கள் தமது சுயலாப அரசியலுக்காக உண்மைகளை திரிவுபடுத்தி நெடுந்தீவு பிரதேசம் அபிவிருத்தியில் புறம் தள்ளப்பட்டுள்ளதாக நீலிக்கண்ணீர் வடிப்பது வேடிக்கையானது.

இதனுடன் நெடுந்தீவின் அபிவிருத்திச் செயற்பாடுகளை விமர்சிப்பதும், பாகுபாடுகளுடன் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஊடகங்களில் பிரசுரமாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை.

பாதுகாப்பானதும், விரைவானதுமான கடற்போக்குவரத்து, தடங்களற்ற சிறப்பான உள்ளூர் போக்குவரத்து சேவை, 24 மணிநேர மின்விநியோகம், நவீன முறையில் சீரமைக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம், வீதி அபிவிருத்திப் பணிகள், விவசாய - வணிக மற்றும் கைத்தொழில் மேம்பாட்டு நடவடிக்கைகள், வாழ்வாதார உதவித்திட்டங்கள் என பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் நெடுந்தீவு வளமான தேசமாக மாற்றமடைந்துள்ளது.

தீவகம் தவிர்ந்த யாழ்.குடாநாட்டின் ஏனைய பிரதேச சபைகளால் ஆற்றமுடியாத மக்கள் நலப்பணிகளை கடலின் நடுவே தனித்திருக்கும் நெடுந்தீவில் நாம் ஆற்றிவருகின்றோம். கடற்போக்குவரத்தில் சில தடங்கல்கள், இயற்கை மாற்றங்களால் ஏற்படுகின்றபோதும் நிறைவான சேவையை எமது பிரதேசத்தவர்கள் தொடர்ந்து வழங்கிவருகின்றோம்.

இவ்வாறான சமூக நலப்பணிகளை தமது சுயலாப அரசியல் வாழ்வுக்காக, காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடாய் உண்மைகளை திரிவுபடுத்தி செய்திகளை வெளியிட்டுவரும் தான்தோன்றித்தனமான செயற்பாடு 'ஆடு நனைகிறது ஓநாய் அழுதது' போலானது.

மரண வீடொன்றில் கலந்து கொள்ள நெடுந்தீவுக்கு வருகை தந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும், யாழ்.மாநகர சபை உறுப்பினர் விந்தனும் தமது உறவினர் வீடொன்றில் அறுவருடன் கலந்துரையாடிவிட்டு நெடுந்தீவு மக்களுடன் கலந்துரையாடியதாக சார்பு ஊடகங்களில் செய்தி வெளியிட்டிருப்பது கேலிக்கிடமானது.

நெடுந்தீவைச் சேர்ந்த விந்தனோ அல்லது அவர் சார்ந்த கட்சியோ ஒருநாளாவது நெடுந்தீவிலிருந்து மக்கள் நலப்பணியாற்ற முயலவில்லை.

இவ்வாறு நெடுந்தீவு மக்களிற்கு சேவையாற்ற திராணியற்று, வெறும் வாய்ச்சாடல்கள் மூலம் செய்திகளை சார்பு ஊடகங்களில் வெளியிட்டு அரசியல் பிழைப்பு நடாத்துவதே இவர்களின் வழமையாகிவிட்டது.

எனினும் எம்தீவிற்கு வாருங்கள் உங்களிலான பணியை எம் மக்களுக்குச் செய்யுங்கள். இத்தீவின் அழகான துறைமுக வாசல் என்றுமே உங்கள் வரவுக்காகத் திறந்தே உள்ளது. இதை விடுத்து சுயலாப அரசியலுக்காக சொந்தமண்ணையும், சொந்த உறவுகளையும் தாங்கும் எம்தீவை கொச்சைப்படுத்தாதீர்கள் வரலாறு உங்களை மன்னிக்காது.

தமது கட்சியை பிரதிநிதித்துவப்படும் வகையில் தெரிவான ஒரேயொரு பிரதேச சபை உறுப்பினரைக் கூட உரிய காலப்பகுதியில் நியமிக்க முடியாததால் அவரது உறுப்பினர் பதவி செல்லுபடியற்றதானது. இவ்வாறு கட்சி நிர்வாகத்தையே நடத்த முடியாதவர்களால் பிரதேசத்தை நிர்வகிக்க முடியாது என்பது நிச்சயமானது.

# பரந்தனில் மூக்குக்கண்ணாடி இலவச விநியோகம்

(தர்மபுரம்)

ஹெல்ப் ஏச் நிறுவனத்தால் தர்மபுரம், பரந்தன் பகுதியில் மூன்று கிராமங்களில் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவம் எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக நிறுவன இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

ஹெல்ப் ஏச் நிறுவனத்தால் முன்னதாக கண் பரிசோதனை செய்யப்பட்டவர்களுக்கே கண்ணாடி விநியோகம் இடம்பெறவுள்ளது.

26 ஆம் திகதி பரந்தன் கோரக்கன் கிராம பொது நோக்கு மண்டபத்தில் பி.ப 2 மணிக்கும், 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு தருமபுரம் நெசவு நிலைய மண்டபத்திலும், 11 மணிக்கு பெரிய குளம் பொதுநோக்கு மண்டபத்திலும் விநியோகம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே கண்பரிசோதனை செய்யப்பட்டவர்களை குறித்த நேரத்திற்கு வந்து உரிய மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (112)

# கண்டாவளை பிரதேசத்திற்கு பிரதேசசபை அமைக்க கோரிக்கை

(முழங்காவில்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு தனியான ஒரு பிரதேச சபையை அமைப்பதற்கான நடவடிக்கைகயை மேற்கொள்ள வேண்டுமென கண்டாவளைப் பிரதேச சன சமூக நிலையங்களில் சமாசத்தால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலக பிரிவுகள் இருக்கின்ற நிலையில், கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவு இரண்டிற்கும் சேர்ந்து ஒரு பிரதேச சபை மட்டும் இருக்கின்ற நிலைமை மாற்றவேண்டுமெனவும்,

தற்பொழுது உள்ளூராட்சி எல்லைகள் மீள்நிர்மாணம் செய்யப்படுகின்ற இச்சந்தர்ப்பத்தில் நடவடிக்கையை மேற்கொண்டு இரண்டு சபைகளாகப் பிரிக்க வேண்டுமென பல பொது அமைப்புக்கள் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர், உள்ளூராட்சி ஆணையாளரிடம் எழுத்து மூலமான கோரிக்கை விடப்பட்டுள்ளது. (112)



வேலணை - துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தில் அப்பிரதேசத்தில் உள்ளவர்களின் சேவையினையும், சாதனையை பாராட்டும் விழா அண்மையில் ஐயனார் சன் சமூக நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த வகையில் அப் பிரதே பாடசாலைகளில் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற திருமதி.சி.பழனிக்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப்பிரிவில் 3ஏ சித்திகளைப்பெற்ற ஜீவராசா நிரோஜனுக்கும் , திருமதி சறோஜினி இளங்கோவன் நினைவுப் பரிசில் வழங்குவதனையும், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவனுக்கு திருமதி சி.பழனி நினைவுப் பரிசில் வழங்குவதையும் காணலாம். (21)



கந்தர்மடம் வடமேற்கு கிராம அலுவலர் பிரிவின் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நேற்று இடம்பெற்ற பொலிஸ் நடமாடும் சேவையின் போது கண் பரிசோதனை இடம்பெறுவதையும், பொலிஸார் முறைப்பாட்டுப் பிரதி வழங்கப்படுவதையும், கலந்துகொண்ட பொதுமக்களையும் காணலாம். (26)

# விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மூலமே கலாசார சீரழிவைத் தடுக்க முடியும்

## பருத்தித்துறை பிரதேச செயலர் சிவஸ்ரீ

(பருத்தித்துறை)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் செயற்பாடுகள் நல்லொழுக்க அபிவிருத்தியை நோக்கியதாகவே காணப்படுகிறது. அத்துடன் இந்நிறுவனம் மக்களுக்கு நன்மைதரக்கூடிய பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து செயற்பட்டு வருகின்றமை பாராட்டத்தக்கது என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தெரிவித்தார்.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் நிறுவனத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்நிறுவனத்தின் பெயரிலே நல்லொழுக்கம் என்ற பதம் உள்ளதுடன் இந்நிறுவனம் இன்றை காலத்திற்கு தேவையாகவுள்ள நல்லொழுக்க அபிவிருத்தி என்ற செயற்பாட்டை மேற்கொண்டு வருகிறது.

மேலும், வங்கிக்கடன் அபிவிருத்தி என்ற திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் சேவையை மேற்கொண்டாலும் அவற்றை இலாப நோக்கத்துடன் செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் நோக்கம் குடும்ப அபிவிருத்தி என்ற நோக்கிலாகும். குறிப்பாக நல்லொழுக்க நிறுவனங்கள் மக்களின் ஒழுக்கம் சார்ந்த விடயங்களாலும் கவனம் செலுத்தவேண்டும்.

அந்த வகையில் மதுப்பழக்கத்தில் ஈடுபடுவோருக்கு அதிலிருந்து மீளுவதற்கான விழிப்புணர்வுகள், சிறுவர்துஷ்பிரயோகம், வன்முறை, கலாசார சீரழிவுகள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை தவிர்த்துக் கொள்ள முடியும்.

அந்த வகையில் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் சமூக மட்டத்தில் விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுத்து வருகின்றது. இதன் செயற்பாடுகள் மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார். (109)

# பாடசாலையின் அபிவிருத்தி சமூகத்துடன் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் அபிவிருத்தி மேம்பாடு தொடர்பில் வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், கோப்பாய் பிரதேச இணைப்பாளருமான இ.ஐங்கரன் தலைமையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு விஜயம் மேற்கொண்ட வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர், கல்லூரிச் சமூகத்தினருடனான கலந்துரையாடலின் போது பாடசாலையின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள், அபிவிருத்தி மேம்பாடு தொடர்பில் நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார். இதன்போது தரம் ஒன்று மாணவர்களுக்கான செயல் நூலகளையும் வழங்கிவைத்தார்.

# யாழ். போதனா மருத்துவமனையின் செயற்பாடுகளில் முட்டுக்கட்டை

## அகற்ற உதவுமாறு அபிவிருத்திக்குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது நிலவும் பிரச்சினைகளை தீர்க்க வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு கவனம் செலுத்தியுள்ளது.

அபிவிருத்திக் குழு தாம் முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் தொடர்பாக தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவானது கடந்த ஒரு வருடமாக வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக பல முயற்சிகளைச் செய்து வருகின்றது.

வைத்தியசாலையின் அபிவிருத்தியில் வைத்தியசாலை நிர்வாகம், வைத்தியர்கள், தாதியர் மற்றும் சகல துறையையும் சார்ந்த ஊழியர்களினதும் ஒத்துழைப்பும் முக்கியமானதாகும்.

அண்மைக் காலமாக வைத்தியசாலையின் உடைமைகளை களவாடுவதும், சேதமாக்குவதும் அதிகரித்து வருகின்றது.

உதவித் திட்டங்கள் மூலமாக அபிவிருத்திப் பணியை முன்னெடுத்துச் செல்லும்போது இதற்குத் தடையாக அமையும் அனைத்து அம்சங்களையும் அகற்றுவதற்கு சகல தரப்பினர்களும் உதவ முன்வர வேண்டும் என்றும்,

இக்கட்டான சூழ்நிலையில் வைத்தியசாலையிலிருந்து மக்களுக்குச் சேவை செய்த நல்ல இதயங்களை மறந்து விடமுடியாது. அத்தகையவர்களில் சிலருக்குக்கூட அறைகள் கொடுககப்படவில்லை என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திடீரென வைத்தியசாலையில் பயிற்சி பெறுவதற்காக வைத்திய மாணவர்கள் தென்பகுதியிலிருந்து வரும்போது அவர்களுக்கு உடனடியாக இட ஒதுக்கீடு செய்வது முடியாத காரியமாகும்.

தனிப்பட்ட காரணங்களுக்காக இட ஒதுக்கீட்டில் உள்ள நியாயத்தை உணராமல் நிர்வாகத்துடன் முரண்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் குழு தெரிவித்துள்ளது.

# மாணவர்களுக்கு மதிய உணவு

(அச்சுவேலி)

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படாது கடந்த சில வாரங்களாகநிறுத்தப்பட்டிருந்த மதிய உணவு இந்த வாரம் முதல் மீண்டும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்களுக்கான மதிய உணவுக்குரிய அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட முக்கிய பொருட்கள் பாடசாலைகளில் கையிருப்பு முடிந்தமையால் கடந்த சில வாரங்களாக மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட முடியாத நிலை காணப்பட்டது.

ஆனால் இந்த வாரத்தில் மதிய உணவுக்கான சமையற் பொருட்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக பாடசாலைகளுக்கு மீண்டும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி உணவு வழங்கும் திட்டம் சீராக இடம்பெற்று வருகின்றது.

கடந்த வாரங்களில் மாணவர்களுக்கு உணவு வழங்கப்படாமையினால் மாணவர்கள் வீட்டிலிருந்தே தமக்குரிய உணவை எடுத்துச் சென்று உண்ணவேண்டிய நிலை இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (03)

# தொண்டர் சேவை

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பங்குனித்திங்கள் உற்சவத்தை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் ஆலய உற்சவத்தின்போது அடியார்களுக்கு தொண்டர் சேவையை வழங்கி வருகின்றனர்.

கடந்த 18 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 8 ஆம் திகதி வரையுமான இந்த உற்சவத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தொண்டர்கள அம்புலன்ஸ் வண்டி மற்றும் மருந்துப் பொருட்களுடன் சேவையாற்றி வருவதாகவும் செஞ்சிலுவைச்சங்கக் கிளையின்தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார். (பா)

# நயினாதீவு அம்மன் ஆலய கோ சாலை திறப்பு

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கோசாலை திறப்பும் நல்லை நாவலர் சிலை நிறுவும் நிகழ்வும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

சமூக சேவையாளரான வரதராஜசிங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 10 இலட்சம் ரூபா நிதியில் மாடுகள் தங்கும் தொழுவம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதுடன், இதனை இவர் திறந்து வைக்கவுள்ளார்.

இதேவேளை, நல்லை நாவலர் சிலை நாளை திங்கட்கிழமை காலை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு மறுநாள் ஆலய வளாகத்தில் நிறுவப்படவுள்ளது.

இதில் முன்னாள் அறங்காவலர் சபைத் தலைவர் க.ஆ.தியாகராசா சிலையை நிறுவவுள்ளார். சிலை ஊர்வலப் பவனியின்போது மக்கள் சமய ஆசாரப்படி செயற்படுமாறும், ஆலய அறங்காவலர் சபை செயலாளர் ந.மோகனரூபன் தெரிவித்துள்ளார். (175)



வடமாகாண ஆளுநர் பணிமனையினால் யாழ். மாநகர சபை பொது சுகாதார பரிசோதகர்களின் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கையினை துரிதமாக மேற்கொள்ளும் வகையில் 4 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இதற்கான பத்திரத்தை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவிடம் கையளிப்பதையும் அருகில் அளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.வரதீஸ்வரன் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

(படம் :கே.நந்தகுமார்)

சினத்தை விட்டவன் நாளும் துன்பப்படுவதில்லை. பேராசையை விட்டவன் பேரின்பம் அடைவான். - *சிவானந்தர்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## புதிய மனிதர்கள் ஆவோம்!

யுத்தம் முடிந்து நாலு ஆண்டுகள் ஓடிவிட்டன. இனி மற்றொரு சூழலில் நமது வாழ்வைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். நமது பிரதேசங்களில் எவ்வளவோ மாற்றங்கள் வந்துவிட்டன. நமது மனங்களிலும் மாற்றம் வந்தாக வேண்டும்.

சிலர் இந்த மாற்றங்கள் வந்துவிடக் கூடாது என்ற பதகளிப்புடனேயே பேசியும் எழுதியும் செயற்பட்டும் வருவதைப் பார்க்கிறோம். அவர்கள் இங்கு நடைபெறுபவை எல்லாவற்றையும் பிழையாக இருப்பதாகவே சித்திரப்படுத்துவார்கள். நல்லவை நடந்தாலும் அவற்றைக் காண மறுப்பார்கள்.

மக்களுக்கு நல்லது எதுவும் நடக்கவில்லை; நடக்கவும் மாட்டாது என்பதையே திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். இன்னும் சரியாக்கப்படாமல் இருக்கும் விஷயங்கள் பற்றி மட்டுமே அவர்கள் பேசுவார்கள். தங்களது சுயலாபங்களுக்காக, மக்கள் துன்புற்றிருப்பதை விரும்பி அதையே பிரலாபித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களைப் புரிந்துகொள்ள ஒரு குட்டிக்கதையைப் பார்க்கலாம்:

“நல்லதே பார், நல்லதே நினை, எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்” என்று உபதேசிப்பவர் அந்த அறிஞர். இருப்பவற்றிற்காக நன்றியுடன் இருந்தால் மட்டுமே மேலும் நன்மைகள் நம்மிடம் வந்து சேரும் என்று அவர் உறுதியாகச் சொல்வார்.

“ஒரு வெள்ளைத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் நடுவே ஒரு கோடு வரையுங்கள். வலது புறம் பெரிதாய் + குறியிட்டு உங்களுக்கு கிடைத்திருக்கும் நல்ல விஷயங்களை எழுதுங்கள். இடது புறம் - குறியிட்டு உங்களுக்கு இருக்கும் பிரச்சினைகளையும், தீமைகளையும் எழுதுங்கள். உண்மையாக ஆழமாக சிந்திப்பீர்களானால் கண்டிப்பாக வலது புறம் உள்ள பட்டியல்தான் நீண்டு இருக்கும். நீங்கள் எந்த அளவு அதிர்ஷ்டக்காரர் என்பதை அப்போது தான் உங்களால் உணர முடியும்” என்று ஒரு சொற்பொழிவில் சொல்லி அப்போதே எழுதிப் பார்க்கச் சொன்னார்.

எழுதியவர்களில் பெரும்பாலானோருக்கு - குறியில் தான் எழுத நிறைய இருந்தது. - குறியில் பெரிய பட்டியல் இட்டிருந்த முத்து என்பவரைத் தன்னிடம் அழைத்தார். + குறியில் எழுத ஒன்றுமே இல்லை என்று எதுவுமே எழுதாமல் விட்டிருந்தார் முத்து.

அறிஞர் முத்துவிடம் கேட்டார். “உங்கள் மனைவி உங்களைப் பிரிந்து எவ்வளவு காலம் ஆகிறது?”

முத்துவிற்குக் கோபம் வந்து விட்டது. “என் மனைவி என்னை விட்டுப் பிரிந்து விட்டதாக யார் சொன்னது? என்னுடன் தான் இருக்கிறாள். நாங்கள் அன்பாகத் தான் இருக்கிறோம்”

அறிஞர் + பகுதியில் கொட்டை எழுத்தில் எழுதினார். “அன்பான மனைவி உடன் இருக்கிறாள்”

பின் முத்துவிடம் கேட்டார். “உங்கள் குழந்தைகள் எந்த ஜெயிலில் இருக்கிறார்கள்?”

அறிஞராக இருந்து கொண்டு இப்படி ஏடாகூடமாகக் கேட்கிறாரே என்று கோபத்துடன் நினைத்த முத்து சொன்னார். “என் பிள்ளைகள் நல்லவர்கள். ஜெயிலுக்குப் போகிற அளவில் மோசமாய் இல்லை”

அறிஞர் + பகுதியில் அடுத்ததாக எழுதினார். “நல்ல பிள்ளைகள் இருக்கிறார்கள்”

பின் அறிஞர் கேட்டார். “உங்கள் வியாதிக்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா?”

முத்து பொறுமையை இழந்தார். “மருந்து கண்டுபிடிக்காத வியாதி எல்லாம் எனக்கு இல்லை..”

அறிஞர் + பகுதியில் எழுதினார். “கொடிய வியாதி இல்லை”

இப்படியே முத்து சிறிதும் எதிர்பார்த்திருக்காத கேள்விகள் சிலவற்றைக் கேட்டு + பகுதியில் எழுதிக் கொண்டு போன அறிஞர் ஒரு கட்டத்தில் நிறுத்தி விட்டுச் சொன்னார். “இவை எல்லாம் சாதாரண நன்மைகள் அல்ல. இவற்றில் ஒன்று இல்லா விட்டாலும் நரக வாழ்க்கை அனுபவிக்க நேர்வது நிச்சயம். அப்படிப்பட்ட நல்ல விஷயங்கள் எல்லாம் உங்கள் வாழ்க்கையில் உங்களுக்குத் தெரியாமலேயே இன்னும் நிறைய இருக்கின்றன....”

முத்து அங்கிருந்து போன போது புதிய மனிதராகப் போனார்.

- ஆசிரியர்

# இந்தியா நண்பனா? எதிரியா?
# தெளிவுபடுத்தக் கோருகிறார் மனோ

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் இந்திய அரசு நடந்துகொண்ட முறைமையை இலங்கை அரசாங்கம் போற்றுகிறதா? அல்லது தூற்றுகிறதா? என்றும், இந்தியா இலங்கையின் நண்பனா அல்லது எதிரியா என்றும் இலங்கை மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அமெரிக்க தீர்மானத்தின் கடுமையைக் குறைத்து இந்தியா செய்த உதவிக்கு, அரசாங்க அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பகிரங்கமாக நன்றி தெரிவித்துள்ளார். அதேவேளையில், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச ஆகியோர் இந்தியாவை கண்டித்து உள்ளனர்.

இது இந்தியா தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளே இருக்கும் இரண்டு முகங்களை காட்டுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் காண்பித்துக்கொண்டிருக்கின்ற இந்த இரண்டு முகங்களில் எது உண்மையானது என்பது தொடர்பிலும், இது சம்பந்தமாக இந்தியாவின் உண்மையான முகம் எது என்பது தொடர்பிலும் இன்று பாரிய கேள்விகள் எழுந்துள்ளன.

மனித உரிமை விசாரணைகள் தொடர்பில். இலங்கைக்கு நேரடியாக வருகை தருவதற்கு ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு உரித்துரிமை வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்த அமெரிக்கத் தீர்மான வாசகங்களை இந்திய அரசு மாற்றியமைத்தது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஏற்றுகொண்டுள்ளார்.

இதன்மூலம் இலங்கைக்கு இந்தியா செய்த உதவிக்காக அவர் பகிரங்கமாக இந்தியாவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.அதேவேளையில் மனித உரிமை ஆணைக்குழுவின் இந்திய பிரதிநிதி திலிப் சிங்ஹா ஆற்றிய உரை தொடர்பில், தனது கண்டனத்தை பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ வெளிட்டுள்ளார்.

யுத்தத்தின்போது நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக பொறுப்புக் கூறல் விடயங்களை பற்றி பேசி இந்தியா தம்மை ஏமாற்றிவிட்டது என அவர் கூறியுள்ளார். இவரது கருத்தையே வீரவன்ச, ரணவக்க ஆகிய அமைச்சர்களும் எதிரொலித்துள்ளனர். இந்த இரண்டு நிலைப்பாடுகளில் எது உண்மையானது என் இன்று தமிழ் மக்கள் மத்தியில் பெரும் கேள்விகள் எழுந்துள்ளன. அதே வேளையில் மனித உரிமை பேரவை தீர்மானம் தொடர்பில் இந்திய மத்திய அரசு முன்னெடுத்த உண்மையான கொள்கை எது என்பது பற்றியும் தமிழ் மக்கள் மத்தியில் கேள்விகள் எழுந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

## நீரிழிவு நோயின் தாக்கம் பொலநறுவையில் உச்சம்

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவோர் தொகை அதிகரித் துச் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பொலநறுவை மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற வருவோரின் தொகை அதிகரித்துச் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை வைத்தியசாலையில் நடத்தப்படும் நடமாடும் சேவையில் தினமும் 500 பேர் சிகிச்சைப் பெறுவதாக கூறப்பட்டுள்ளது. நீரிழிவு நோய்க்கு சிகிச்சை அளிக்க பொலநறுவை மாவட்டத்தில் விசேட பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓய்வூதியர் நம்பிக்கைநிதியம் புதிய நிர்வாகத் தெரிவு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு கடந்த 15 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் எம்.எக்ஸ் சர்வானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக எம்.எக்ஸ் சர்வாந்தன் செயலாளராக க.தேவராசா, பொருளாளராக சி.மன்மதராசா, உபதலைவராக பி.கே.இராசதுரை உப செயலாளராக சிவசுப்பிரமணியம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (104)

# வடக்கில் இந்திய வீட்டுத்திட்டம்; ஒருங்கிணைப்புச் செயலகம் யாழில்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கான இந்திய வீட்டுத்திட்டத்திற்குரிய ஒருங்கிணைந்த திட்டமிடல் செயலகம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைக் காரியாலயத்தில் இயங்கவுள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி முதல் இந்த திட்டமிடல் அலுவலகம் முழுமையாக அங்கு இயங்கவிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்திய வீட்டுத்திட்ட நிர்மானப் பணிகளுக்கான திட்டமிடல் செயலகம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் மேல்மாடியில் இயங்கி வரும் நிலையில் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கான திட்டமிடல் செயலகம் வவுனியாவில் இயங்கிவருவதாகவும் குறிப்பிட்ட அவர் அதனையே யாழ். திட்டமிடல் செயலகத்துடன் இணைந்து வடமாகாணத்திற்கான திட்டமிடல் செயலகம் இயங்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனவே, யாழ். பிரதான வீதி கச்சேரிப்பகுதியில் உள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கட்டடத்தில் முழுமையாக இந்த வடக்கிற்கான இந்திய வீட்டுத் திட்டமிடல் செயலகம் இயங்கவுள்ளது. வடமாகாணத்தில் இந்திய வீட்டுத்திட்டத்திற்கு பிரதேச செயலர் பிரிவு ரீதியாக சிபார்சு செய்யப்படும். பயனாளிகள் பட்டடியலில் இருந்து இறுதியான பயனாளிகள் பட்டியலை இந்தப்பிரிவு தெரிவு செய்வதுடன் அவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காக திட்டமிடல் ஆலோசனைகளை வழங்கிவருகின்றது என்றும் இது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கீழ் செயற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## இலவச மருத்துவ முகாம் புளியங்கூடலில் இன்று

(வேலணை)

தீவக அரிமாகக் கழகம் நடாத்தும் மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் மணிமண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்த மருத்துவ முகாமில் நீரிழிவு, இரத்த பரிசோதனை மருந்துகள் வழங்கலும் மற்றும் சகல நோய்களுக்கான பொது மருத்துவ பரிசோதனையும் அவற்றிற்கான மருந்துகள் வழங்கப்படும் முதியோரை கௌரவித்து அவர்களுக்கு புதிய புட வைகள் வழங்கல் சத்துணவுப்பானம் வழங்கல் என்பனவும் இடம் பெறும் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் மக்களுக்கு தென்கங்கன்றுகள் வழங்கலுடன், பொது இடங்களில் மரம் நாட்டி வைக்கும் நிகழ்வுகளும் இடம்பெறும் அத்துடன் மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் மதிய உணவும் வழங்கப்படவிருக்கின்றது. (05)

# இலங்கைத் தமிழரைப் பணயம் வைக்கும் தமிழக அரசியல் தலைவர்கள்

■ சங்கர சிவன்

இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறித் தமிழ்நாட்டில் இடம்பெறும் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் வரவேற்கும் இலங்கைத் தமிழ்த் தலைவர்களும், ஊடகங்களும் இவை இலங்கையில் தமிழ் மக்களின் அரசியலில் ஏற்படுத்தப்போகும் பாதிப்பை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

தமிழக மண்ணில் போராட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடுபவர்களில் ஒருவராவது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வை முன்வைத்து இந்திய அராசங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகிப்பதாக இல்லை. விசேடமாக மாணவர்களின் போராட்டங்கள் இலங்கை அரசாங்கத்துக்கும் ஆட்சியாளருக்கும் எதிரான கோஷங்களாகவே இருக்கின்றன. இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி இப்போராட்டங்களில் பேச்சே இல்லை. இவர்கள் இலங்கை மக்களின் பிரச்சினைகளைச் சரியான முறையில் விளங்கிக் கொண்டவர்களாகவோ இப்பிரச்சினையின் வரலாற்றை அறிந்தவர்களாகவோ இல்லை.

அறுபத்தைந்து வருடங்களாக இலங்கைத் தமிழினத்துக்குத் தலைமை வகித்தவர்கள் இனப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் சாதித்ததாகக் கூறுவதற்கு எதுவும் இல்லை. இவர்கள் ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொரு கோரிக்கையை முன் வைத்து மக்களை அணி திரட்டினார்கள். எந்தக் கோரிக்கையிலும் நிரந்தரமாக நிற்கவில்லை. கடைசியாகத் தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தினார்கள். இன்றைய தலைவர்கள் இப்போது எந்தக் கோரிக்கையையும் முன்வைக்க முடியாமல் தடுமாறுகின்றார்கள். தீர்வுக்கான கொள்கை இல்லாததால் தமிழ்நாட்டுப் போராட்டங்களை வரவேற்பதில் இவர்களுக்குச் சிரமம் இருக்கவில்லை.

அறுபத்தைந்து வருட காலத்தில் இனப்பிரச்சினை நாளுக்கு நாள் வளர்ந்திருக்கின்றதேயொழியத் தீர்வை நோக்கி நகரவில்லை. இந்த நிலைமைக்குத் தமிழ்த் தலைவர்களின் தவறுகள் பிரதான காரணமாக உள்ளபோதிலும் இவர்கள் கெட்டித்தனமாகச் சிங்கள அரசாங்கங்களின் மீது பொறுப்பைச் சுமத்தித் தப்பித்துவிடுகின்றார்கள். இத்தலைவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையிலேயே இன்று தமிழ் நாட்டில் சிங்கள அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் நடக்கிறது. இது இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கு ஆதரவான போராட்டமல்ல.

இந்தப் பின்னணியிலேயே தமிழகத் தலைவர்களின் வீரப் பிரதாபங்களையும் சண்டித்தனங்களையும் பார்க்க வேண்டியுள்ளது. சாதாரண சிங்கள மக்களுக்கும் புத்தபிக்குமாருக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் முதல், மாணவர்களின் உணர்ச்சி கொந்தளிக்கும் போராட்டங்கள் வரை முக்கியமான தலைவர்களின் பின்னணி ஆதரவு இல்லாமல் நடப்பதற்கு வாய்ப்பில்லை. வன்முறைத் தாக்குதல்களைக்கண்டிப்பதற்கு எந்தவொரு பிரதான் தலைவரும் முன்வராததிலிருந்து வன்முறையாளர்களுக்கு இத்தலைவர்களின் ஆதரவும் வழிகாட்டலும் இருப்பது தெளிவாகின்றது.

வைகோ, திருமாவளவன், சீமான், நெடுமாறன் என்ற பட்டியலில் இப்போது கருணாநிதியும் சேர்ந்திருக்கின்றார். இவர்கள் எல்லோரும் இலங்கையில் தமிழ் மக்களுக்குத் தனிநாடு அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துபவர்கள். எனவே, இவர்களுடைய சீடர்களின் வன்முறையும் போராட்டமும் தனிநாட்டு இலக்கைக் கொண்டிருப்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இலங்கையில் தனிநாடு அமைப்பதற்காக நடந்த போராட்டம் முப்பது வருட காலத்தில் இலட்சக்கணக்கான தமிழ் மக்களைப் பலியெடுத்துத் தோற்றுவிட்டது. இப்போது இலங்கைத் தமிழ் மக்கள் தனிநாடு என்ற கருத்துருவத்துக்கு அப்பால் வெகுதூரம் சென்று விட்டார்கள். புலிகள் தோல்வியடையும் வரை தனிநாட்டு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் தனிநாடு பற்றிப் பேசுவதற்குத் தயங்குகின்றார்கள். நடைமுறைச் சாத்தியமற்ற




தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து ஒரு போராட்டத்தை நடத்துவதற்கு இன்று இலங்கையில் எவரும் தயாராக இல்லை. தமிழ்த் தலைவர்களும் தயாராக இல்லை. இளைஞர்களும் தயாராக இல்லை. மக்களும் தயாராக இல்லை. ஆனால், தமிழகத் தலைவர்கள் தமிழீழத்துக்காகப் போராடப்போவதாக ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு சொல்கின்றார்கள். இதனிலும் பார்க்க வேடிக்கையான கூற்று வேறெதுவும் இருக்க முடியாது.

இலங்கையில் தனிநாடு அமைப்பதென்பது அவ்வளவு லேசுப்பட்ட விடயமல்ல. இன்றைய நிலையில் சாத்தியமானதுமல்ல. அப்படியிருக்க, தமிழக மண்ணில் நின்று கொண்டே இலங்கையில் தமிழீழம் அமைக்கப் போவதாகக் கூறும் தமிழகத் தலைவர்கள் அதை எப்படிச் சாதிப்பார்கள் என்பதைக் குறைந்தபட்சம் தமிழ்நாட்டு மக்களுக்காவது தெளிவுபடுத்த வேண்டும். இவர்கள் இலங்கைக்கு வந்து தனிநாட்டுப் போராட்டமொன்றுக்குத் தலைமை தாங்குவதென்பது நடக்க முடியாதது. இத்தலைவர்களிடமும் அவ்வாறான எதிர்பார்ப்பு இல்லை. எப்படித்தான் இவர்கள் இலங்கையில் தனிநாடு அமைக்கப் போகின்றார்கள்? இவர்களுடைய கோரிக்கையை ஏற்று இலங்கை மீது படையெடுத்து வந்து தனிநாடு அமைத்துக் கொடுப்பதற்கு உலகின் எந்தவொரு நாடும் முன்வரப் போவதில்லை. தமிழகக்கூரையில் ஏறி நின்று தமிழீழம் என்று தாங்கள் எவ்வளவுதான் கொக்கரித்தாலும் இலங்கையில் எதுவும் நடக்கப்போவதில்லை என்று இத்தலைவர்களுக்கு நன்றாகவே தெரியும். தெரிந்திருந்தும் தமிழீழப் பிரச்சினையை ஏன் கிளப்புகின்றார்கள் என்ற கேள்வி பலரிடம் எழலாம்.

**நடைமுறைச் சாத்தியமற்ற தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து ஒரு போராட்டத்தை நடத்துவதற்கு இன்று இலங்கையில் எவரும் தயாராக இல்லை. தமிழ்த் தலைவர்களும் தயாராக இல்லை. இளைஞர்களும் தயாராக இல்லை. மக்களும் தயாராக இல்லை. ஆனால், தமிழகத் தலைவர்கள் தமிழீழத்துக்காகப் போராடப் போவதாக ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு சொல்கின்றார்கள். இலங்கையில் தனிநாடு அமைப்பதென்பது சாத்தியமானதல்ல. அப்படியிருக்க, தமிழக மண்ணில் நின்று கொண்டே இலங்கையில் தமிழீழம் அமைக்கப்போவதாகக் கூறும் தமிழகத் தலைவர்கள் அதை எப்படிச் சாதிப்பார்கள் என்பதைக் குறைந்தபட்சம் தமிழ்நாட்டு மக்களுக்காவது தெளிவுபடுத்த வேண்டும்.**

இந்தியாவில் அடுத்த வருடம் மக்களவைக்கான (லோக்சபா) தேர்தல் நடக்கவிருக்கின்றது. அந்தத் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கான தயாரிப்பு தான் இலங்கையில் தனிநாடு என்ற கோஷம். தமிழக மக்கள் எண்ணற்ற சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றார்கள். நாளாந்த வாழ்க்கையில் தமிழக மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைத் தேர்தலில் பேசுபொருள் ஆக்குவதற்குக் கருணாநிதியோ, வைகோவோ, சீமானோ, திருமாவளவனோ விரும்புவதில்லை. மக்களின் பிரச்சினைகளைத் தேர்தலில் பேசுபொருள் ஆக்குவதானால், அப்பிரச்சினைகள் தொடர்பான வாக்குறுதிகளை வழங்கவேண்டும். அந்த வாக்குறுதிகளைச் செயற்படுத்தவும் வேண்டும். இலங்கைப் பிரச்சினை தொடர்பான உணர்ச்சி அலையொன்றைத் தோற்றுவித்து அதையே தேர்தலின் பிரதான பேசுபொருள் ஆக்கினால் வாக்குறுதியை நடைமுறைப்படுத்தும் சிரமம் இருக்காது. இது இலங்கைத் தமிழ் மக்களின் நலனில் கொண்டுள்ள அக்கறையின் வெளிப்பாடல்ல. தமிழகத் தலைவர்கள் தங்கள் சொந்த அரசியல் தேவைகளுக்காக இலங்கைத் தமிழ் மக்களைப் பணயம் வைக்கின்றார்கள்.

இலங்கைத் தமிழ் மக்களின் நலனில் உண்மையாகவே இத்தலைவர்களுக்கு அக்கறை உண்டென்றால், இப்போது தமிழகத்தில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் அந்த அக்கறையைக் காட்டலாம். அம்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிக்கலாம். அப்படியான செயற்பாடுகளுக்கு இத்தலைவர்களுக்கு நேரமில்லை. இலங்கைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தான் இவர்களுக்கு அக்கறையென்றால் நடைமுறைச் சாத்தியமற்ற தனிநாட்டுக் கோஷத்தை தமிழக மண்ணில் நின்று தூக்கிப் பிடிக்காமல் சரியான தடத்தில் முயற்சிக்கலாம். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகிக்கக்கூடிய செயற்பாடுகளை முன்னெடுக்கலாம். அதுதான் இலங்கைத் தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள உண்மையான அக்கறையாக இருக்கும்.

தமிழகத் தலைவர்களின் இன்றைய செயற்பாடுகள் இலங்கைத் தமிழ் மக்களின் நலனுக்குக் குந்தகமான விளைவையே ஏற்படுத்தக் கூடியன. இத்தலைவர்கள் தனி நாட்டுக் கோஷத்தைத் தமிழக மண்ணில் நின்று உரத்து ஒலிக்கின்றார்கள். பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்க வேண்டும் என்று கோரி வரும் பேரினவாதிகளின் வாய்க்கு இது தீனிபோடுகின்றது. தமிழ்த் தலைவர்களின் உண்மையான நோக்கம் தனி நாடு அமைப்பது தான் என்ற பேரினவாதப் பிரசாரத்துக்குத் தமிழகத்தலைவர்கள் வாய்ப்பு அளிக்கின்றார்கள். இந்த நிலை இலங்கையில் அரசியல் தீர்வு முயற்சியை எவ்வளவுக்குப் பலவீனப்படுத்தும் என்பதையிட்டு இத்தலைவர்களுக்குச் சிறிதளவேனும் அக்கறை இல்லை.

தமிழகத் தலைவர்கள் தங்கள் சுய அரசியல் தேவைகளுக்காக அங்குள்ள மக்களை உணர்ச்சிவசப்படுத்துவது போலவே இங்குள்ள தமிழ்த் தலைவர்களும், தமிழக நிலைமையைக் காட்டி மக்களை உணர்ச்சிவசப்படுத்துகின்றார்கள். அரசியல் தீர்வு முயற்சிக்கு இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளையிட்டு இவர்களுக்கு அக்கறை இல்லை. அரசியல் தீர்வு எக்கேடுகெட்டாலும் சாகும்வரை நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தால் போதும் என்பது இவர்களின் நிலைப்பாடு. ●

## இனியும் தாமதம் வேண்டாம் இந்திய உறவில் மாற்றம் வேண்டும்

### கர்ச்சிக்கிறார் சம்பிக்க

(கொழும்பு)

இந்தியா தொடர்பான இலங்கையின் கொள்கைகளை மாற்றியமைக்கும் காலம் வந்துவிட்டது.

இந்தியா தொடர்பான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்று அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இந்தியா, இலங்கைக்கு எதிராக வாக்களித்த நிலையில், இலங்கை தமது கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்காலத்தில் தமிழகத்துடனான தொடர்புகள் அனைத்தையும் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சுயாதீன விசாரணை வேண்டும் பிரித்தானிய தொழிற்கட்சி விடாப்பிடி

(கொழும்பு)

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென பிரித்தானிய நிழல் வெளிவிவகார செயலாளர் டக்ளஸ் அலக்சான்டர் தெரிவித்துள்ளார்.

அலக்சான்டர் பிரிததானிய தொழிற் கட்சியின் நாடாளுமனற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தில் நண்பர்களையும் சொந்தங்களையும் இழந்த அனைத்து தரப்பினரும் அமைதியான முறையில் முன்னேற வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிக்குமாறு இலங்கையை பிரித்தானியா வலியுறுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை இதற்கான கருவியாக பிரித்தானிய அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால் படுகொலையை ருவாண்டா படுகொலையுடன் ஒப்பிடுவதா



### கேள்வி எழுப்புகிறார் டலஸ்

(கொழும்பு)

முள்ளிவாய்க்காலை ருவாண்டா படுகொலையுடன் ஒப்பிட முடியாது. தற்கொலைக் குண்டுதாரிகள் மூலம் நாட்டின் ஸ்திரத்தன்மையைச் சீர்குலைக்க எடுக்கப்பட்ட முயற்சிகளை முறியடித்து இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

இதனை ருவாண்டாவில் நடந்த மக்கள் படுகொலைகளுடன் ஒப்பிட்டுப் பேசுவது நியாயமற்றது என்று இலங்கை அரசாங்கத்தின் மூத்த அமைச்சர் டலஸ் அலகப்பெரும ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். முப்பது ஆண்டு கால யுத்தத்திலிருந்து மீண்டு இருக்கின்ற இலங்கையின் மீது ஐ.நா.வின் மனித உரிமைகள் கவுன்சில் தேவையற்ற அழுத்தங்களைக் கொடுப்பதாகவும் இலங்கை அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறது.

ஆனால் இலங்கை அரசாங்கம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சர்வதேசத்துக்கு கொடுத்த வாக்குறுதிகளையே சர்வதேச சமூகம் நிறைவேற்றக்கேட்கிறது என்று நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

போர் முடிந்து ஒரு மாத காலத்தில் ஐ.நா. தலைமைச் செயலர் பான்கி மூன் இலங்கை வந்தபோது, பல வாக்குறுதிகளை அளிக்கும் கூட்டறிக்கையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஐ.நா. தலைமைச் செயலரும் கைச்சாத்திட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் தீர்வுத்திட்டத்தை வழங்குவதற்கும் நாட்டில் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டிருந்தால் அவை குறித்து விசாரிப்பதற்கு பொறிமுறை ஒன்றை அமைப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ அப்போது வாக்குறுதி அளித்திருந்ததாகவும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்த இந்தியாவுக்கு எதிராக நாட்டில் கருத்துக்களை வளர்ப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் அரசாங்கம் கேட்டுகொண்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் அசௌகரியங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டுமென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதாகவும் அமைச்சர் டலஸ அலகப்பெரும ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் வரலாற்று ரீதியான உறவுகளில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்றும் இலங்கை அரசாங்கம் கூறுகிறது.

## என்றும் இல்லாத அவமானம் எமது தாய்நாட்டுக்கு இன்று

(கொழும்பு)



வரலாற்றில் என்றும் இல்லாத மாபெரும் அவமானம் இன்று இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. மஹாவம்ச வரலாற்றில் இலங்கை என்றும் எதிர்நோக்காத அவமானத்தையும், சிக்கலையும் தற்போது எதிர்நோக்கி இருப்பதாக எதிர்கடசித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மனிதஉரிமைகள் மாநாட்டில் இலங்கை எதிர்நோக்கிய நெருக்கடி தொடர்பில் அவர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார். இந்த நெருக்கடிக்குத் தீர்வும் தம்மிடம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் உண்மையான அடையாளத்தை அமுலாக்குவதன் ஊடாகவே இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்றும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

## கனவுபோல் அனைத்தையும் மறப்போம் கைகோர்த்து புதுவாழ்வு தொடங்குவோம்

### கல்லடியில் முழக்கம்



(கொழும்பு)

எல்லாவற்றையும் மறந்து அபிவிருத்திப் பாதையில் நாமனைவரும் இன, மத, பேதமின்றிக் கைகோர்த்து ஒற்றுமையாக நடைபோடவேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மட்டககளப்பு கல்லடி புதிய பாலத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை நாட்டில் மட்டக்களப்பு மாவட்டம் பல பின்ன டைவுகளை சந்தித்த ஒரு மாவட்ட மாகும். கடந்த 30 வருட கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டது மாத்திரமல்லாமல் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய சுனாமி அனர்த்தத்தினாலும் கடுமையாக பாதிக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டு இந்நாட் டில் நான் பிரதமராக இருந்த காலம். அப்போது நான் சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டத்தை நேரில் வந்து பார்வையிட்டேன். அப்போது கடுமையான பின்னடைவுகளைக் கொண்டிருந்த இந்த மாவட்டம் இப்போது பல்வேறு அபிவிருத்திப் பணிகளைக் கண்டு வருகின்றது.

ஆகவே, இவ்வாறான சூழ் நிலையில் நாமெல்லோரும் இன, மத பாகுபாடின்றி எமது மாவட்டத்தை மேலும் பல அபிவிருத்தியின் பால் இட்டுச் செல்வதற்கு ஒற்றுமைப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மிகக் குறுகிய காலத்தில் இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகளை முடித்த ஊழியர் களுக்கும் இதற்கு எமக்கு நட்புறவுப்பாலமாக இருந்து உதவி வழங்கிய ஜப்பான் நாட்டிற்கும் இத்தருணத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## தமிழக ஆர்ப்பாட்டங்கள் வர்த்தக உறவைப் பாதிக்குமா?

(கொழும்பு)

சென்னையில் பௌத்த பிக்குகள் மீது தாக்குதல், மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள், நடிகர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்றவை அவசியமற்றது என த ஹிந்து செய்தித்தாள் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் இந்தியன் ப்ரிமியர் லீக் போட்டிகளில் இலங்கை வீரர்களை இணைத்துக் கொள்வது குறித்தும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழக ஆளும் கட்சி உட்பட பல கட்சிகளும் இலங்கைக்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் இந்தியா மற்றும் இலங்கைக்கிடையேயான வர்த்தக உறவு, குறிப்பாக கடந்த 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கைச்சாத்தான சுதந்திர ஒப்பந் தம் குறித்து இவர்கள் சிந்திக்கவில்லை என த ஹிந்து செய்தித்தாள் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையினால் வெளி யிடப்பட்டுள்ள புள்ளி விபரங்களுக்கு அமைய 2011 ஆம் ஆண்டில் 48 ஆயிரத்து 500 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தகம் இரணடு நாடுகளுக்கும் இடையில் இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இந்த வர்த்தக ஒப்பந்தத்தின் ஊடாக இரண்டு நாடுகளும் பொருளாதார ரீதியாக தொடர்ந்தும் முன்னேறி வருகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் சில தரப்பினர் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## அமெரிக்க தீர்மானத்தை 22 நாடுகள் வெறுக்கின்றன



(கொழும்பு)

இலங்கை தொடர்பான வாக்கெடுப்பின்போது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் விரிசல் ஏற்பட்டதாக ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரிதிநிதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணைக்கு எதிராக 13 நாடுகள் வாக்களித்தமை, எட்டு நாடுகள் வாக்களிக்காமை மற்றும் ஒரு நாடு வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமை என்பன இந்த விடயத்தை உறுதிப்படுத்துவதாக அநத அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிககும் 47 நாடுகளில் 22 நாடுகள் அமெரிக்க பிரேரணைக்கு எதிரான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்ததாகவும் அதில் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை 22 நாடுகள் புரிந்து கொண்டுள்ளதாகவும் இலங்கையின் விசேட பிரதிநிதி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணை அநீதியான அநாவசியமான ஒன்று என்பதையே வாக்கெடுப்பின் முடிவு உறுதிப்படுத்துவதாக அமைச்சரை மேற்கோள்காட்டி ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர பிரதிநிதி அலுவலகம் தெரிவித்துள்ளது.




ஈரானின் கடற்படையினருக்கு சொந்தமான இரண்டு யுத்தக் கப்பல்கள் தற்போது கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன. கடற்படைப் பயிற்சி பெறுகின்றவர்களை இந்தக் கப்பல் அழைத்து வந்துள்ளது. "கஹாக்" மற்றும் "சபலான்" ஆகிய இரண்டு கப்பல்களே இவ்வாறு கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளன.

# பழைய சாரதிப்பத்திரங்களுக்குப் பதிலாக

# புதிய ஸ்மாட்காட் அனுமதிப்பத்திரம்

(யாழ்ப்பாணம்)

பழைய சாரதி அனுமதிப் பத்திரங்களை புதிய ஸ்மாட் காட் சாரதி அனுமதிப்பத்திரங்களாக மாற்றிக் கொள்ள முடியும் என மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த விசேட வசதிகளை மார்ச் முதலாம் திகதியிலிருந்து வழங்கிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 2005 ஜனவரி தொடக்கம் 2009 செப்டம்பர் வரை பெறப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்களை யாழ்.செயலக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினூடாக மாற்றிக் கொள்ள முடியும் என்றும், 4 புகைப்படம், மருத்துவச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரப்பிரதி, தேசிய அடையாள அட்டைப் பிரதி என்பவற்றுடன் சாரதி அனுமதிப் பாத்திரத்தையும் 2013.03.01 முதல் 2013.08.31 வரை சமர்ப்பித்து புதிய ஸ்மாட் காட் சாரதி அனுமத்திப்பத்திரத்தை பெற முடியும் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள அதிகாரி ஹரிகரன் தெரிவித்தார்.

இதுதவிர 2000ஆம் ஆண்டுக்கு முன்னர் மற்றும் 2000ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2004 டிசம்பர் வரையான அனுமதிப் பத்திரங்களை பரிசோதிப்பதற்கான வசதிகள் யாழ்.செயலகத்தில் இல்லாமையால் இவ்வசதியுள்ள வேரஹெர, குருநாகல், கம் பஹா, ஹம்பாற்தோட்டை மற் றும் அனுராதபுர மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள அலுவலகங்களில் உள்ள விசேட கரும பீடத்தில் 2013.09.13 முதல் 2014.09.30 வரை இச்சேவையினைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது சம்மந்தமான அறிவித்தலை யாழ்.செயலகத்தில் காணமுடியும் அல்லது 011 2694331, 011 2694332 (தலைமை அலுவலகம்) என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது. (இ)

# விஞ்ஞான எண்ணக்கரு, பிரயோக போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(அச்சுவேலி)

ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் விஞ்ஞான எண்ணக்கருக்களையும், அவற்றின் பிரயோகங்களையும் தொடர்புபடுத்துதல் தொடர்பான அறிவை விருத்தி செய்யும் வகையில் அவற்றுடன் தொடர்புடைய நிகழ்வுகள், பிரயோகங்களை தொடர்புபடுத்தும் திறன் தொடர்பான ஆர்வத்தையும், விருப்பத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் மத்திய கல்வி அமைச்சின் அனுமதியுடன் இலங்கை அடிப்படை கற்கைகளுக்கான நிறுவகம் நடாத்தும் போட்டிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் போட்டிகள் ஆசிரியர்கள், மாணவர்கள் என இரு பிரிவுகளாக நடாத்தப்படுவதுடன் ஆசிரியர்களுக்கான பிரிவிற்குரிய ஆக்கங்கள் தரம் 6 முதல் 11 வரையான பாடத்திட்டத்திற்கமைவாக மாணவர்களிடையே விஞ்ஞான எண்ணக்கருக்கள் தொடர்பான ஆர்வத்தையும், விருப்பத்தையும் ஏற்படுத்துவதாக அமைவதோடு விஞ்ஞான எண்ணக்கருக்கள் தொடர்பான தெளிவான விளக்கத்தையும் வழங்கக்கூடிய கவிதை அல்லது விளையாட்டு அல்லது 5 நிமிடங்களுக்கு மேற்படாத ஒளிப்படமாக இருக்கவேண்டும், மாணவர்களின் ஆக்கங்கள் நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புடைய இயற்கையான அல்லது செயற்கையான நிகழ்வுகளையும், அவற்றுடன் தொடர்பான விஞ்ஞான எண்ணக்கருக்களையும் இனங்கண்டு நாளொன்றிற்கு ஒரு நிகழ்வுப்படி 30 நாட்களுக்கு மொத்தம் 30 நிகழ்வுகள் இனங்காணப்பட்டு அவை ஒவ்வொன்றும் நிகழும் இடம், நேரம், திகதி என்பவற்றையும் குறிப்பிட்டு ஒரு கோப்பாகவும் அமைய வேண்டும். மாணவர்களுக்கான போட்டிகள் அவர்கள் கற்கும் தரங்களிற்கமைய 06 உபபிரிவுகளைக் கொண்டதாகவும் அமையும்.

இவ் ஆக்கங்கள் அவர்களது சொந்த ஆக்கம் என அதிபரின் உறுதிப்படுத்தலுடன் 02.05.2013 தினத்திற்கு முன்னதாக கலாநிதி குமாரி திலகரட்ன, இணைப்பதிகாரி, விஞ்ஞான செயற்றிட்டப் பிரிவு , அடிப்படை கற்கைகளுக்கான நிறுவனம், இந்தான வீதி, கண்டி. என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்களை www.ifs.ac.lk என்ற இணையத்தள முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.(03)

# மின்தடை அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும்,

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரையும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப்பகுதி, ஸ்ரான்லி வீதி, முடமாவடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, பாற்பண்ணைப் பிரதேசம், அச்சுவேலிப் பிரதேசத்தின் இடைக்காடு, தம்பாலைப் பிரதேசங்கள், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஊரெழு, ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு ஆகிய இடங்களிலும் முற்பகல் 10.00 மணியிலிருந்து 12.00 மணிவரையும், பளை, விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில், உசன், வரணி, கொடிகாமம், மீசாலை, அல்லாரை ஆகிய இடங்களிலும்

26.03.2013 செவ்வாய்க் கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரையும் குஞ்சர்கடையின் ஒருபகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, உடுப்பிட்டி, சங்கரத்தை, அராலிதெற்கு, வடக்கு, கிழக்கு, மத்தி, யாழ்ப்பாணக் கல்லூரிப் பிரதேசம், வட்டு பொலிஸ் நிலையப் பகுதி, பளை, விடத்தற்பளை, கெற்பலி, மிருசுவில், உசன், வரணி, கொடிகாமம், மீசாலை, அல்லாரை ஆகிய இடங்களிலும்

27.03.2013 புதன் கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரையும் மாலுச்சந்தி முதல் இரும்பு மதவடி மடத்தடி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும். மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

## நஞ்சருந்தியவர் சடலமாக மீட்பு

(கல்வயல்)

சாவகச்சேரி சங்கத்தானை சாரதா லேன் பகுதியில் நஞ்சருந்தி மரணமடைந்த நிலையில் 30வயதுடைய, முத்துராசா முகுந்தன் என்ற இளைஞன் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணிக்கு மீட்கப்பட்டுள்ளார். மாற்றுவலுவுள்ளவரான இவ் இளைஞன் வீட்டில் தனிமையில் இருந்த வேளை இச்சம்பவம் இடம் பெற்தாக தெரியவருகின்றது. (43)



லயஞானபூபதி மிருதங்க கலாகீர்த்தி பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா அவர்களின் இசை அர்ச்சனை, குழுவினரின் சிவராத்திரி இசை நிகழ்ச்சி சிவராத்திரி தினத்தன்று பம்பலபிட்டி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

# செய்யுள்



மூலபாரதி

## விடிவு தோன்ற!

ஆழ்கடல் தொழில் அரசால் அனுமதி
அதனொடு 'பாஸ்' நடைமுறை ரத்தும்;
மூழ்கிட வைக்கும் கடற்றொழிலாளரை!
மகிழ்ச்சி தன்னில் மறுப்பதற்கிலை!

தமிழக இழுவைப் படகுகள் செய்யும்
தப்பிலி தொழில் முறைதன் தாலோ;
அமிழ்வ தையுமார் அறியப் போறார்
அனைத்து வளமும் அள்ளிச் செல்வார்!

இழுத்துப் போனதாம் வெறுங்கடல் தன்னை
இவரும் சென்றாம் இலவுகாத் திடப்போம்;
வெளுக்கும் எம்மவர் வாழ்வு தோன்ற
வடக்கர் எப்போ வழிக்கு வருவர்?

# முரசின் இன்றைய பலன்

(24.03.2013 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி 11 ஆம் திகதி. நட்சத்திரம் ஆயிலியம். முற்பகல் 09.24 திதி துவாதசி. பிற்பகல் 04.53 வரை. இராகுகாலம் 04.45 - 06.15 வரை. சுபநேரம் 09.15 - 10.45 வரை. மரணயோகம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அதிகவேலை. திட்டமுடன் செயல்பட்டால் நன்மை. தொழிலில் மாற்றங்கள். வரவை விட கூடுதல் செலவு. போட்ட திட்டத்தில் மாறுதல். உடல்நலத்தில் கவனம். பக்தி ஈடுபாடு. |
| ரிஷபம் | நம்பிக்கையும், புத்துணர்வும். தொழிலில், போட்டி, பொறாமை குறையும். சராசரி பணவரவு. உடல் நலம் சீர். செயல்களில் ஊக்கம். புத்திரரால் மகிழ்ச்சி. திடமாவீர்கள். |
| மிதுனம் | எதிர்ப்புகளை வெல்லும் உத்வேகம். கேட்டவர்க்கு உதவுவீர்கள். தொழில் வளர்ச்சி. இலாபம், உபரி பணவரவு. பிணி தீரும். தம்பதியர் அன்யோன்யம். வழக்கு அனுகூல பலன். |
| கடகம் | முன்னேற்பாட்டு முயற்சிகள். தொழில் வளர்ச்சி. விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு. தாராள பணவரவு. நன்மைகள் வந்து சேரும். தம்பதியர் அன்யோன்யம். மனதில் நம்பிக்கை. |
| சிம்மம் | சிறு சிரமங்கள் இருக்கும். உழைப்பில் கவலை மறக்கலாம். தொழிலில் முழு ஈடுபாடு. பணவரவில் தாமதம். பணியிடத்தில் நன்மதிப்பு. சீரான ஓய்வு உடல் நலம் காக்கும். |
| கன்னி | புதிர் இருக்கும். இன்பமும், துன்பமும் உங்களுடனேயே. தொழில் முன்னேற்றம். உபரி வருமானம். தாய்வழி உறவில் அனுகூலம். பொன், பொருள் சேர்க்கை. யோகமான நாள். |
| துலாம் | ஏமாற்றம் வரும். பேச்சை குறைக்கவும். கடும் உழைப்பு. வரவை விட செலவு. போக்குவரத்தில் கவனம். எவருக்காகவும் பொறுப்புகள் ஏற்க வேண்டாம். புத்திரரால் நற்செய்தி. |
| விருச்சிகம் | பிறர் ஆலோசனைகள் உதவும். பணியில் தொந்தரவு வரலாம். திட்டமிட்டதை சாதிப்பீர்கள். தாராள பணவரவு. கடன் தீரும். குடும்ப ஆதரவு நம்பிக்கை தரும். மேன்மை நாள். |
| தனுசு | அன்பும் கருணையும் மிகும். தாய்வழி உறவினருக்கு உதவி. தொழிலில் இருந்த தடை நீங்கும். எதிர்மறையாக நடந்தவர் வருந்துவர். புத்திரர் வளர்ச்சியில் மகிழ்ச்சி. விருந்து. |
| மகரம் | சந்தோஷத்தின் வெளிப்பாடு செயல்களில். சூழ்ந்தவர்க்கு உதவி புரிவீர்கள். பாராட்டு குவியும். தொழிலில் வளர்ச்சி. பணவரவில் திருப்தி. சொத்து சேர்க்கை. ஓய்வும் மகிழ்வும். |
| கும்பம் | புதியசிந்தனைகள். பிறர் தொந்தரவுகள் குறையும். தொழிலில் கூடுதல் மூலதனம். சென்ற பணம் வரும். மருத்துவ பரிசோதனை. வெளியூரிலிருந்து நற்செய்தி. அமைதி நாள். |
| மீனம் | போட்டி, பந்தயங்களில் ஈடுபடக்கூடாது. செலவு. தொழிலில் கூடுதல் ஆர்வம் தேவை. சராசரி பணவரவு. கண்களின் பாதுகாப்பில் கவனம். பயண மாறுதல். குடும்பத்தினரால் பெருமை. |

# வடக்கின் போர் ஒரு நாள் ஆட்டம் மத்திய கல்லூரி அபார வெற்றி





படப்பிடிப்பு : சுரேஷ்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் போர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 34 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்கும், யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் இடையில் வடக்கின் போர் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டித் தொடரின் 11ஆவது ஒரு நாள் போட்டி நேற்று சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஏற்கனவே, இரு கல்லூரி அணிகளும் தலா ஐந்து வெற்றிகளைப் பதிவாக்கி சமநிலையில் இருந்தமையால் இப்போட்டி இரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது.ஒரு ஓட்டத்தைப்பெற்ற நிலையில் முதலாவது விக்கெட்டை இழந்து யாழ். மத்திய கல்லூரி அணி தடுமாறியது. இந்நிலையில் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த அலன் டிலான், நிரோச் இணை அணியின் நிலையை உணர்ந்து மிகவும் பொறுமையாகவும், அதிரடியாகவும் ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஜோடி 76 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த வீரர்கள் தங்கள் பங்கிற்கு சராசரியான ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 47 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டர்வின் 39, நிரோச் 38, அலன் டிலான் 37, நிரோஜன் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரிசங்கர் மூன்று, லோகதீஸ்வர், கானாமிர்தன் தலா இரண்டு



ஆட்டநாயகன் விருது பெறும் ஹரிகரன்

விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 209 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்கு ஹரிகரனின் பந்து வீச்சு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இதன் காரணமாக முதல் மூன்று விக்கெட்டுக்களையும் 13 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது.

இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த துவாரகசீலன், சயன் இணை மிகவும் நிதானமாக, மத்திய கல்லூரி அணியின் பந்து வீச்சை எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவித்ததுடன், சென்.ஜோண்ஸ் அணிக்கு சிறந்த அடித்தளத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது. இந்த இணை 52 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் துவாரகசீலனின் விக்கெட் சாய்க்கப்பட்டது. தொடர்ந்து சயனின் விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் அமிர்தயன், கவாஸ்கர் இணை போட்டியை தமது அணிக்கு சாதகமாக்கி ஓட்டங்களைக் குவித்தனர். அத்துடன் இந்த ஜோடியின் ஆட்டம் போட்டியின் திருப்புமுனையாகவும் அமைந்தது.

இந்த ஜோடியைப் பிரிக்க யாழ். மத்திய கல்லூரி அணியால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், ஒரு வழியாக 75 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை சௌமிதரனால் இந்த ஜோடி பிரிக்கப்பட்டதுடன் மத்திய கல்லூரியின் வெற்றிவாய்ப்பு மெல்ல மெல்லவலுப் பெறத்தொடங்கியது.தொடர்ந்து களமிறங்கிய எவரும் நிலைத்துநின்று ஆட முற்படாததுடன் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்துச் சென்றனர். இறுதியில் சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி 44.2 ஓவர்கள்நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 34 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.துடுப்பாட்டத்தில்துவாரகசீலன் 25, சயன் 38, அமிர்தயன் 38, கவாஸ்கர் 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிகரன் நான்கு, சௌமிதரன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஹரிகரன் தெரிவானார். இப்போட்டி நிகழ்வில் இரு பாடசாலைக்கல்லூரி அதிபர்களான அருட்பணிவண ஞானப் பொன்ராசா, எழில்வேந்தன் மற்றும் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்தஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள்,விளையாட்டுஆர்வலர்கள்எனப் பலர் கலந்து கொண்டனர். இப்போட்டிக்கு ஜனசக்தி மற்றும் சக்தி எவ்.எம். ஆகிய நிறுவனங்கள்அனுசரணைவழங்கியமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., 42)



## முன்பள்ளி விளையாட்டு

டேனியா மழலைகள் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளித் தலைவர் சு. பரமேஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கி கிளையின் முகாமையாளர் கே. சண்முகலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். இப்போட்டி நிகழ்வில் சிறார்களின் பெற்றோர் மற்றும் கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு சிறார்களுக்கு உற்சாகமூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (43)

## சமநிலையில் நிறைவுடைந்த இஸ்ரேல், போர்த்துக்கல் ஆட்டம்

(டெல் அவிவ்)

இஸ்ரேல், போர்த்துக்கல் அணிகள் மோதிய உலக கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டி 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையானது. பிரேசிலில், வரும் 2014ஆம் ஆண்டு பிபா உலக கோப்பை கால்பந்து தொடர் நடைபெறவுள்ளது. இதில் மொத்தம் 32 அணிகள் பங்கேற்கவுள்ளன. தொடரை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் பிரேசில் அணி நேரடியாக தகுதி பெற்றது. மீதமுள்ள 31 இடங்களுக்கு ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா என கண்டங்கள் அடிப்படையில் தகுதிச் சுற்றுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஐரோப்பியக்கண்டத்தில் நடக்கும் தகுதிச் சுற்றுப் போட்டியில் மொத்தம் 53 அணிகள் பங்கேற்கின்றன. இதில் இருந்து 13 அணிகள் உலக கோப்பை தொடருக்கு தகுதி பெறும். இந்த 53 அணிகள் 9 பிரிவு-களாக முதல் சுற்றில் விளையாடுகின்றன. 'எப்' பிரிவில் நடந்த போட்டியில் போர்த்துக்கல், இஸ்ரேல் அணிகள் மோதின. இப்போட்டி ஆட்டநேர முடிவில் 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையானது.

## லயனிடம் திணறும் இந்தியா



(புதுடில்லி)

நதன் லயனின் சுழற்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இந்திய அணி தடுமாறி வருகின்றது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி டில்லியில் நடைபெற்று வருகின்றது.

இதில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. பின்வரிசையில் களமிறங்கிய பீற்றர் சிடில், பட்டின்சன் இணை மிகவும் சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருந்தது. ஒன்பதாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 54 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பீற்றர்சிடில் 136 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 51, பட்டின்சன் 91 பந்துகளை எதிர்கொண்டு 30, ஹியூஸ் 46, எஸ்.ஸ்மித் 46 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஸ்வின் ஐந்து, ஜடேஜா, இசாந் சர்மா தலா இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இந்திய அணி ஆரம்ப விக்கெட்டுக்காக சிறப்பாக ஆடியது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய முரளி விஜய், புஜாரா இணை மிகவும் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தவண்ணமிருந்தது. இந்நிலையில் இந்த ஜோடி 108 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து வேகம் கொண்டு செயற்பட்ட அவுஸ்ரேலிய அணிப் பந்து வீச்சாளர்கள் இந்திய அணி வீரர்களின் விக்கெட்டுக்களை விரைவாக சாய்த்துக் கொண்டிருந்தனர். குறிப்பாக நதன் லயனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இந்திய அணித்துடுப்பாட்டக்காரர்கள் திணறினர். இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, இந்திய அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் புஜாரா 52, முரளி விஜய் 57, ஜடேஜா 43, சச்சின் டெண்டுல்கர் 32 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய முன்னணி வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் நதன் லயன் ஐந்து விக்கெட்டுக்களைச் சாய்த்தார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

விளையாட்டு செய்திகள்

# தீவுகள் வசமானது தொடர்

(டொமினிக்கா)

சிம்பாப்வே அணிக்கெதிரான டொமினிக்கா டெஸ்டில் அசத்திய மேற்கிந்தியத்தீவுகள் அணி இனிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்கங்களால் அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் மேற்கிந்தியத்தீவுகள் கைப்பற்றிக் கொண்டது.

சிம்பாப்வே, மேற்கிந்தியத்தீவுகள் அணிக்களுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி மேற்கிந்தியத்தீவுகளின் டொமினிக்காவில் நேற்று முன்தினம் நிறைவடைந்தது.

இதில் இரண்டாம் நாள் ஆட்டத்தில் சிறப்பாக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 381 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மூன்றாம் நாள் ஆட்டம் தொடர்ந்த வேளை, மேற்கிந்தியத்தீவுகள் அணி 381 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தது.

206 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு, ஷில்லிங் போர்ட், சாமுவேல்ஸ் ஆகியோரின் சுழற்பந்து பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. குறிப்பாக ஷில்லிங்போர்ட்டின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய சிம்பாப்வே அணி வீரர்கள் வருவதும், போவதுமாக இருந்தார்கள். இருப்பினும் சிபாண்டா, வாலர், கிரிமர் ஆகியோர் சிறிது நேரம் தாக்குப்பிடித்துஆடியபோதும் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க அது உதவவில்லை. இறுதியில் சிம்பாப்வே அணிஇரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் சிபாண்டா 35, வாலர், கிரிமர் தலா 20 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனையோர் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஷில்லிங்போர்ட் ஐந்து, சாமுவேல்ஸ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ் வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை மேற்கிந்தியத்தீவுகள் அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றிக்கொண்டது. இத்தொடரில் சுழற்பந்து வீச்சில் அசத்திய அணியின் வெற்றிக்குப் பங்காற்றிய மேற்கிந்தியத்தீவின் ஷில்லிங்போர்ட் ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை வென்றார்.



## விரைவில் சான்றிதழ்

யாழ் மாவட்ட ஹொக்கி பயிற்றுனர்கள், நடுவர்களுக்கான தகுதிச் சான்றிதழ்கள் வழங்க உரிய நடவடிக்கை எடுப்பதாக இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவர் இந்திரவன்ஸ ஹேரத் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற தேசிய பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஹொக்கிப் போட்டி நல்ல முறையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து தலைவர் இந்த உறுதி மொழியை, யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவர் நோபேல் விமலேந்திரன் மற்றும் செயலாளர் எஸ். தர்மகுமார் ஆகியோருக்குத்தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விரைவில் ஹொக்கிபயிற்றுவிப்பாளர்கள்,நடுவர் களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# தடுமாறுகிறது இங்கிலாந்து



(ஒக்லண்ட்)

நியூசிலாந்து அணிக்கெதிரான ஒக்லண்ட் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி ஆரம்ப விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து தடுமாறி வருகிறது. இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நியூசிலாந்தின் ஒக்லண்ட்டில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஒரு விக்கெட்டை இழந்து 250 ஓட்டங்களைப்பெற்றிருந்த நிலையில் நியூசிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. இதில் புல்ரென், வில்லியம்ஸன் இணை நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க முற்பட்டது. இருப்பினும் இந்த ஜோடி மேலும் 10 ஓட்டங்களைப் பெற்று மொத்தமாக 181 ஓட்டங்களை இணைப்பட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வேகமுற்ற இங்கிலாந்துப் பந்துவீச்சாளர்கள் நேர்த்தியாகப் பந்துவீசி விக் கெட்டுக்களைக் கொய்து கொண்டனர். குறிப்பாக, ஸ்ரீபன் பின்னின் பந்து வீச்சு நியூசிலாந்து அணிக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இருப்பினும் கப்டன் மக்கலம், ரிம் சௌத்தி, ப்ராவ்லிங் ஆகியோர் ஓரளவுக்கேனும் தாக்குப்பிடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இறுதியில் நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 443 ஓட்டங்களைப் பெற்றது. இதில் புல்ரென் 345 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 136, வில்லியம்ஸன் 91, மக்கலம் 38, ரிம் சௌத்தி 44, ப்ராவ்லிங் 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீசசில் ஸ்ரீபன் பின் ஆறு, அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு நியூசிலாந்து அணியின் ரி.ஏ. போல்ட்டின் பந்து வீச்சுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. இங்கிலாந்து அணிக் கப்டன் குக், தொடர்ந்து வந்த ட்ரொட் ஆகியோரை வெளியேற்றிய போல்ட், இங்கிலாந்து அணிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தினார். இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, இங்கிலாந்து அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.இதில் இயன் பெல், கம்பரன் முறையே 06, 12 ஓட்டங்களுடன் உள்ளனர். பந்து வீச்சில் போல்ட் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். எட்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இங்கிலாந்து அணி 393 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

## இமையாணன் வி.க. கால்பந்து முன்னேறிய அணிகள்

(நெல்லியடி)

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் மாவட்ட கால்பந்தாட்டத்தொடரின் அடுத்த சுற்றுக்கு வதிரி பொம்மர்ஸ் மற்றும் சிவானந்தா, சென் சேவியர் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகள் பல பங்கு கொள்ளும் இப்போட்டித் தொடர் விலகல் முறையில் இடம்பெற்று வருகின்றது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடைபெற்றுவரும் இப்போட்டிகள் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றமுதல் போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணியும், நவீண்டில் றேஞ்சர்ஸ் அணியும் மோதின. இப்போட்டியில் பொம்மர்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டி திக்கம் சென். சேவியர் அணிக்கும், மாலுசந்தி மைக்கல் அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் திக்கம் சென்.சேவியர் அணி அபாரமாக ஆடி 6 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் அல்வாய் மனோகரா அணியினை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா அணி மோதியது. இதில் கொற்றாவத்தை சிவானந்தா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (12)



தெல்லிப்பளை-கருகம்பானை இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கனகசபை கேசவமூர்த்தி நினைவுக் கரப்பந்தாட்டத் தொடரில் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்ட ஆவரங்கால் மத்தி அணியைக் காணலாம். இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் மற்றும் ஆவரங்கால் மத்தி அணிகள் மோதியமை குறிப்பிடத்தக்கது. (93)

# செல்ரன் அதிரடி அசத்தியது சென்றல்

(யாழ்ப்பாணம்)

செல்ரனின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் அணி அபார வெற்றிபெற்றது.

சென். ஜோண்ஸ் கல்லூரி - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் அணிகளுக்கிடையிலான 50 ஓவர்களைக் கொண்ட ஒரு நாள் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் அணிக்கு, நடு-வரிசைத் துடுப்பாட்ட வீரர் செல்ரன் சிறப்பான ஆடித்தளத்தைப் பெற்றுக்கொடுத்தார். இறுதியில் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி 50 ஓவர்கள் நிறைவில் சலக விக்கெட்டுக்களையும் இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செல்ரன் ஒன்பது சிக்ஸர்கள், பத்து பவுண்டரிகள் அடங்கலாக 154 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் வினோத் 29, ஜெனோசன் 37, மதுசன் 34, ஜெரின் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அகிலன், கௌரி, காண்டி, விதுசன் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு 321 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் சென்.ஜோண்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணி களமிறங்கியது. ஆரம்பத்தில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்துத் தடுமாறியது. ஒரு கட்டத்தில் ஐந்துவிக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்கபைப் பெற்றிருந்தது. இந்நிலையில் மத்தியவரிசையில் களமிறங்கிய அகிலன் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் போட்டியை பரபரப்பான கட்டத்திற்கு இட்டுச் சென்றார். அகிலனின் அதிரடி ஆட்டம் அணியை கௌரவமான தோல்விக்கு வித்திட்டதேயொழிய வெற்றிபெற துணைபுரியவில்லை. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி பழைய மாணவர் அணி

50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 305 ஓட்டங்களைப் பெற்று 15 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் சிறப்பான முறையில் ஆடிய அகிலன் 13 சிக்ஸர் கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 112 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் கௌரி 37, ரட்ணம் 21, காண்டி 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் குட்டி, வதுசன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (17)

## வவுனியா கோட்ட மட்ட கபடி முடிவுகள்

வவுனியாக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கபடிப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. இதனடிப்படையில் 15 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் முதலாமிடத்தினை பூவரசன்குளம் மகாவித்தியாலயமும் 15 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தினை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலமும்,இரண்டாமிடத்தினை பூவரசன்குளம்மகாவித்தியாலயமும் பெற்றுள்ளன. 19 வயது பெண்கள் பிரிவில் முதலாமிடத்தினை பூவரசன்குளம் மாவித்தியாலயமும், இரண்டாமிடத்தினை சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும், ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலமும் பெற்றுள்ளன.



## மரணம் - 1973

செல்லப்பருக்கு கடுமை எண்டு கதைக்கினம். சேடம் இழுக்கத் தொடங்கிற்றுதாம். இனசனம் எல்லாம் அவரின் வீட்டிலேயே இப்ப மூண்டு நாளா நிக்கினம். பால் பருக்கிறதுக்கு மூத்தமகன் மூக்குப்பேணியோட தயாரா நிக்கிறானாம். நானும் வந்தனான் அந்த வழியால ஒரு எட்டு எட்டிப் பார்த்துவிட்டு போவம் என்று வந்தன். சூ... சரியான சனம் தான் நிக்குது. இனசன பொம்பிளையள் விசும்பலோட நிக்கின்ம் பக்கத்தில. பெரியவர் ஒருவர் குஞ்சு குருமன்களை கிட்ட நிக்கவிடாமல் மறைவாகப் போகச் சொல்லுகிறார். நிலைமை றொம்பவும் சோகமாய் இருந்தது. மூத்தவன் பால்பருக்க மூன்றுதரம் விழுங்கலுடன் பால் வழிகிறது கடைவழியாய்... ஓவென்ற பெண்களின் ஒப்பாரியுடன் செல்லப்பாவின் உயிர் பிரிகிறது. ஹோலில் மாட்டியிருந்த கண்ணாடி பிறேம் போட்ட சுவாமிப்படங்கள் எல்லாம் அவசர அவசரமாய் சுவரை நோக்கித் திருப்பி விடப்பட்டன. இனி இந்த செத்தவீட்டு ஒழுங்கையால ஒரு மாதத்துக்கு சனநடமாட்டம் குறைவாத்தான் இருக்கும்.

## மரணம் - 1993

வீட்டில இருந்து வெளிக்கிட்டால் உயிரோட வீட்டை போறது கேள்விக்குறியாத்தான் இருக்குது இந்த நாட்களில். காலையிலிருந்தே ஹெலி நடமாட்டம் அதிகமாகத்தான் இருந்தது. இண்டைக்கு காலமையும் லாம்பைக் கொண்டுபோய் வீட்டு பங்கரை வடிவாச் சுத்தம் பண்ணிட்டுத்தான் மற்றவேலை பாத்தனான். அவச்ரமாய் பாங்க் அலுவல் ஒன்றுக்கு யாழ்ப்பாணம் போகவேண்டி இருந்தது. சிங்கர் ஒயில் கானுக்குள் கொஞ்சமாய் பெற்றோல விட்டு என்ர C-90 இற்குள் மெதுவா ஏத்தி ஸ்ராட் பண்ணிற்றன். மண்ணெண்ணெயிலயும் சொகுசா போகிற வாகனம் அது. எஞ்சின் சூடு ஏறினாக் காணும் பச்சை மண்ணெண்ணையோ நீல மண்ணெண்ணையோ சும்மா எரிச்சுத்தள்ளும். தின்னவேலியில கனகத்தார் தன்ர A-40 காரில கடந்து போனவர்... இருந்தாற்போல சகடையொண்டு வந்தது... சகடை என்றது ஒரு குண்டுவீச்சு விமானம் 'அவ்றோ' ரகத்தைச் சேர்ந்தது. முழுசா இரண்டு வட்டமும் ஒரு அரைவட்டமும் அடித்த பின் மூன்று குண்டுகளைப் போட்டது. அதற்கிடையில் சனங்கள் விழுந்து படுத்து கட்டடங்களுக்குள் ஒளிந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டார்கள். நானும் மோட்டார் சைக்கிளைப் போட்டுவிட்டு கடை ஒன்றிற்குள் பாய்ந்து படுத்துக்கொண்டேன். குண்டு அதிர்வு தூக்கிப் போட்டதிலிருந்து கிட்டத்தான் குண்டுகள் விழுந்தன என்பதை ஊகிக்கக் கூடியதாக இருந்தது.

எழும்பிப் பயணத்தைத் தொடர்ந்தேன். கந்தர்மடம் சந்திக்கும் அங்கால ஒரே சனக்கூட்டமாக இருந்தது. அங்கதான் குண்டு விழுந்திருக்கோணும். கூட்டத்தை விலத்தி எட்டிப் பார்த்தேன். நாலைந்து உடல்கள் கிடத்தப்பட்டிருந்தன. கனகத்தாரின் A-40 சிதிலமாகி இருந்தது. கனகத்தாரும் சிதறியிருந்தார்.



## மரணம் - 2013

இந்தக் காப்பெற்
றோட் போடத்
தொடங்கினதும் தான்
தொடங்கினாங்கள்
ஒரே கல்லும்
தூசும் தான்
றோட்டில. என்ர
ஸ்கூட்டியும்
இந்த
கல்லுகளுக்
குளால
துள்ளித் துள்ளி
வாரத்துக்கு
மூன்று தரம்
காற்றுப்போகும். பெரிய பெரிய வாகனங்களும் விவஸ்தையில்லாமல் தூசியை வாரியிறைச்சிட்டுப் போகும். றோட்டிலை இறங்கினாலே சீ...யெண்டு போகும். விவஸ்தை கெட்ட சனங்கள்... எல்லாரும் எல்லாரையும் முந்திக் கொண்டு ஒரு ஒழுங்கு சீரில்லாமல் சே...

அந்தக் காலத்தில லொறியளுக்கு எல்லாம் கீழை 40 Km/h என்று வேக எல்லை போட்டிருக்கும். இப்ப பெரிய பெரிய கிடார ஹன்ரர் வாகனங்களே 700, 120 Km/h இல பறக்குதுகள். மஞ்சளும், வெள்ளையுமாக அதுகள் போனாலே தூசு அடங்க ஒரு மணி நேரமாகும்.

அட... வாறன் பொறுங்கோ உந்தா ஒரு மஞ்சள் வருகுது... ஹன்ரர் தான்... அங்கால தார் ஊற்றுறான்கள் இந்தப்பக்கம் தான் வருகுது வாறன் இதால திரும்பி... அட கல்லுகள் சறுக்கிப்போட்டுது. ஓ... ஒரே தூசியும் மஞ்சளும்... டமால்... என்னுடைய உடலும் ஸ்கூட்டியும் றோட்டில் கிடப்பதை என்னால் மேலிருந்து காணக்கூடியதாக இருந்தது....!!!




கணனித் துறையில் நடக்கும் மாற்றங்கள் பலவும் சிறிது சிறிதாக ஆரம்பித்து திடீரென ஒருநாள் யாருமே எதிர்பார்க்காத அளவு வேகம் எடுக்கும். திரும்பிப் பார்ப்பதற்குள் காட்டாறு போல கண்ணில் தென்படும் அனைத்தையும் அடித்துக்கொண்டு ஓடிவிடும்.



- பத்ரி சேஷாத்ரி -

# மின் புத்தகங்கள்

இப்படித் திடீரென மாற்றம் நிகழும் அந்தக் குறிப்பிட்ட புள்ளியை டிப்பிங் பொயிண்ட் என்பார்கள்.

ஒரு பெரிய மலையுச்சியில் ஒரு மரம் விழுந்து கிடக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக பள்ளத்தாக்கை நோக்கி அந்த மரம் சாயத் தொடங்குகிறது. தூரத்திலிருந்து பார்க்கும்போது அந்த மரத்துண்டு சாய்வது மிக மெதுவாக நிகழ்வதுபோலத்தான் தெரிகிறது. ஆனால் ஒரு புள்ளியில் அந்த மரத்தின் ஈர்ப்பு மையப்புள்ளி பள்ளத்தாக்குப் பகுதிக்கு நகர்ந்துவிட அதன்பின் மரம் கீழ்நோக்கிச் சரிவது மிக வேகமாக நிகழ்கிறது. இப்போது அந்தச் சரிவை யாராலும் தடுக்கமுடியாது. வேகம் எடுத்து சரேலென அதலபாதாளத்தை நோக்கி அந்த மரம் கவிழத் தொடங்குகிறது. மரம் வேகமெடுக்கத் தொடங்கும் புள்ளிதான் டிப்பிங் பொயிண்ட்.

அப்படிப்பட்ட ஒரு சாயும் புள்ளியை நோக்கித்தான் தமிழ் மின் புத்தகங்கள் சென்றுகொண்டிருக்கின்றன.

புத்தகத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அந்தத் தொழிலுள்ள தொல்லைகள் நன்கு புரியும். தாளின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே செல்கிறது. அச்சடிக்கும் கூலி, பைண்டிங் கூலி என்று எல்லாமே ஏறிக்கொண்டிருக்கிறது. பெட்ரோல் விலை இந்தக் காலகட்டத்தில் சுமாராக மும்மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால் 2004இல் ரூபா 60 விற்றுவந்த புத்தகத்தை இன்று ரூபா 100 என்ற இடத்துக்குக் கொண்டுசென்றாலே மக்கள் கோபப்படுகிறார்கள்.

இந்தச் சோகமான் நிலையில்தான் மின் புத்தகம் என்னும் வாய்ப்பு தமிழ்ப் பதிப்பாளர்களைத் தேடி வருகிறது. தொய்ந்து கிடக்கும் பதிப்பகத் தொழிலுக்கு ஒரு பெரும் தீர்வு என்ற காரணத்தாலேயே தொழில்நுட்பம் பற்றி ஒருசுக்கும் அறியாத பதிப்பாளர்கள்கூட இதற்கு மாறப்போகிறார்கள்.

மின் புத்தகங்கள் பற்றிச் சுருக்கமாகப் பார்த்துவிடுவோம். மின் புத்தகம் என்பது, பதிப்பாளரிடமிருந்து ஒரு இணைய விநியோகஸ்தர் மூலம், வாடிக்கையாளருக்கு நேராக, இணையம் வழியாகப் போய்ச்சேரும். புத்தகத்தை வாங்கிய அடுத்த ஒரு நிமிடத்துக்குள்ளாக அது வாடிக்கையாளரின் கைக்கருவியில் இருக்கும். அவர் உடனடியாகப் படிக்க ஆரம்பித்துவிடலாம். மின் புத்தகம் பற்றிப் பல குழப்பங்கள் வாசகர்களிடையே, பதிப்பாளர்களிடையே இருக்கலாம். புத்தகங்கள் பைரேட் செய்யப்பட்டு இணையம் எங்கும் பரவி விடுமா? மின் புத்தகங்களுக்கு எப்படி விலை வைப்பது? இதனால் லாப விகிதம் பாதிக்கப்படுமா? நாட்டில் உள்ள அனைவரும் மின் புத்தகங்களையா படிக்கப்போகிறார்கள்? என்னதான் இருந்தாலும் தாளில் புத்தகம் படிப்பதுபோன்ற சுகம் வருமா? நாட்டில் மின்சாரமே இல்லை"

எல்லாக் கேள்விகளுக்கும் பொறுமையாக பதில் சொல்லமுடியும். நம் நாட்டில் யாரெல்லாம் செல்பேசிகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று பாருங்கள். சமீப காலத்தில் இளைஞர்கள் வாங்கும் செல்பேசிகள் எப்படிப்பட்டவை என்று பாருங்கள். தொடுதிரை வசதி கொண்ட செல்பேசிகளையே இன்று அனைவரும் விரும்புகிறார்கள். இவற்றின் விலைகள் கடுமையாக வீழ்ச்சி அடைந்துகொண்டே உள்ளன. இந்தச் செல்பேசிகளிலேயே ஒருவர் மின் புத்தகங்களைப் படிக்கலாம். ஆனால் வசதியாகப் படிக்கவேண்டும் என்றால் சிலேட்டுக் கணனி எனப்படும் டேப்லட் பிசி என்ற கருவி தேவை. இதன் விலையும் கடுமையாக வீழ்ச்சி அடையத் தொடங்கியுள்ளது.

இந்த சிலேட்டுக் கணினிகளில் மென்பொருள்கள் மிக வேகமாக முன்னேற்றம் பெற்றுவருகின்றன. இப்போதே இவற்றில் தமிழில் படிக்கலாம், எழுதலாம். கொஞ்சம் சிரமம் இருக்கும். ஆனால் வெகு விரைவில் எந்த சிரமமும் இல்லாமல் தமிழில் எழுதுவதும் படிப்பதும் சாத்தியம். இந்தக் கருவிகள் எடுத்துக்கொள்ளும் மின்சாரம் மிக மிகக் குறைவு. இவை விரல் நுனியில் உலகத்தையே உங்களிடம் கொண்டுசேர்க்கப் போகின்றன.

புதிய தொழில்நுட்பங்களைக் குழந்தைகள்தாம் வேகமாகப் பயன்படுத்தத் தொடங்குவார்கள். ஏழை, பணக்காரர், கிராமம், நகரம் என்ற எந்தப் பிளவாலும் இதனைத் தடுக்க முடியாது.

# விநோத மீன்



ஸ்டிங்ரே என்ற வினோத வகை மீன் கடலில் இருக்கிறது. இதன் உருவமே வித்தியாசமாக இருக்கும். அகலமாக தட்டையாக இருக்கும் இதற்கு நீண்ட கூரிய வாள் போன்ற வால் உள்ளது. இந்த வால் விஷமுடையது.

வாலின் இரு பக்கங்களும் கத்தி போல கூர்மையாக இருக்கும். எதிரிகளை வாலால் சுழற்றி அடித்துக் காயம் ஏற்படச் செய்து இது தப்பித்து விடும்.

இந்த மீன் தாக்கி மனிதர்கள்கூட உயிரிழந்திருக்கிறார்கள்.

# உலோகச் செய்திகள்!

- கையில் வைத்தாலே உருகும் உலோகம் சீலியம்.
- உலகில் அதிகமாகக் கிடைக்கும் உலோகம் அலுமினியம்.
- அதிக எடை கொண்ட உலோகம் இரிடியம்.
- மிகவும் இலேசான உலோகம் லித்தியம்.
- நாணயங்கள் தயாரிக்க உதவும் உலோகம் நிக்கல்.
- விமானம் தயாரிக்கப் பயன்படும் உலோகம் கோபோல்ட்.
- மனிதன் உபயோகித்த முதல் உலோகம் செம்பு.
- வண்டல் மண்ணில் மிகுதியாக பொட்டாசியம் உள்ளது.
- ரேடியம் "உயிரைக் காப்பாற்றும் உலோகம்" எனப்படும்.
- பொஸ்பரஸ் தானாகப் பற்றி எரியும் உலோகம்.

3

- சாரு நிவேதிதா -

# சத்தியமே கலைக்கு ஆதாரம்

பியானிஸ்ட் படத்தில் வரும் நாயகன் சித்திரவதை முகாமுக்குச் செல்லாமல் தப்பி விடுகிறான். கிட்டத்தட்ட ஒரு வருட காலம் ஒரு ஆளில்லா நகரத்தில் ஒளிந்திருக்கிறான். அந்த நகரில் உள்ள அத்தனை பேரும் சித்திரவதை முகாமுக்கு அனுப்பப்பட்டு விடுகிறார்கள். யூதர் அல்லாத ஒருசிலரே அந்த நகரில் தங்கி இருக்கின்றனர். வதை முகாம்களுக்கு அனுப்பப்படும் போது அந்த யூதர்களை ஏற்றிக் கொல்லும் ரயில்களைப் பார்த்த போது துலுஸ் நகரில் நான் சந்தித்த முதிய ஃப்ரெஞ்சுக்காரர் சொன்னது ஞாபகம் வந்து கொண்டே இருந்தது. ரயில் என்பது Holocaust படங்களில் தவிர்க்க முடியாத ஒரு குறியீடாகவே இருக்கிறது. ரயிலில் புளி மூட்டையைப் போல் அடைக்கப்படுவார்கள் யூதர்கள். முகாமுக்குச் செல்லும் வரை தண்ணீர் கூட கிடையாது. வழியிலேயே பலர் செத்து விடுவார்கள். நாஜிகளின் வருகை வரை அவர்கள் அந்த ஊரின் செல்வாக்கான மனிதர்களாக வாழ்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆளில்லாத நகரில் ஒளிந்து வாழ்கிறான் பியானிஸ்ட். முதலில் சில மாதங்கள் அங்கே இருந்த வீடுகளில் புகுந்து கிடைப்பதைத் தின்று வாழ்கிறான். பிறகு அதுவும் முடியாமல் போகிறது. அந்த ஊரில்தான் நாஜி இராணுவ அதிகாரிகள் தங்கி இருக்கிறார்கள். வெளியில் வர முடியாமல் பல மாதங்கள் குடிக்க நீரின்றி, உண்ண உணவின்றி மறைந்து கிடக்கிறான். அவன் பதுங்கியிருந்த வீட்டில் ஒரு பியானோ இருக்கிறது. பியானோ தான் அவனுக்கு சுவாசமே என்றாலும் அந்தப் பியானோவை அவனால் வாசிக்க முடியாது. வாசித்தால் சப்தம் வெளியே கேட்டு நாஜிகள் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள். அதன் பெயர் தான் காவிய சோகம். அதைத்தான் nuance என்கிறேன். அப்படியே அந்தப் பியானோவின் அருகில் அமர்ந்து




பியானோவைத் தொடாமலேயே கண்களை மூடியபடி விரல்களால் காற்றிலேயே வாசிப்பான் அந்தப் பியானோ கலைஞன். அப்படியே அவனது செவிகளில் இசை அருவியாய் ஓடும். என் உயிர் போகும் வரை மறக்க முடியாத காட்சிகள் அவை. இப்படிப்பட்ட nuances பரதேசியில் ஒன்று கூட இல்லை என்பதால்தான் தட்டையான படம் என்கிறேன்.

கிட்டத்தட்ட ஒரு ஆண்டு கழிந்து, எலும்பும் தோலுமாக, செத்துப் போகும் நிலையில், சாவதற்கு முன் ஒரு கடைசி முயற்சி செய்து பார்ப்போமே என அந்த வீட்டின் பரணைத் துழாவும் போது டப்பாக்கள் கீழே விழுந்து பெரும் சப்தத்தை எழுப்புகின்றன. சத்தத்தைக் கேட்டு வீட்டின் உள்ளே வருகிறான் இராணுவ அதிகாரி. பியானிஸ்டைப் பார்த்த உடனேயே அதிகாரிக்கு இவன் பல மாதங்களாக இங்கே ஒளிந்து இருக்கிறான் என்று தெரிந்து விடுகிறது. நீ யார் என்கிறான். இவன் விஷயத்தைச் சொல்லி, தான் அந்த ஊரில் ஒரு பிரபலமான பியானிஸ்டாக இருந்ததையும் சொல்கிறான்.

உடனே அதிகாரி எதிரே இருக்கும் பியானோவைப் பார்த்து "எங்கே வாசி" என்கிறான்.

அப்போது அந்த யூதன், அந்த பியானிஸ்ட் Chopin-இன் Ballade I ஐ வாசிக்கிறான். யோசித்துப் பாருங்கள். ஒரு வருடமாக, தான் உயிருக்கு உயிராக நேசிக்கும் பியானோ தன் கண்ணெதிரே இருந்தும் வாசிக்க முடியவில்லை. வாசித்தால் அடுத்த கணம் மரணம். ஆனால் இப்போது அந்த மரணமே அவன் எதிரே அமர்ந்து கொண்டு பியானோ வாசிக்க உத்தரவிடுகிறது. அந்த இசையைக் கேளுங்கள். கடவுள் நேரடியாக உங்களோடு பேசுவதைப் போல் இருக்கும். சோப்பின் மூலமாக கடவுள் அந்த நாஜி அதிகாரியோடு அன்றைய தினம் அந்தத் தருணத்தில் பேசினார். அந்த யூதனை அதிகாரி சுட்டுக் கொல்லவில்லை. மாறாக, மீண்டும் அவனிடம் வந்து பாலும் ரொட்டியும் பழச்சாறும் பாலாடைக் கட்டியும் தின்னக் கொடுத்து தன் கோட்டையும் கொடுக்கிறான்.

ரஷ்யப் படைகள் போலந்துக்குள் நுழைந்து விட்டன. நாங்கள் தோற்று விட்டோம். ரஷ்யப் படைகளிடம் நாங்கள் போர்க் கைதிகளாக மாட்டுவோம்" உன்னுடைய நிலைமை இப்போது எனக்கும் வரலாம் என்று சொல்லி விட்டுப் பிரிகிறான் நாஜி அதிகாரி.

ரஷ்யப் படைகள் அந்த நகருக்குள் வருகிறது. நாஜி இராணுவத்தினர் கைது செய்யப்படுகின்றனர். பியானிஸ்ட் அணிந்திருக்கும் கோட்டே அவனுடைய உயிருக்கு ஹானியாக ஆகிவிடும் போல் தெரிகிறது. நாஜி அதிகாரியின் கோட்டு என்பதால் அதில் உள்ள ஸ்வஸ்திக் குறியைக் கண்டு பியானிஸ்டைச் சுட வருகிறார்கள் ரஷ்யர்கள். அதிர்ஷ்டவசமாகத் தப்பிக்கிறான் பியானிஸ்ட்.

இறுதிக் காட்சியில் அதுவரை கைதிகளாக வதைமுகாம்களில் இருந்த யூதர்கள் நகரை விட்டு வெளியேறும் போது அதுவரை அவர்களை வதைத்துக் கொண்டிருந்த நாஜி இராணுவத்தினர் கைதிகளாக அமர்ந்திருக்கின்றனர். வரலாற்றின் நகைமுரண் புரிகிறதா?

இந்தப் படத்தின் கதையும் ஷிண்ட்லர்ஸ் லிஸ்டைப் போல் உண்மையாக நடந்தது என்பதால் பியானிஸ்ட் பின்னாளில் தன்னைக் காப்பாற்றிய நாஜி அதிகாரியின் பெயரைச் சொல்லி அவனைக் காப்பாற்ற முயற்சி செய்கிறான். அந்த அதிகாரி ரஷ்யாவின் போர்க் கைதிகள் முகாமில்தான் இருந்தான் என்றாலும் அவனை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்படுகிறது. கடைசியாக அவனைக் கண்டு பிடிக்கும் போது அவன் இறந்து சில மாதங்கள் ஆகிவிடுகின்றன.

இந்தக் காவிய நயம் பரதேசியில் இருக்கிறதா என்பதே என் கேள்வி. அந்தப் பியானிஸ்டைக் காப்பாற்றுவது யார்? ஒரு நாஜி அதிகாரி. ஷிண்ட்லர்ஸ் லிஸ்டில் ஆயிரம் யூதர்களைக் காப்பாற்றுவது யார்? நாஜிக் கட்சியைச் சேர்ந்த ஷிண்ட்லர்.

இதுதான் வாழ்க்கையின் நம்பிக்கைக் கீற்று. இந்த நம்பிக்கையின் ஒளிக் கீற்று இல்லாததால்தான் பாலாவின் எல்லா படங்களுமே இருண்மையாக இருக்கின்றன.

**(தொடரும்)**

க‌ருவுற்றிருந்த பெண் சிங்கத்தின் குட்டி ஒன்று, ஆட்டு மந்தைக்கிடையே விழுந்து விட்டது. அந்த ஆடுகளில் ஒன்றாகவே அது வளர்ந்து வந்தது.

அது வளர வளர, மற்றவற்றிலிருந்து தனது தோற்றம் மாறுபட்டிருந்தது தெரிந்தபோதும், தன்னை இயற்கையின் விநோதம் என்று அது எண்ணிக்கொண்டது. ஆடுகளோடு அதுவும் தாவர பட்சிணியாகவே வளர்ந்தது.

ஒருநாள் கிழட்டுச் சிங்கம் ஒன்று

# தன்னை அறிதல்

இரைதேடிக்கொண்டு, ஆட்டுமந்தை அருகில் வந்தது. ஆடுகளோடு நின்ற இளஞ் சிங்கத்தைக் கண்டது. அதனால் நம்ப முடியவில்லை. ஆடுகளும் தங்களோடிருக்கும் சிங்கக்குட்டியைக் கண்டு அஞ்சவில்லை.

கிழட்டுச் சிங்கம் இரையை மறந்தது. ஆட்டு மந்தையைப் பின்தொடர்ந்தது. கிழட்டுச் சிங்கத்தைக் கண்டு இளஞ் சிங்கம் பயந்து ஓடியது.

இறுதியில் இளஞ் சிங்கத்தைப் பிடித்துக் கொண்டது கிழட்டுச் சிங்கம்.

"தயவுசெய்து என்னுடைய கூட்டத்தாருடன் என்னைப் போக விடு" என்று அழுது புலம்பியது இளஞ் சிங்கம்.

"நீ உன்னை யாரென்று அறியாமல், ஆட்டு மந்தையில் ஒன்றாக வாழ்கிறாய்.... வா என்னுடன்" என்றது கிழட்டுச் சிங்கம்.

"இல்லை, நான் அவர்களில் ஒருவன். அவர்களோடு தான் போக வேண்டும். என்னை விடு" என்று அழுதது, இளஞ் சிங்கம்.



அந்தக் கிழட்டுச் சிங்கமோ அதனை விடாது, பக்கத்திலிருந்த ஏரிக்கு அழைத்துச் சென்றது. அந்த நீர்நிலையில் அதனுடைய உருவத்தைப் பார்க்குமாறு செய்தது.

நீரிலே தெரிந்த தன் உருவத்தைக் கண்ட இளஞ் சிங்கம் மாற்றமடைந்தது. தன்னை யார் என்று கண்டுகொண்ட அந்த விநாடியில் பெரிதாக கர்ஜித்தது. அந்தக் கர்ஜனை காடெங்கும் எதிரொலித்தது. அதுவரை, தன்னை ஆடாக எண்ணிக்கொண்டிருந்த சிங்கத்திற்கு உண்மை விளங்கி விட்டது.

"என்னுடைய வேலை முடிந்து விட்டது. இனிச் சிந்திக்க வேண்டியது நீதான்.... நீ உனது ஆட்டு மந்தையோடு மீண்டும் போக விரும்புகிறாயா?" என்று கேட்டது கிழட்டுச் சிங்கம்.

"மன்னித்து விடுங்கள். என்னை உணர்ந்து கொண்டு விட்டேன். இனி சிங்கமாக நடந்து கொள்வேன்" என்றது இளஞ் சிங்கம்.

# கொய்யாப் பழம்!

ஒருசமயம் கி.வா.ஜ. தனது நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது ஓர் அன்பர் கொய்யாப் பழம் வாங்கிக் கொண்டு வந்தார்.

"எந்தப் பழத்திலும் கொய்யாப் பழமே சுவையுடையது" என்றார் கி.வா.ஜ.

"ஏன்? மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் என்ற முக்கனிகள் இல்லையா?" என்று ஒருவர் கேட்டார்.

"அவையும் சுவையுடையனவே..." பதிலுக்குச் சொன்னார் கி.வா.ஜ.

"அப்படியானால் கொய்யாப் பழம் மட்டும் சுவையுடையது என்கிறீர்களே?"

"நான் இந்தக் கொய்யாப் பழத்தைச் சொல்லவில்லை. எந்தப் பழமானாலும், கொய்த பழத்தைவிடக் கொய்யாத பழமே சுவையுடையது என்றேன். அதாவது தானே முதிர்ந்து உதிர்ந்ததனால் சுவை மிகுதியாக இருக்கும்" என்று கூறிச் சிரித்தார் கி.வா.ஜ.



(கி.வா.ஜ. சிலேடைகள் நூலில்)

# கூகுளின் அறிமுகம் – நெக்ஸஸ் 10 டேப்லட்கள்!




இணையத்தள சேவைக்கு அப்பால் இலத்திரனியல் சாதன உற்பத்தியிலும் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துள்ள கூகுள் நிறுவனமானது அதன் புதிய வெளியீடான Nexus 10 டேப்லட்களை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது. 2560 x 1600 Pixel Resolution கொண்ட திரையுடன் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த டேப்லட்கள் உலகின் முதலாவது அதிகூடிய Resolution உடன் கூடிய டேப்லட்கள் என்ற பெயரையும் தாங்கிவருகின்றன. மேலும் இவற்றில் 5 மெகாபிக்சல்கள் மற்றும் 1.9 பிக்சல்கள் உடைய இரு கமெராக்களும் காணப்படுவதுடன் 16GB, 32GB ஆகிய சேமிப்பு வசதிகளைக் கொண்ட இரு பதிப்புக்களாக வெளிவரவுள்ளன. இவை தவிர இந்த டேப்லட்களில் இணைக்கப்பட்டுள்ள 9000 mAh மின்கலமானது தொடர்ச்சியாக 7 மணித்தியாலங்கள் வரை செயற்படக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

# எஸ்.எம்.எஸ் அனுப்புவதை தடுக்க புதிய கருவி கண்டுபிடிப்பு!



செல்போன்களில் பேசிக்கொண்டு வாகனம் ஓட்டுவதும், சிலர் எஸ்.எம்.எஸ். அனுப்புவதும் வழக்கமாக உள்ளது. இதனைத்தடுக்கும் விதமாக, அமெரிக்காவின் வேஜீனியா மாநிலத்தில் உள்ள நிறுவனம் ஒரு புதிய கருவியை கண்டுபிடித்து அறிமுகம் செய்துள்ளது. இந்தக் கருவி வாகனத்தின் முன்பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும். "ஓரிகோ சேப்" எனப்படும் இந்தக் கருவியில் ஓட்டுனர் தனது செல்போனைப் பொருத்தினால் என்ஜின் இயங்கத் தொடங்கும். வண்டி ஓடிக்கொண்டிருக்கும்போது, ஓட்டுனர் புளூடூத் மூலம் போனில் வரக்கூடிய அழைப்புகளை ஏற்று பேசலாம். ஆனால், திரும்ப போன் செய்யவோ அல்லது எடுத்து எஸ்.எம்.எஸ். அனுப்பவோ முடியாது. அப்படி எடுத்தால், அதில் உள்ள அலாரம் இயங்கி அதனுடைய செயல்பாடுகளைக் கண்காணிப்பவருக்குத் தகவலாகத் தெரிவித்துவிடும். வண்டியும் நின்றுவிடும்.

கண்காணிப்பாளர் வந்து திறந்தால் மட்டுமே மறுபடி வாகனத்தை இயக்க முடியும். வண்டி நின்றிருக்கும்போது இந்தக் கருவி செயல்படாது. அப்போதுதான் ஓட்டுனர் தனது போனை உபயோகிக்க முடியும். இந்த பாதுகாப்பு கருவியின் விலை (பொருத்துவது உட்பட) 279 டொலர் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



# அறிமுகமாகியது ஸ்கானர் மவுஸ்

கணனிப் பாவனையில் சுட்டிகளின் (Mouse) பயன்பாடானது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இதனால் காலத்திற்கு காலம் பல்வேறு புதிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாக வெவ்வேறு சுட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்ட வண்ணம் உள்ளன. இவற்றின் தொடர்ச்சியாக தற்போது IRIS நிறுவனமானது OCR தொழில்நுட்பத்துடன் கூடிய Scanner Mouse ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. USB 2.0 இணைப்பிகளை உடைய இந்தச் சுட்டிகளின் மூலம் எந்தவிதமான மேற்பரப்புக்களில் காணப்படும் எழுத்துக்களையும் ஸ்கான் செய்யக்கூடியதாகக் காணப்படுகின்றது. இதற்காக குறித்த சுட்டியுடன் தரப்பட்டுள்ள ஸ்கான் செய்வதற்கான பொத்தானை அழுத்தியதும் சுட்டி காணப்படும் மேற்பரப்பிலுள்ள எழுத்துக்கள் ஸ்கான் செய்யப்படும். விலை 79 அமெரிக்க டொலர்கள்




# விண்டோஸ் 7 தரும் இடையூறுகள்

Windows 7

விண்டோஸ் 7 சிஸ்டம், பயன்படுத்த நமக்கு மிகவும் எளிமையானதாகவும், வேகமாக வேலைகளை முடிப்பதற்கான வசதிகள் கொண்டதாகவும் உள்ளது. ஆனால், நாம் பணியாற்றுகையில், சின்ன சின்ன இடைஞ்சல்களை இது தருவதாக, நாம் அனைவரும் உணர்கிறோம். இவை நம் பணிக்கு கூடுதல் வசதிகளையும், பாதுகாப்பாக இருப்பதற்கான வழிகளையும் தருகின்றன. இருப்பினும் இவற்றை நாம் விரும்புவதில்லை. எனவே, அவற்றை எப்படி தவிர்க்கலாம் என்பதை இங்கு காணலாம்.

**1. அழிக்கவா வேண்டாமா?**

எந்த ஒரு பைலை நாம் அழிக்க முற்பட்டாலும், அதனை அழிக்கவா? வேண்டாமா? என்ற கேள்வியினை விண்டோஸ் 7 கேட்கிறது. நாம் அடிக்கடி பைல்களை நீக்கும் பணியை மேற்கொள்வதாக இருநதால், இது குறுக்கீடாகத்தான் இருக்கும்.

இது தேவையே இல்லை. ஏனென்றால், தெரியாமல் நாம் ஒரு பைலை நீக்கிவிட்டாலும், அதனை ரீசைக்கிள் பின்னிலிருந்து அல்லது விண்டோஸ் எக்ஸ்புளோரர் பிரிவில் அன் டூ செயல்பாட்டினை மேற்கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த கேள்வியினை விண்டோஸ் தராமல் இருக்க, ரீசைக்கிள் பின் ஐகானில் ரைட் கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில் Properties தேர்ந்தெடுக்கவும். இங்கு Display delete confirmation என்று இருக்கும் இடத்தில் உள்ள டிக் அடையாளத்தை எடுத்துவிடவும்.

**2. கப்ஸ் லொக் கீ:**

நமக்கு கப்ஸ் லொக் கீ தேவையா? எத்தனை பேர் இதனை அடிக்கடி பயன்படுத்துகிறோம். தொடர்ந்து பெரிய எழுத்துக்களில் யாரும் டைப் செய்யப் போவதில்லை. ஓரிரு எழுத்துக்களை பெரிய எழுத்தாக டைப் செய்திட ஷிப்ட் கீ அழுத்தி பெறுகிறோம்.

கப்ஸ் லொக் கீயினை, நம்மை அறியாமல் அழுத்தி அது இடைஞ்சல் தரும் ஒன்றாகவே நமக்குக் காட்சி அளிக்கிறது. இது அழுத்தப்படுவதையும், செயலுக்கு வருவதனையும் நிறுத்தலாம்.

disable_caps_ lock.reg என்ற பைலை http://clicks.aweber.com/y/ct/ ?l=5GGRE&m=lsYk1pJpHuUKNK&b=g3Urkd2hC6UiLgO_fcxysw என்ற தளத்திலிருந்து டவுண்லோட் செய்திடவும்.

இந்த பைலில் டபுள் கிளிக் செய்துவிட்டால், இது இயங்கி, கப்ஸ் லொக் கீ செயல்படுவதனை நிறுத்திவிடும். இதனால், எந்த பாதிப்பும் இருக்காது. இதற்குப் பின்னர், 'கப்ஸ் லொக்' கீயினை நீங்கள் அழுத்தினால், ஒன்றும் நிகழாது.

**3. விண்டோஸ் அப்டேட்:**

விண்டோஸ் இயக்கத்திற்கான அப்டேட் பைல்கள் தானாக உங்கள் சிஸ்டத்தில் டவுண்லோட் ஆனவுடன், ஒவ்வொரு 4 மணி நேரத்திற்கு ஒரு முறை, தரவிறக்கம் செய்யப்பட்ட அப்டேட் பைல்களை இன்ஸ்டோல் செய்திடவா எனக் கேட்டு ஒரு பொப் அப் விண்டோ கிடைக்கும்.

போனஸாக நான் இன்ஸ்டோல் செய்கிறேன். நீங்கள் உங்கள் வேலையைத் தொடரலாம் ஏன்றும் ஒரு டிப்ஸ் தரப்படும். அடுத்து, உங்கள் கம்ப்யூட்டரை மீண்டும் இயக்கினால் தான் இவை செயல்பாட்டிற்கு வரும், இயக்கவா? என்று ஒரு கேள்வி கேட்கப்படும்.

அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று நீங்கள் பதில் கொடுத்தாலும், மறுபடியும் மறுபடியும் இந்த பொப் அப் விண்டோ கிடைக்கும். இது நமக்கு நல்லது என்றாலும், நம் தொடர் பணியில் இது ஒரு குறுக்கீடுதான். எனவே இதனை நம் வசதிப்படி அமைக்க விரும்புவோம். அதாவது, எப்போது நமக்கு ரீஸ்டார்ட் செய்வதில் பிரச்னை இல்லை என்று எண்ணுகிறோமோ, அப்போது டவுண்லோட் செய்து கொள்ள விண்டோஸ் சிஸ்டத்திற்கு நாம் சொல்கிற வகையில் செட் செய்து கொள்ளலாம்.

இதற்கு Windows Update control panel திறக்கவும். இடது பக்கமாக உள்ள Change settings என்பதனை அடுத்து பெறவும். இங்கு அதற்கான மாற்றங்களை மேற்கொள்ளவும். 'Download updates but let me choose whether to install them' என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.

**4. விண்டோஸ் சத்தம்:**

மாறா நிலையில், விண்டோஸ் இயங்கத் தொடங்கியதில் இருந்து, செயல்படும் போதும் மற்றும் முடிக்கும் போதும் பலவகையான ஒலிகளை ஏற்படுத்தும். ஒரு சிலர், 'இதனை மிகவும் ரசிப்பார்கள். சிலரோ, இவற்றை ஒரு தொல்லையாகவே எடுத்துக் கொள்வார்கள்.

இந்த ஒலியை நிறுத்தலாம். உங்கள் சிஸ்டம் ட்ரேயில் உள்ள ஸ்பீக்கர் ஐகானில் ரைட் கிளிக் செய்திடவும்.

கிடைக்கும் மெனுவில் Sounds என்பதைத் தேர்ந்தெடுக்கவும். அடுத்து கிடைக்கும் Sound Scheme boxy; No Sounds என்பதைத் தேர்ந்தெடுக்கவும். இந்த பிரிவில், விண்டோஸ் இயக்க பணிகள் ஒவ்வொன்றுக்குமாக, ஒலி கிடைப்பதனை நிறுத்தலாம். நாம் விரும்பும் பணிக்கு மட்டுமான ஒலி மட்டும் கிடைக்கும்படி அமைக்கலாம்.

**5. Action Center Message:**

நம் கம்ப்யூட்டர் சிஸ்டம், சில குறைபாடான அமைப்பில் இருந்தால், விண்டோஸ் அதனைச் சுட்டிக் காட்டி எச்சரிக்கை வழங்கும். எடுத்துக்காட்டாக, உங்கள் கம்யூட்டரில், ஆண்ட்டி வைரஸ் தொகுப்பு இல்லை என்றால், விண்டோஸ் பேக் அப் வேலையைச் செயல்படுத்தவில்லை என்றால் இது போன்ற செய்திகள் காட்டப்பட்டுக் கொண்டே இருக்கும்.

இவற்றை நிறுத்த எண்ணினால், சிஸ்டம் ட்ரேயில் உள்ள flag icon–y; கிளிக் செய்து, பின்னர் Open Action Center என்பதில் கிளிக் செய்து Action Center-ஐத் திறக்கவும். அடுத்துள்ள சைட் பாரில், Change Action Center settings என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு எந்த மாதிரியான செயல்பாட்டிற்கு இந்த எச்சரிக்கை செய்தி காட்டப்படக் கூடாது என விரும்புகிறீர்களோ, அவற்றை முடக்கிவைக்கலாம்.

# கோட்ட மட்ட தமிழ்த்தினப்போட்டி தெல்லிப்பளை கோட்டம் முன்னிலை

(நெல்லியடி)

வலிகாமம் வலய தெல்லிப்பளை கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டியில் தெல்லிப்பளைக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 18 பாடசாலைகள் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளன.

இப்போட்டியில் அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கலாக யாழ். யூனியன் கல்லூரி 13 முதலாமிடங்களையும், 3 இரண்டாமிடங்களையும், 7 மூன்றாமிடங்களையும், யாழ். மகாஜனாக் கல்லூரி 15 முதலாமிடங்களையும், 6 இரண்டாமிடங்களையும், 3 மூன்றாமிடங்களையும், பெற்றுள்ளன.

மேலும் அருனோதயாக்கல்லூரி 7 முதலாமிடங்களையும், 7 இரண்டாமிடங்களையும், 6 மூன்றாமிடங்களையும், வயாவிளான் ம.ம.வித்தி 3 முதலாமிடங்களையும், 11 இரண்டாமிடங்களையும், 3 மூன்றாமிடங்களையும், மல்லாகம் மகாவித்தி ஒரு முதலாமிடத்தையும், 5 இரண்டாமிடங்களையும், ஒரு மூன்றாமிடங்களையும், மல்லாகம் விசாலாட்சி ஒரு முதலாமிடத்தையும், 2 இரண்டாமிடத்தையும், ஒரு மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன.

மேலும் யாழ். குளமங்கால் றோ.க.த. பாடசாலை ஒரு முதலாமிடத்தையும், ஒரு இரண்டாமிடத்தையும், 3மூன்றாமிடங்களையும், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட மகாவித்தியாலயம் 2 முதலாமிடங்களையும், ஒரு இரண்டமிடத்தையும், ஒரு மூன்றாமிடத்தையும், குட்டியம்புலம் அ.த.க. பாடசாலை ஒரு முதலாமிடத்தையும், ஒரு இரண்டாமிடத்தையும், 2 மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளது.

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் ஒரு இரண்டாமிட ஒரு மூன்றாமிடத்தையும், கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் 2 இரண்டாமிடங்களையும், கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம் 2 இரண்டாமிடங்களையும், ஒரு மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன.

மேலும் அளவெட்டி வடக்கு அ.மி.த. பாடசாலை, வசாவிளான் சிறிவேலுப்பிள்ளை வித்தியாலயம், மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம் தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகியன தலா ஒவ்வொரு இரண்டாமிடத்தையும், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் 3 இரண்டாமிடங்களையும், நடேஸ்வரா கல்லூரி 2 இரண்டாமிடங்களையும் பெற்றுக் கொண்டன. (17)

## வட. வரணி நாச்சிமார் வீதியை புனரமைத்துத்தருமாறு கோரிக்கை

(வரணி)

பருத்தித்துறை கொடிகாமம் பிரதான வீதிக்கு கிழக்கு பக்கமாக உள்ள வட.வரணி வாழைத்தோடடத்தில் இருந்து மாசேரி செல்லும் நாச்சிமார் கோவில் வீதி மிகவும் மோசமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

பற்றைகள் மூடியநிலையில் போக்கு வரத்து தடைப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மாற்றுப் பாதையூடாகவே பயணிக்கின்றனர்.

இவ்வீதியை திருத்தம் செய்தால் மாசேரி மக்கள் வடவரணிக்கு (பிரதான) வீதிக்கு வந்து (கொடிகாமம், பருத்தித்துறை) பயணிக்கமுடியும். இவ்வீதியை புனரமைத்துத்தருமாறு வடவரணி மக்களும் மாசேரி வாழ் மக்களும் வேண்டுகோள் விடுக்கின் றன. (150)





மாற்றுவலுவுள்ளோருக்கு பொதுக் கட்டடங்களில் உட்பிரவேசிக்கும் வசதிகளைச் செய்வதற்கான சமூக சேவைகள் அமைச்சின் செயலமர்வு அண்மையில் கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் அரச அதிகாரிகளுடன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சின் செயலாளர் திருமதி. இமெல்டா சுகுமார் , அங்க வீனமுற்றோர் தேசிய செயலகத்தின் பணிப்பாளர் எம்.டி.சி. ஜயமானே, மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து சிறிநிவாசன் ,வவுனியா ஓர்கன் அமைப்பின் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் மற்றும் மாவட்ட அரச அதிபர் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம். (90)

# வவுனியாவில் 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு

(வவுனியா)

வடமாகாண சமூக சேவைத் திணைக்களத்தினால் வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ். எஸ். வாசன் தெரிவித்தார்.

சுயதொழில் கடன் பெறவுள்ளவர்களுக்கு முதலாம்கட்டம், இரண்டாம்கட்டம் என இரு கட்டங்களாக இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர், கொடுப்பனவுகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் வவுனியா பிரதேசசெயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி பிறேமா விமலேந்திரனை தொடர்பு கொண்டு கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

சுயதொழில் கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**(முன்னைய தொடர்)**

சுந்தரலிங்கம் விஜயகுமார் (54,தாலிக்குளம், பூவரசங்குளம்,வவுனியா), சிவகுமார் தவராணி (முல்லைக்குளம், கல்மடு,வவுனியா), செல்வராசா பத்மபிரியா (169ஈஸ்வரிக்குளம்,கல்மடு,வவுனியா), இராசேந்திரன் பத்மாவதி (140, ஈஸ்வரிக்குளம், கல்மடு,வ'வுனியா), நாகேந்திரராசா ஶ்ரீமதி (புதுக்குளம், சாஸ்தரிகூழாங்குளம், வவுனியா), சோதிராசா மதிவதனி (புதுக்குளம், சாஸ்தரிகூழாங்குளம், வவுனியா), கேதீஸ்வரநாதன் ஆனந்தராணி (முல்லைக்குளம், கல்மடு,வவுனியா), கணேஸ்வரன் லோகநாயகி (சாளம்பன்குளம், கல்மடு,வவுனியா), தட்சணாமூர்த்தி தமிழ்செல்வி (மன்னார் வீதி, பூவரசங்குளம், வவுனியா), முத்குமாரி சந்திரசேகர் (80, தாலிக்குளம், பூவரசங்குளம், வவுனியா), கதிர்காமத்தம்பி மகேஸ்வரி (165, ஈஸ்வரிக்குளம்,கல்மடு,வவுனியா), பொன்னுத்துரை சித்திரகலா (22, தாலிக்குளம், பூவரசங்குளம், வவுனியா), மைக்கல் விமலா தேவி (40, வீட்டுத்திட்டம், ஈஸ்வரிபுரம், கல்மடு, வவுனியா), ரங்கநாதன் வள்ளிமயில் (03, தாலிக்குளம், வவுனியா), இரவீந்திரன் மதிரதனி (சாய் வீதி, மகாறம்பைக்குளம், வவுனியா), கயிலயம் பதிநாதன் சிறிசயந்தி (நாவற்குளம், ஓமந்தை) ஆறுமுகம் ராகினி (9ஆம், ஒழுங்கை, தம்பசைன் சோலை மகாறம்பைக்குளம்), அமரதீபன் புவனேஸ்வரி (77, வீட்டுத்திட்டம் தாலிக்குளம், பூவரசஙகுளம்,) வினோஜ் நிரோசின்பனியஸ் கெளரிகங்கா (56, தாஸ்நகர், மகாறம்பைக்குளம், வவுனியா), குமாரு குணசுந்தரி (141, தாலிக்குளம், பூவரசங்குளம், வவுனியா), சந்திரசேக முத்துக்குமாரி (30,தாலிக்குளம், பூவரசங்குளம், வவுனியா), லோகநாதன் ஆனந்தி (59 ஈநகர்,இலுப்பைக்குளம்),பாலசுந்தரம் யோகேஸ்வரி (28B, 7ஆம் ஒழுங்கை, ஊர்மிளாகோட்டம், நெளுக்குளம்) (160) (முற்றும்)

# பதிவிறக்கப் பெட்டகம்

தஞ்சை பெரிய கோவிலுக்கு வந்த இலங்கை புத்தபிக்குகள் மீது தாக்குதலை தவறு என்று கண்டிப்பது ஒரு மேலோட்டமான பார்வையோ என்று தோன்றுகிறது. இன்று உலகில் மாபெரும் இனப்படுகொலையில் ஈடுபட்ட சிங்கள இனவாத அரசுக்கு அங்கு பௌத்த வெறியே அடித்தளமாக இருக்கிறது. சிங்கள அரசு, சிங்கள இராணுவம், பவுத்த மதம் மூன்றும் ஒன்றோடன்று பிரிக்க முடியாமல் கலந்துவிட்டன. ஒரு இலங்கை புத்த பிக்குவையும் ஒரு இலங்கை இராணுவவீரனையும் பிரித்துப் பார்க்கக் கூடிய இடம் இருக்கிறதா? ஒரு காயம்பட்ட சமூகத்தின் அடையாள அரசியலை வெறுமனே இனவெறி என்று மட்டும் சுருக்க முடியுமா? – **மனுஷ்ய புத்திரன்**

ஆய்வு மாணவர்களில் ஒருவராக தஞ்சைக்கு வந்த புத்த பிக்கு தாக்கப்பட்டது கடுமையாக கண்டிக்கத்தக்கது. அதைப் "புரிந்துகொள்ள" முயற்சித்து மனுஷ்யபுத்திரன் எழுதியிருப்பது அதைவிட கண்டிக்கத்தக்கது. ஒரு மனிதனை ஒரு அடையாளத் தொகுதியின் பகுதியாக பார்ப்பதிலிருந்துதான் நவீன காலத்தின் வன்முறை தொடங்குகிறது. ஹிட்லரின் யூத அழிப்பிற்கு பின் ஐரோப்பிய சிந்தனை, சாராம்சவாத அடையாளங்களுக்கு எதிராக மிகப்பெரிய அறிவார்த்த போராட்டத்தை நடத்தியது, இந்த சோகத்தை உணர்ந்ததால்தான். அறிவார்த்த தளங்களை விட்டுவிட்டால் கூட, வெகுஜன மனநிலை எதிரியாக கட்டமைக்கப்பட்ட அடையாளங்களையும் சகஜீவியாக அனுசரிக்கும் சாத்தியம் சாராம்சவாதத்தை மறுப்பதால்தான் ஏற்படுகிறது. Mr. and Mrs. Iyer படத்தைப் பார்த்தவர்கள் பேராசிரியர் வலண்டைன் டானியலின் Charred Lullabies –இல் இடம் பெறும் ஒரு சிங்களப் பெண் தமிழ் ஆசிரியரைக் காப்பாற்றும் சம்பவத்தை படித்தறிய வேண்டும். ஒரு அடையாளத்தை தாங்கும் பலவீனமானவர்களை கூட்டாகத் தாக்குவது என்பது கோழைத்தனத்தின் உச்சம். முடிந்தால் மிக அதிக பலமானவனை தாக்குங்கள். அதற்குப் பதிலாக அகப்பட்டவர்களை தாக்காதீர்கள். நீங்களா தமிழர்கள்? தூ. – **ராஜன்குறை**

தஞ்சை மற்றும் திருச்சியில் தாக்கப்பட்ட தொல்லியல் ஆய்வு மாணவர்கள் மற்றும் பௌத்த பிக்குகளில் தாய்லாந்து மற்றும் இந்தோனேசியர்களும் இருந்ததாகச் செய்திகள் வருகின்றன. அப்படியில்லாமல் அவ்வளவு பேரும் இலங்கையிலிருந்து வந்திருந்தாலும் இப்படியான தாக்குதல்களை ஜனநாயக, முற்போக்கு மற்றும் மதச்சார்பற்ற சக்திகள் கண்டிக்க வேண்டும். கென்னத் சந்திலிருந்த மகா போதிக் கழகமும் தாக்கப்பட்டுள்ளது. இந்துக் கோவில்கள் மற்றும் பள்ளிவாயில்கள் தாக்கப்படுவதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு? இப்படியான சிவசேனா மாதிரித் தாக்குதல்கள் அடுத்த கட்டமாக உள்நாட்டில் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக அமையப்போகிறது என்பதை நாம் காணத் தவறலாகாது.

– **அ.மார்க்ஸ்**

மனித இயல்பே இரட்டை மனதுடையதோ? பெயர், ஊர் தெரிந்தவர்களின் உயிர், உடைமைக்கு ஆபத்து நேர்ந்துவிடடால் நாம்தான் எவ்வளவு கிளர்ந்து எழுந்து விடுகிறோம். ஆனால் நமக்கு நெருக்கமாயல்லாதவர்களுக்கு எவ்வளவு பயங்கரக் கொடுமைகள் இழைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கும் அனுஷ்டிப்பதானால் நமக்கு ஒவ்வொரு நாளும் துக்கம் அனுசரிக்கும் நாளாக இருக்க வேண்டும்.

– **அசோகமித்திரன்**

அருவமான முழக்கங்கள், சூத்திரங்களின் பெயரால் செய்யப்படும் வன்முறையை நான் நிர்த்தாரணமாக எதிர்க்கிறேன். உன்னதமான இலக்கைத் தூய்மையான வழிமுறைகள் மூலமே அடைய முடியும். மனிதனிடம் இருக்கிற தீமையை அல்லது விலங்குத்தன்மையைப் போக்குவதற்கு அச்சுறுத்தலையும் கொடிய பயங்கரவாதத்தையும் பயன்படுத்தினால நாம் உருவாக்க விரும்பும் 'இலட்சிய மனிதன்' சர்க்கஸ் கூடாரத்தில் சவுக்குக் கொண்டு விலங்குகளைப் பழக்கும் மனிதனாகத்தான் இருப்பான்... பொய்மையைக் கொண்டு ஒரு புதிய சமுதாயத்தைக் கட்ட முடியாது. – **Dr.Zhivago நாவலில்**

சட்டத்தை மீறுதல் என்பதால் மட்டுமே குற்றம் நிகழ்வதில்லை. மற்றொருவனின் வாழ்நிலை அபாயத்திற்குள்ளாவதற்கோ அல்லது வழிதவறிச் செல்வதற்கோ, ஏன் அது நாசமடைவதற்கோ நாமும் பொறுப்பாவதன் மூலமே குற்றம் நிகழ்கிறது. – **மார்ட்டின் ஹைடெக்கர்**

# மீள்குடியேற்ற பிரதேசங்களில் அடிப்படை வசதிகள் வேண்டும்

## களயதார்த்தத்தை விபரிக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர்

மீள்குடியேற்றத்தின் வெற்றி என்பது, மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பும்போது, அங்கே அவர்கள் வாழ்வதற்கான சூழலை உருவாக்கிக் கொடுப்பதே ஆகும். இதை நான் அந்துப் பிரதே மக்களுடன் இணைந்திருந்து அனுபவ பூர்வமாக கண்டுணர்ந்துள்ளேன். என்று ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மீள்குடியமர்த்துதல் அதிகார சபை (திருத்தச்) சட்டமூலம் தொடர்பான விவாதத்திலே கடந்த வியாழக்கிழமை அன்று கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதித் தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் ஆற்றிய உரையின் முழுவடிவம்.

மீள்குடியமர்த்துதல் அதிகார சபை (திருத்தச்) சட்டமூலம் தொடர்பான விவாதத்திலே உரையாற்றுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்துக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

2009 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மீள்குடியேற்றப்பணிகள் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன. யுத்தம் முடிந்த பின்னர் எட்டப்பட்ட இந்த முன்னேற்றத்தை வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்த வெளிநாட்டுப்பிரதிநிதிகளே பார்த்துப் பாராட்டியுள்ளனர்.

பாடசாலை, ஆசிரிய வளம், மின்சாரம், வீதி, மருத்துவ வசதி, போக்குவரத்து, வீட்டு வசதி, தொழில்வாய்ப்பு போன்ற அடிப்படை வசதிகளை முறையாக ஏற்படுத்திக் கொடுக்கும் போதே மீள் குடியேற்றம் என்பது வெற்றியை அடைகிறது.

இத்தேவையில் பூரணத்துவம் இல்லாதபோது மீள்குடியேற்ற நடவடிக்கை என்பது மிகுந்த விமர்சனத்துக்குரியதாகவே இருக்கும். இன்னும் அங்கே பல தேவைகள் இருக்கின்றன. இப்படியான நிலையை வைத்தே ஊடகங்களும் அரசியற் சக்திகளும் அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றன.

மீள் குடியேற்றத்துக்கு முன்பு, போருக்கு முன்பு, மக்கள் தங்களின் உழைப்பினாலும் முயற்சியினாலும் தங்கள் வாழ்க்கைக்கு ஏற்றமாதிரித் தமது பிரதேசங்களைக் கட்டமைத்து வைத்திருந்தனர்.

ஆனால், போரினால் ஏற்பட்ட பாதிப்புகள் அவர்களுடைய பிரதேசங்களையே முற்றாக அழித்து விட்டன. இதனால், அவர்கள் மீளக்குடியேறும் போது அங்கே வாழ்வதற்குக் கடினமாக உள்ளது.

இந்த நிலையில், உட்கட்டுமானத்தை நாம் விரைவாக நிர்மாணிக்கும்போதே மீள்குடியேற்றம் சாத்தியமாகிறது.

இன்னும் பல பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர்.

கிளிநொச்சி நகரில் பரவிப்பாஞ்சான் என்ற பகுதி மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. இந்தப் பகுதியைச் சேர்ந்த சில குடும்பங்கள் கனகபுரம் கிராம அலுவலர் பிரிவில் மாவட்டச் செயலகத்தினால் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாமில் (06 குடும்பங்கள்) ஓராண்டுக்கும் மேலாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி நகரப்பகுதியைச் சேர்ந்த கிராம அலுவலரே தன்னுடைய வீட்டில் இன்னும் குடியேற முடியாதிருக்கிறார்.

ஆகவே, இந்தப் பரவிப்பாஞ்சான் பகுதி மக்களை அவர்களுடைய சொந்த சொந்த இடங்களில் மீளக்குடியேற்றவதற்கான நடவ டிக்கைகளைத் துரிதமாக எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இந்த மக்களை அவர்களுடைய வீடுகளில் குடியமர்த்துவதில் தாமதம் ஏற்படுவதற்கான நியாயமான காரணங்கள் ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், அவர்கள் இன்னும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பவில்லை என்பது மட்டும் உண்மை.

இவர்களை மீளக் குடியமர்த்த வேண்டிய பொறுப்பை மீள்குடியேற்ற அமைச்சு ஏற்று விரைவில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன்.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில வேம்பொடுகேணி, இத்தாவில், முகமாலை போன்ற இடங்களிலும் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. இத்தாவில், முகமாலை ஆகிய இரண்டு கிராமஅலுவர் பிரிவுகளிலும் பகுதி அளவில் மட்டுமே மக்கள் மீள்க்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அங்கு கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அந்த மக்களை இன்னும் மீள்க்குடியேற்ற முடியாத நிலைமை இருக்கின்றது. ஆகவே, விரைவான கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கையினூடாக அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் அவர்களைத் தங்களுடைய சொந்த மண்ணில் குடியேறுவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதையும் நான் இங்கு வலியுறுத்திக் கூறுகிறேன்.

போர் முடிந்த பின்னர் தாங்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி மகிழ்ச்சியாக வாழமுடியும் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்த்த மக்களுக்கு இன்று கிடைத்திருப்பது ஏமாற்றமே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட இந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினையைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளாமல் எழுந்தமானமாக அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். நடைபெற்று முடிந்த போரின் காரணமாக காணியற்ற நிலையில் இருக்கும் 20 சத வீதமானவர்களின் காணிப்பிரச்சினைக்கு இதுவரையில் தீர்வு காண முடியவில்லை. இப்பொழுது இவர்களுக்கான புதிய காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. அது துரிதப்படுத்தப்பட வேண்டும்.

இந்த நிலைமையைக் கருத்திற் கொண்டு, அரசாங்கம் முன்னெடுத்த காணி விவகாரம் தொடர்பான நடவடிக்கையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முடக்கியிருந்தனர். அதன் பின்னர் தற்போதே, காணியற்ற மக்களுக்குக் காணிகளைப் பகிர்ந்து அளிப்பது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கே நான் ஒரு விடயத்தைப் பெருமையுடன் கூற விரும்புகிறேன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இயக்கச்சி என்ற இடத்தில் காணியற்ற நிலையில் இருந்த 48 குடும்பங்களின் நிலைமையைக் கருத்திற் கொண்டு, சுரேஸ் மேதர் என்ற தனியார் ஒருவரிடம் ஒருதொகை காணியை அன்பளிப்புச் செய்யும்படி கேட்டிருந்தோம். அவரும் எமது வேண்டுகோளுக்கிணங்கி, பெருந்தன்மையுடன் தனது 15 ஏக்கர் பரப்பளவு விஸ்தீரணமுடைய காணியை அந்த மக்களுக்கு அன்பளிப்புச் செய்திருந்தார்.

இதனையடுத்து, அந்தப்பகுதியில் தங்கள் வாழ்நாளிலேயே காணியில்லாத நிலையில் இருந்த 45 குடும்பங்களுக்கு கர்ணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு, சுவிஸ் வீடமைப்புத்திட்டத்தின் மூலம் புதிய அழகிய வீடுகளும் நிர்மாணித்து வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்கே முன்பள்ளி ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.



இலங்கை விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த விழாவில் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் அவர்களையும், மேற்படி சங்க நிர்வாக உறுப்பினர்களையும் காணலாம். (பா)

## திருட்டுச்சம்பவங்கள் தென்மராட்சியில் அதிகம்

### சந்தேக நபர்கள் கைது

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 2பேர் அடையாளம் காணப்பட்டனர். சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்கள் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அடையாள அணிவகுப்பிற்கு உத்தர விடப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் அடையாள அணிவகுப்பில் 5பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## சொகுசுக்கார் கடத்தல் திருநெல்வேலியில் பரபரப்பு

### சூத்திரதாரி மடக்கிப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப்பகுதியில் 12இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கார் ஒன்று கடத்தப்பட்டது சம்பந்தமாக கோப்பாய்ப் பொலிஸில் முறைப்பாடு ஒன்று கடந்த புதன்கிழமை பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். இந்த முறைப்பாட்டை அடுத்து நடவடிக்கையில் இறங்கிய கோப்பாய்ப் பொலிஸார் அந்தக்காரை மீட்டதுடன், சந்தேக நபரைக் கைது செய்து யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதனை அடுத்து அவரை இரண்டு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல யாழ்.நீதவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளதாகவும் பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் முறைப்பாட்டுக்காரர் மூன்றாம் கட்டை கொக்குவிலைச் சேர்ந்தவர் எனவும் சந்தேகநபர் திருகோணமலையைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை அரியாலை நெடுங்குளம் பகுதியில் வீடு ஒன்று உடைக்கப்பட்டு ஆறு இலட்சத்து 75ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போயிருப்பதாகவும் அன்றையதினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் இந்தத்திருட்டுத் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் எனினும் சந்தேக நபர் இருவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் பத்திரிகையாளர் சந்திப்பில் தகவல் தெரிவித்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் கடந்த வாரம் யாழ்.மற்றும் காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவுகளில் பெருமளவு காசோலை மோசடி சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இதில் கடந்த 19ஆம் திகதி யாழ்.ஜும்மா பள்ளிப்பகுதியில் இரண்டு இலட்சத்து 30ஆயிரம்ரூபா காசோலை மோசடி சம்பவம் ஒன்று நடைபெற்றிருப்பதாக கடந்த புதன்கிழமை யாழ்.பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் இந்தச் சம்பவத்தில் சந்தேகநபர் கைதுசெய்யப்படவில்லை. நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன், கடந்த 14ஆம் திகதி யாழ். நகர்ப்ப குதியில் 23இலட்சம் ரூப்ா காசோலை மோசடி சம்பவம் ஒன்று நடைபெற்றிருந்ததனை அடுத்து அதுகுறித்து யாழ். பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்து விட்டு அதற்கு கொடுத்த காசோலையை மோசடி செய்துள்ள ஒருவர்கைது செய்யப்படவில்லை நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளதுடன் இவ்வாறு மேலும் பல காசோலை மோசடிச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## சுயாதீன விசாரணை வேண்டும் பிரித்தானிய தொழிற்கட்சி விடாப்பிடி

யுத்தக் குறறச் செயல்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென பிரித்தானிய நிழல் வெளிவிவகார செயலாளர் டக்ளஸ் அலக்சான்டர் தெரிவித்துள்ளார். அலக்சான்டர் பிரித்தானிய தொழிற் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தில் நண்பர்களையும் சொந்தங்களையும் இழந்த அனைத்து தரப்பினரும் அமைதியான முறையில் முன்னேற வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிக்குமாறு இலங்கையை பிரித்தானிய வலியுறுத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை இதற்கான கருவியாகப் பிரித்தானிய அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ள முடியம் என அவர் தெரிவித்துள்ளார்.

## பூநகரிக்கோட்டத்தில் தமிழ்மொழித்தின விழா

பூநகரிக் கோட்டமட்ட தமிழ் மொழித்தின விழா நாளை 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணி தொடக்கம் பூநகரி நல்லூர் மகாவித்தியாலய மண்டபத்தில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.தருமரத்தினம் தலைமையில நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ள உள்ளார். அரங்க நிகழ்வுகளான நடனம், நாடகம், நாட்டுக்கூத்து, கிராமிய இசை போன்ற நிகழ்வுகள் போட்டி நிகழ்வுகளாக அன்றையதினம் இடம்பெறவுள்ளதாக விழாச் செயலாளர் தெரிவித்தார். (112)

# க.பொ.த (சாதாரணதர) மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்

## விஞ்ஞானம்

ஆசிரியர் :
A.M. சந்திரசேகர்

1) இலங்கைத் தீவின் காடுகள் தளபாடதேவை, யுத்தம், குடியேற்றத் திட்டம் காரணமாக அழிக்கப்படுகிறது. இதனால் பாரிய எதிர் விளைவுகள் ஏற்படுகிறது. இதன் ஒரு கட்டமே மழைவீழ்ச்சி குறைதல் ஆகும். இதன காரணமாக மின்சக்தி நெருக்கடி இலங்கையில் ஏற்பட்டது. இதனால் பாரிய பொருளாதார நெருக்கடிகளும் ஏற்பட்டன. அதுமட்டுமல்லாது வீடுகளில் இரவில் குப்பி விளக்குப் பாவனை காரணமாக பாரிய விபத்துக்களும் உண்டாகியுள்ளது.

அ) காடுகளை வளர்க்க இலங்கையில் நடப்படும் இரு தாவரங்கள் தருக.

ஆ) மேலே பந்தியில் குறிப்பிடாத காடுகளை அழிப்பதால் ஏற்படும் ஆபத்துக்கள 2 தருக.

இ) நீர் மூல மின்சக்தியால் ஏற்படும் நன்மைகள் 2 தருக.

ஈ) இலங்கையில் சக்தி நெருக்கடி தீர்வுக்கு நிலக்கரி மூலம் மின் உற்பத்தி சிறந்தது என்கின்றனர். இதன் மூலம் ஏற்படும் 2 நன்மைகளும், 2 பிரதிகூலங் களும் தருக.

உ) மின்விளக்குகளை விட குப்பி விளக்கில் பிரகாசம் குறைவு. பிரகாசம் கூட்ட நீர் யாது செய்வீர்?

ஊ) குப்பி விளக்குகளால் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கும் இரு முறைகள் தருக.

எ) குப்பி விளக்கு எரியும்போது உண்டாகும் சடப்பொருள் அற்ற விளைவுகள் 2 தருக.

ஏ) மண்ணெண்ணெயில் $C_{18}H_{38}$ என்ற ஐதரோகாபன் உண்டு இது புரண தகனம் அடையும் போது நிகழும் சமன்பாட்டைத் தருக.

ஐ) (ஏ) யில் நீர் காட்டிய விளைவுகளில் ஒன்றை பரிசோதனை மூலம் எப்படிக் காட்டுவீர்.

ஒ) குப்பி விளக்கில் உள்ள மண்ணெய் மின்கடத்துமா கடத்தாதா என எப்படிப் பரிசோதனை மூலம் காட்டுவீர்.

ஓ) குப்பி விளக்கில் 0.002m உயரத்தில் மண்ணெண்ணெய் உண்டு. மண்ணெண்ணையை குப்பிவிளக்கின் அடி மீது தாக்கும் அமுக்கம் யாது? (மண்ணெண்ணைய் அடர்த்தி 900 $kg/m^3$)

ஔ) மண்ணெண்ணெய் அடர்த்தி 900$kg/m^3$ என்பதால் நீர் விளங்குவது யாது?

**02) ஒரு மாட்டு வண்டி $0.5m/s^2$ என்ற ஆர்முடுகலுடன் 60 செக்கன் பயணம் செய்தது. தொடர்ந்து 2 நிமிட நேரம் சீரான வேகத்தில் சென்றது.**

அ) உச்ச வேகம் யாது?

ஆ) இதற்கு வேக நேர வரைபை வரைக.

இ) வண்டியின் திணிவு 80 Kg ஆயின் ஆர்முடுகலுடன் செல்கையில் பாவித்த விளையுள் விசை யாது?

ஈ) வண்டி சென்ற மொத்தத் தூரம் யாது?

உ) வண்டியின் இடைக்கதி யாது?

ஊ) எந்நேர இடைவெளியில் விளையுள் விசை பூச்சியம்? காரணம் தருக.

எ) வண்டியின் திறன் 80% எனக் கணிக்கப்பட்டது. திறன் 100% ஆகக் காணப்படாமைக்குக் காரணம் யாது? திறனைக் கூட்ட நீர்மேற்கொள்ளும் 2 நடவடிக்கைகள் தருக.

ஏ) மாட்டுவண்டியின் திறன் மோட்டார் வாகனத்தை விட உயர்ந்தது. இதற்குக் காரணம் ஒன்று தருக.

**03) $B_1B_2B_3$ மின்குமிழ்கள் இணைந்த விதம் காட்டப்பட்டுள்ளது.**




அ) $R_1$ இன் பெறுமானம் யாது?
ஆ) $B_1$ குமிழ் உருகிவிடின் மற்றைய குமிழ்களுக்கு யாது நிகழும்?
இ) $B_2$ குமிழ் உருகிவிடின் $B_1B_2$ பிரகாசத்துக்கு யாது நிகழும்?

ஈ) $B_1$ அகற்றப்பட்டு 8V, 2A எனக் குறிக்கப்பட்ட இரு மின்குமிழ்கள் $B_4B_5$ தரப்பட்டால் இக்குமிழ்களை எப்படி இணைப்பீர் எனக் காட்டுக.

உ) ஒரு தடையை கணிப்பின் மூலம் பெறும் பெறுமானமும், பரிசோதனை மூலம் பெறும்பெறுமானமும் வேறுபடலாம். இதற்குக்காரணம் 2 தருக.

ஊ) $B_1$ குமிழ் 20 நிமிடம் ஒளிரும்போது உண்டாகும் சக்தியின் பெறுமானம் யாது?

எ) ஒரு கம்பியினூடு செல்லும் மின்னோட்டத்தை கூட்ட நீர் மேற்கொள்ளும் இரு நடவடிக்கைகள் தருக.

**04) தாவரங்களின் விளைச்சலைக் கூட்ட வளமாக்கி இடல் வேண்டும். வளமாக்கி மூலம் முப்போசனை மூலகங்கள் கிடைக்கும். செயற்கை வளமாக்கி இடுவது மூலம் மூடிய விளைச்சலை விரைவாகப் பெற்றாலும் அதன் மூலம் உகப்பற்ற விளைவுகளும் ஏற்படும்.**

அ) முப்போசனை மூலகங்கள் எவை?

ஆ)என்பு,சாணம், சாம்பல் மூலம் பெறப்படும் மூலகங்கள் யாவை?

இ) யூரியா இடப்பட்ட மண்ணுக்கு சாம்பல் சேர்க்கக்கூடாது காரணம் தருக.

ஈ) செயற்கை வளமாக்கி மூலம் கிடைக்கும் 2 நன்மைகள் 2 தீமைகள் தருக.

உ) வளியில் உள்ள நைதரசன் மண்ணை அடையும் 3 முறைகள் தருக.

ஊ) யூரியாவின் சூத்திரம் $(CO(NH_2)_2$ இதில் உள்ள நைதரசனின் வீதம் யாது?

எ) நைதரசன் வளம் குறைந்த மண்ணில் உள்ள நெற்பத்திசு தாவரம் பூச்சிகளை உணவாக உள்ளெடுக்கும். இதனால் பெறப்படும் பயன் யாது?

**05) தரப்பட்ட அமைப்பு பொன்னிலை மின்காட்டியின் அமைப்பு ஆகும்.**




அ) A,B,C,D ஐ பெயரிடுக.

ஆ) பொன்னிலை மின்காட்டியில் இலை சாதாரண நிலையில் ஏன் குவிவாக உள்ளது.

இ) A யில் நேர் ஏற்றம் மட்டும் இருக்க யாது செய்வீர்?

ஈ) A யில் நேர் ஏற்றம் மட்டும் இருக்கும் போது D என விரியும்.

உ) பொன்னிலை மின் காட்டியின் பயன் யாது?

2) அ) எளிய கலத்தில் சிறிது நேரத்தில் மின்குமிழ் பிரகாசம் ஏன் குறையும்
ஆ) மின்குமிழ் பிரகாசத்தைக் கூட்ட யாது செய்வீர்?

3) அ) சைக்கிள் டைனமோவுக்கும் வீட்டு ஆடலோட்ட டைனமோவுக்கும் இடையில் உள்ள வேறுபாடு யாது?
ஆ) ஆடலோட்டம், நேரோட்டம் ஆகியவற்றிடையே உள்ள வேறுபாடு யாது?
இ) ஆடலோட்டம் மூலம் மட்டும் ஒளிர்வது மின்குமிழா. புனொரொளிர்வு குழாயா?
ஈ) ஒரு டைனமோவில் மின்னோட்டத்தைக் கூட்ட யாது செய்வீர்?

**06)**

அ) வெங்காய கல உரிப்புக்கும், வாய்குழி மேலணிக்கலத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் 2 தருக.

ஆ) பின்வரும் இழையங்களின் தொழில் யாது?
1) மேலணி இழையம் 2) தொடுப்பிழையம்
3) வன்கூட்டிழையம்

இ) செங்குருதிச் சிறுதுணிக்கை, வெண்குருதிச் சிறுதுணிக்கை ஆகியவற்றின் ஒவ்வொரு தொழில்கள் தருக.

ஈ) குருதிப்பரிமாற்றம் செய்யும்போது எடுக்கும் முக்கிய கவனிப்புகள் 2 தருக.

உ) பொது வழங்கி என்றால் யாது?

ஊ) மழமழப்பான தசைக்கும், வன்கூட்டுத் தசைக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் 2 தருக.




எ) உருளைக்கிழங்கினுள் நீர் விடப் பட்டுள்ளது. சிறிது நேரத்தில் நீர் மட்டத்திற்கு யாது நிகழும்.

2) இங்கு ஒரு பங்கீடு புகவிடும் சவ்வு யாது?
ஏ) நீர், உணவை தாவரத்தில் கடத்தும் இழையங்கள் யாவை?

ஐ) இருவித்திலை தாவரத்தண்டின் சுற்றளவு அடியிலிருந்து மேல்நோக்கி செல்லும் போது ஏன் குறையும்?

**07)** 1. அ) தாவரக்கிளையை ஏன் நீரினுள் வைத்து வெட்ட வேண்டும்.

ஆ) மயிர்த்துளைக்குழாயில் உள்ள இரசம் விரைவாக ஏற நீர் மேற்கொள் ளும் நடவடிக்கைகள் 2 தருக.




2) அ) நெம்புவகைகள் யாவை? உதாரணத்துடன் தருக.
ஆ) வளிமண்டலம் எல்லாப்பொருட்களையும் அமுக்கும் என காட்டுவீர்
இ) உமக்கு கடல் நீரும் நன்னீரும் தரப்பட்டால் அடர்த்தி கூடியது கடல் நீர் என்பதை எப்படி பரிசோதனை ரீதியாக காட்டுவீர்.

3)
அ) இரத்தினக்கல் பல்வேறு நிறங்களில் காணப்படக் காரணம் யாது?
ஆ) இரத்தினக்கற்கள் ஒளிரக் காரணம் யாது?
இ) சிமெந்து தயாரிப்பில் பயன்படும் பிரதான மூலப்பொருள்கள் யாவை?
ஈ) கடற்கரைப் பகுதியில் உள்ள மண் கறுப்பாக இருக்க காரணம் யாது?

உ) நீறாத சுண்ணாம்பு தயாரிப்பில் பயன்படும் மூலப்பொருள்கள் யாவை?
ஊ) சூலை மூலம் நீறாத சுண்ணாம்பு தயாரிக்கும்போது உள்ள குறைபாடுகள் 2 தருக.
எ) நீறிய சுண்ணாம்பின் பிரயோசனங்கள் 2 தருக.

**08) விஞ்ஞான விளக்கம் தருக**

அ) ஓரிடத்திலிருந்து தாவரங்களை இன்னொரு இடத்தில் நடும்போது இலைகள் வெட்டப்படும்.
ஆ) சேற்று நிலத்தில் ஏணியை வைக்கும்போது பலகைவகை வைக்கப்படும்.
இ) நீர் தேக்கங்களின் அணைக்கட்டின் அடிப்பகுதி அகலமாகவும் மேல்பகுதி ஒடுங்கியும் இருக்கும்.
ஈ) மயலின் கவசம் இருக்கும் நரம்பு முளைகள் சிறந்தது.
உ) மஞ்சள் பூசிய துணிக்கு சவர்க்காரம் சேர்த்தபோது சிவப்பு நிறமாகியது மீண்டும் நீரினால் கழுவ மஞ்சள் நிறமாக மாறும்.
ஊ) சோடியம் குளோரைட்டின் கரைசலின் கொதிநிலை கூட...?

**09)**

அ) மிளகாய்ப்பூவின் பின்வரும் பகுதிகளின் தொழில் யாது?
1) அல்லி 2) புல்லி 3) குறி
ஆ) தன்மகரந்தச் சேர்க்கையை தவிர்த்து அயன் மகரந்தச் சேர்க்கையை மேற்கொள்ளும் முறைகள் 2 தருக.
இ) மிளகாய்ப்பூவில் நடைபெறும் அயன் மகரந்தச் சேர்க்கையை மேற்கொள்ளும் முறைகள் 2 தருக.
ஈ) மகரந்தமணி குறியில் விழுந்து கருக்கட்டல் ஆரம்பமாகும் வரை நடைபெறும் செய்முறையை படம் மூலம் காட்டுக.
உ) கருக்கட்டலின் பின் பின்வருவனவற்றிற்கு யாது நிகழும்
1) சூலகம் 2) சூல்வித்து
3) சூல்வித்தின் நுண்துவாரம் 4) கருக்கட்டிய முட்டைக்கரு

ஊ) மிளகாய் வித்துக்களை விதைத்தபோது 25% வித்துக்கள் முளைக்க வில்லை. இதற்கான காரணங்கள் 2 தருக.
எ) செயற்கை முறை இனப்பெருக்கத்திற்கு உதாரணம் 2 தருக.

**10)**

அ) ஒளித்தொகுப்பில் இலை ஒன்றை தொழிற்சாலைக்கு ஒப்பிட்டால் பின் வருவனவற்றை எவற்றிற்கு ஒப்பிடலாம்.
1) ஒளி 2) பச்சையம் 3) $CO_2$ 4) நீர்
ஆ) தாவரம் ஒன்று எடுக்கப்பட்டு ஒரு இலை கறுப்புத்தாளினால் மூடப்பட்டது. மற்றை இலை மூடப்படவில்லை பின்பு இலை ஒளித்தொகுப்பு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.
1) இப்பரிசோதனையில் உள்ள குறைபாடு யாது?
2) மாப்பொருள் பரிசோதனையின் படிமுறைகளை ஒழுங்குமுறையில் காரணங்களுடன் தருக.
3) இரு இலைகளிலும் மாப்பொருள் பரிசோதனையில் யாது அவதானிப்பீர்? காரணம் தருக.
இ) ஒருவர் இடியப்பமும் சம்பலும் உண்டார்.
1) இடியப்பம் சம்பலில் உள்ள உணவு யாது?
2) மேற்கூறிய உணவை உண்பதால் ஏற்படும் ஒரு பாதிப்பை கூறுக.
3) சம்பலில் உள்ள உணவை எப்படி சோதித்து அறிவீர்?
4) இடியப்பம் சமிபாட்டின் பின் குளுக்கோசு ஆகமாறும். இதன் சூத்திரம் யாது?
5) குளுக்கோசு தாழ்த்தும் வெல்லம் என்பதை எப்படி பரிசோதனை மூலம் காட்டுவீர்

## பகுதி I

1) கலம் ஈன்ற பதத்தை முன்வைத்த விஞ்ஞானி
1) ஷெிலைடன் 2) றொபேர்ட்குக்
3) சுவான் 4) சாள்ஸ் டார்வின்

2) மனிதக் கண்ணின் பரிவலு
1) 0.1 mm 2) 0.1 mm
3) 0.01mm 4) 0.02mm

3) கரு அற்ற கலம் அல்லாதது
1) தாவரக்கலம் 2) குருதிச்சிறுதட்டு
3) இறந்த கலங்கள் 4) முலையூட்டிகளின் செங்குழியக்கலம்

4) தனிக்கல அங்கிகள்
A - அமீபா B - கிளைமிடோமோனசு C- யூக்கிளினா
1) A மட்டும் 2) BC 3) AB 4) A,B,C எல்லாம்

5) ஒளிநுணுக்குக்காட்டி பற்றிய தவறான கூற்று.
1) கட்புல ஒளி அலைகள் பயன்படுத்தப்படுகின்றன.
2) விம்பத்தை நேரடியாக கண்களால் அவதானிக்கலாம்.
3) இறந்த மாதிரிகளை அவதானிக்க முடியும்.
4) ஒளிக்கதிர்களை குழிவு வில்லையால் குவிக்க முடியும்.

6) இலத்திரன் நுணுக்குக்காட்டி பற்றிய சரியான கூற்று.
A - இறந்த மாதிரிகளை மட்டும் இதனூடாக அவதானிக்க்லாம்
B - நிறவிம்பங்களை அவதானிக்கலாம்
C - குவிவு வில்லைகள் பயன்படுத்தப்படும்.
1) A மட்டும் 2) B மட்டும் 3) C மட்டும் 4) A,B மட்டும

7) தாவரக்கலங்களில் மட்டும் காணப்படும் விலங்குக் கலங்களில் காணப்படாத கலப்புன்னங்கம் எது?
1) இழைமணி 2) பச்சயவுருமணி
3) குழியவுரு 3) கலமென்சவ்வு

8) கலமென்சவ்வில் காணப்படும் கூறுகள்
A - நியூக்கிளிக்கமிலம் B - காபோவைதரேற்
C - புரதம்
1) A மட்டும் 2) A, B - மட்டும் 3) B,C மட்டும் 4) A,B,C எல்லாம்

9) கலமென்சவ்வினூடாக பதார்த்தம் பரிமாற்றம் அடையும் முறை அல்லாதது.
1) பரவல் 2) மேற்காவுகை
3) பிரசாரணம் 4) பிரசாரண அமுக்கம்

10) இரட்டை மென்சவ்வினால் ஆன புன்னங்கம் அல்லாதது.
1) கரு 2) இழைமணி
3) பச்சயவுருமணி 4) கொல்கி உபகரணம்

11) கரு நுண்துளையின் தொழில்
1) கலக் கழிவுப் பதார்த்தங்களை வெளியேற்றுவதில் உதவுதல்.
2) தேர்ந்து புகவிடும் சிறப்பியல்பை கொண்டிருத்தல்.
3) கருவிற்கும் குழியவுருவிற்கும் இடையே பதார்த்தங்களை பரிமாறல்
4) கலப் பிரசாரணச் சமனிலையை பேணுதல்.

12) கலச்சுவாசத்திற்கு உதவும் புன்னங்கம்
1) பச்சயவுருமணி 2) இழைமணி
3) றைபோசோம் 4) கரு

13) அதிகளவு இழைமணிகள் காணப்படும் கலம்
1) வன்கூட்டுத்தசை 2) புடைக்கலவிழையம்
3) இதயத்தசைக்கலம் 4) செங்குழியங்கள்

14) கலச்சுவர் ஆக்கப்பட்டுள்ள பதார்த்தங்கள்
A - மோல்ரோசு B- செலுலோசு
C- அரைச்செலுலோசு D - பெக்ரின்
1) A,B,C 2) A,D,C
3) B,C,D 4) A,B,C,D

15) கொல்கியுடலின் தொழில் அல்லாதது
1) கலத்தக சமிபாட்டை மேற்கொள்ளல்
2) Lysosome களை ஆக்குதல்
3) பொஸ்கோ லிப்பிட்டுக்களை தொகுத்தல்
4) பதார்த்தங்களை சேகரித்தல்.

16) Ribosome களின் தொழில்
1) நச்சு நீக்கல் 2) Lysosome களை ஆக்குதல்
3) புரதத் தொகுப்பு 4) பதார்த்தங்களை பொதி செய்தல்

17) பின்வரும் கூற்றுக்களில் தவறானது
1) கரு சகல கலத்தொழிற்பாடுகளையும் கட்டுப்படுத்துகிறது.
2) மனித்னில் உள்ள நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை 23 சோடி
3) இழைமணியின் தாயத்தில் வளைய வடிவான DNA காணப்படுவதிலலை.
4) விழிவெண் படலங்களில் இழைமணிகள் காணப்படுவதில்லை.

18) பின்வரும் கூற்றுக்களில் சரியானது
1) கலமென்சவ்வின் கட்டமைப்பு மாதிரி றொபேட்குக்கால் விவரிக்கப்பட்டுள்ளது.
2) Lysosome களின் தொழில் கலத்திலுள்ள வினைத்திறன் குறைந்த புன்னங்கங்களை அழித்தல்.
3) புன்மையத்தியில் நொதியத்தை தொகுக்கிறது.
4) புன்வெற்றிட சாற்றில் வெல்லங்கள் காணப்படுவதில்லை.

19) கருவின் தொழில் அல்லாதது
A - RNA வகைகளை உற்பத்தி செய்தல்
B - கலப் பிரசாரணச் சமனிலையைப் பேணுதல்
C - பாரம்பரிய செய்திகளின் களஞ்சியமாக காணப்படுகிறது
D - கலப்பிரிவின் போது கதிர்நார்களை உற்பத்தி செய்கிறது
1) A,B 2) A, D 3) B,D 4) A,B,D

20) பின்வருவனவற்றுள் தவறான கூற்று
A - புன்வெற்றிடச் சாற்றில் கனியுப்புக்கள், நீர், சாற்று நிறப்பொருட்கள் காணப்படுகின்றன.
B - நிறமூர்த்தங்கள் DNA மூலக்கூறைக் கொண்டிருப்பதில்லை.
C - புன்வெற்றிடத்தை எல்லைப்படுத்தப்பட்ட மென்சவ்வு கலமென்சவ்வு
1) A,B 2) A,C 3) B,C 4) A,B,C

21) புடைக்கல விழையம் பற்றிய கூற்றுக்களின் தவறானது
1) உயிருள்ள கலங்கள்
2) கலத்திடை வெளிகள் உடையவை
3) கலச்சுவர் மூலைகள் தடிப்படைந்து காணப்படும்.
4) கோள அல்லது நீண்ட வடிவமுடையவை.

22) ஒட்டுக்கல விழையத்தின் தொழில்
1) ஆதாரம் அளிக்கும் இழையமாக தொழிற்படல்
2) நீர், கனியுப்புக்களை அகத்துறிஞ்சல்
3) பக்கவேர்களை பிறப்பித்தல்
4) வாயுப்பரிமாற்றம் செய்வதில் உதவுதல்

23) காழ்இழையம் ஆக்கப்பட்டுள்ள கலவகைகள் அல்லாதது.
1) குழற்போலி 2) ஒட்டுக்கல் விழையம்
3) காழ்க்கலன் 4) காழ்புடைக்கல விழையம்

24) காழ் நார்களின் தொழில்
1) பொறிமுறை ஆதாரம் அளித்தல்
2) நீர்கனியுப்புக்களை கடத்தல்
3) உணவு சேமித்தல்
4) வாயுப்பரிமாற்றம் செய்வதில் உதவுதல்

25) குருதி உறைதலிற்கு அவசியமான காரணி
1) விற்றமின் B 2) $Mg^{2+}$
3) புரோத்துரோம்பின் 4) விற்றமீன் E

# நாடாளுமன்றத்தேர்தலில் "ஹட்ரிக்"

## காங்கிரஸ் கட்சி கடும் முயற்சி



(சென்னை)

நாடாளுமன்றத் தேர்தலில் 'ஹாட்ரிக்' வெற்றி பெற வேண்டும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கடந்த சில மாதங்களாக பல திட்டங்களை தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். நேரடி மானிய உதவி மூலம் ஏழைகள் மற்றும் நடுத்தர மக்களின் மனதில் இடம் பிடித்து வாக்குகளை அள்ளிவிடலாம் என்று மன்மோகன்சிங்கும், ப.சிதம்பரமும் முயற்சி செய்துவருகின்றார்கள்.

ஒவ்வொரு மாநிலத்திலும் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ராகுல்காந்தி மெகா சர்வே ஒன்றை நடத்தி முடித்து இருக்கிறார். காங்கிரஸ் கட்சி பலவீனமாக இருக்கும் தொகுதிகள் பற்றி அவர் கடுமையாக விவாதித்து வருகிறார். மற்றொரு பக்கத்தில் பெரும்பாலான தொகுதிகளுக்கான காங்கிரஸ் வேட்பாளர்களை அவர் தேர்வு செய்து வைத்துவிட்டார்.

நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே எந்த நேரத்திலும் தேர்தல் வரலாம் என்பது எல்லாரது எதிர்பார்ப்பாக உள்ளது. அப்படி தேர்தல் வந்தால், அது காங்கிரஸ் கட்சிக்கு மிகப் பெரும் சரிவையும், வீழ்ச்சியையும் ஏற்படுத்திவிடக்கூடும் என்று அரசியல் நிபுணர்கள் கணித்துள்ளனர். அது தொடர்பான தகவல்களையும் புள்ளி விவரங்களுடன் அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

இந்தியச் செய்திகள்

2004 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் தேர்தல் நடந்த போது, பல மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்கு சாதகமான ஒரு சூழ்நிலை இருந்தது. அதிலும் பல பெரிய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்கு மிகச் சரியான கூட்டணி அமைந்தன. அந்த சூழ்நிலை தற்போது முற்றிலும் மாறிவிட்டது. பெரும்பாலான மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி மீது எதிர்ப்பு அலை வீசிக் கொண்டிருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு கட்சி அதிக இடங்களை கைப்பற்ற வேண்டுமானால் உத்தரபிரதேசம், பீகார், ஆந்திரா, தமிழ்நாடு, மேற்கு வங்கம் போன்ற பெரிய மாநிலங்களில் அதிக இடங்களில் வெற்றி பெற வேண்டியது அவசியமாகும். இந்த மாநிலங்களில் தற்போது மாநிலக் கட்சிகளே அதிக செல்வாக்குடன் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சித்தார்த் - சமந்தா காதலுக்குத் தடை



சித்தார்த்தும், சமந்தாவும் உருகி உருகி காதலிச்ச, நடிச்ச படத்துக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. தெலுங்கு இயக்குநர் நந்தினி ரெட்டி இயக்கி கடந்த மாதம் வெளியான படம் 'ஜபர்தஸ்த்'. சித்தார்த், சமந்தா நடித்துள்ளனர். ரொமாண்டிக் காமெடி படம். இந்தப் படத்தை தமிழில் 'டும் டும் பீ பீ' என்ற பெயரில் லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் ரீமேக் செய்கிறார்கள்.

தெலுங்கில் ஜபரதஸ்தை தயாரித்த ஸ்ரீ சாய் கணேஷ் நிறுவனம், அதன் இயக்குநர் நந்தினி ரெட்டி, தமிழில் ரீமேக் செய்ய உள்ள திருப்பதி பிரதர்ஸ் நிறுவனம் மீது யாஷ் ராஜ் பிலிம்ஸ் என்ற இந்தியப்படத் தயாரிப்பு நிறுவனம் டில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. 'ஜபர்தஸ்த்' நாங்கள் தயாரித்த 'பாண்ட் பஜா பரத்' என்ற படத்தின் கதையை தழுவித்தான் ஜபர்தஸ்த் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, படத்தின் டிவிடி, தொலைக்காட்சி உள்ளிட்ட எதிலும் திரையிட தடைவிதிக்க வேண்டும் என்று அவர்கள் நீதிமன்றதில் கூறினார்கள். இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் ஜபர்தஸ்த் டி.வி.டி உள்ளிட்ட எந்த வடிவத்தில் வெளியிடவும், அதை தமிழில் ரீமேக் செய்யவும் தடை விதித்துள்ளது. இதனால் டும் டும் பீ பீயில் காதல் செய்யலாம் என்றிருந்த சித்தார்த், சமந்தா காதலுக்கு நீதிமன்றம் தடை விதித்து விட்டது.

## 50இலட்சம் கேட்ட நடிகை விசாகா!



பிடிச்சிருக்கு படத்தில் அறிமுகமான விசாகா, கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்துக்குப்பிறகு தமிழில் முன்னணி நடிகையாகி விடுவார் என்றுதான் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஆரம்பத்தில் அவரைத் தொடர்பு கொண்ட கம்பனிகளிடம் 50 இலட்சம் சம்பளம் கேட்டு பெரிய அதிர்ச்சி கொடுத்தார் நடிகை. அதனால் இது நமக்கு எட்டாத லட்டு என்று விசாகாவை ஓரங் கட்டினர் படாதிபதிகள். அதையடுத்து சந்தானம், பவர்ஸ்டார் உள்ளிட்ட நடிகர்களின் சிபாரிசை நாடினார் நடிகை. அவர்கள் இருந்த பிசியில் அவரை ஏரெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. அதனால் அப்படத்தில் நாயகனாக நடித்த சேதுவைப்போல விசாகாவும் கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்திருந்தார்.

இந்த சமயம்தான், அஜித்தை தான் இயக்கும் புதிய படத்திற்கு ஒரு நடிகை தேடி வந்தார் சிறுத்தை சிவா. விடயத்தைக் கேள்விப்பட்ட விசாகா விழுந்தடித்து ஓடினார். சென்றவரை பல கோணங்களில் போட்டோ எடுத்து பார்த்த சிவா, ஓ.கே செய்து விட்டார். அதையடுத்து, அஜித்துக்குத்தானே ஜோடி என்று அவர் கேட்டபோது, அஜித்துக்கு ஜோடி இல்லை. ஆனால் ஜோடி மாதிரி என்றார். இதனால் குழம்பிப்போன விசாகா, வேறு நடிகை யாரேனும் படத்தில் இருக்கிறார்களா? என்ற போது, தமன்னா இருக்கிற விவரத்தை சொல்லியிருக்கிறார். அப்படின்னா நாம இரண்டாவது நாயகி மாதிரிதான் என்பதை புரிந்து கொண்ட அவர், அஜித் படத்தில் நடிக்கிறதை வைத்து வேறு படங்களை கைப்பற்றி விடலாம் என்ற நம்பிக்கையில் அடக்கஒடுக்கமாக கமிட்டாகி விட்டார். அதோடு, என்ன சம்பளம் கேட்கிறீர்கள்? என்று கேட்ட போது, மனசுக்குள் இருந்த 50 இலட்சத்தை சொன்னால், கட்அவுட் சொல்லி விடுவார்கள் என்று, நீங்களா பாத்து என்ன கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறேன் என பெருந்தன்மை காட்டினாராம் விசாகா. இதையடுத்து அப்படத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கும் அவர், தெலுங்கு, இந்தி சினிமாக்களில் அஜித்துக்கு ஜோடியாக நடித்துவருகிறார்.

## பாலியல் வழக்கில் சிக்கியவர்கள் தேர்தலில் போட்டியிடத் தடை

பாலியல் வழக்கில் சிக்கியவர்கள் தேர்தலில் போட்டியிடத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக இந்திய தலைமை தேர்தல் ஆணையர் வி.எஸ்.சம்பத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாக்காளர் பட்டியல் தொடர்பாக தமிழ்நாடு தேர்தல் ஆணையர் பிரவீண்குமார் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டு உள்ளது. புதிதாக விண்ணப்பிப்பவர்களுக்கு அடையாளஅட்டை வழங்குவது குறித்து, இணையதளத்தில் வெளியிட கூறி உள்ளேன். இதனால் பொதுமக்கள் தாசில்தார் அலுவலகம், கலெக்டர் அலுவலகம் என்று செல்லத் தேவையில்லை. அவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து விவரமும் அதில் இருக்கும். இதனை நடைமுறைப்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருகிறோம் என கூறினார்.

கடந்த 15 ஆண்டுகளாக தேர்தல் சீர்திருத்தம் குறித்து முயற்சி செய்து வருகிறோம். முன்பு இருந்த சட்ட மந்திரி வீரப்பமொய்லி மும்பை, போபால், பெங்களூர் உள்பட பல இடங்களில் பிராந்திய ஆலோசனை நடத்தினார். இதில் வக்கீல்கள், பொதுமக்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். பின்னர் தேர்தல் சீர்திருத்தம் குறித்து இறுதி அறிக்கை சட்ட கமிஷனுக்கு அனுப்பி உள்ளோம். 3 மாதத்துக்குள் வந்துவிடும். வந்தபிறகு சட்ட சீர்திருத்தம் கொண்டு வரப்படும். இதில் முக்கியமாக பாலியல் பலாத்காரம், கொலை, கற்பழிப்பு போன்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள், குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தேர்தலில் நிற்க தடைவிதிக் கப்படுவதோடுஅச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் பணம் கொடுத்து செய்திகள் வெளியிடுவது வேட்பாளரின் தேர்தல் செலவுக் கணக்கில் சேர்க்கப்படும் என்றார்.




## சசிகலாவின் சகோதரன் கைது



முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருக்கு கொலை மிரட்டல் விடுத்த வழக்கில் சசிகலாவின் சகோதரன் திவாகரன் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டார். திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ரிஷியூர் கிராமத்தில் கஸ்தூரி என்பவரது வீடு இடிக்கப்பட்டது. இது சம்பந்தமான வழக்கு கடந்த ஆண்டு நீடாமங்கலம் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு, சசிகலா சகோதரன் திவாகரன் உடபட சிலரை பொலிஸார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் ஜாமீனில் விடுதலை ஆனார்கள். அந்த வழக்கு தற்போது நீடாமங்கலம் ஜூடீசியல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் திவாகரன் மற்றும் அவரது ஆதரவாளர்களான ரிஷியூர் ஊராட்சி மன்ற தலைவர் கிருஷ்ணமேனன், அதே ஊரைச் சேர்ந்த ராஜேந்திரன் ஆகியோர் ரிஷியூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சோம.தமிழார்வனுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து சோம.தமிழார்வன் நீடாமங்கலம் பொலிஸில் புகார் செய்தார். அதன்பேரில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

அதைத் தொடர்ந்து மன்னார்குடி பொலிஸ் துணை சூப்பிரண்டு அன்பழகன், மாவட்ட குற்றப்பிரிவு துணை சூப்பிரண்டு குணசேகரன் மற்றும் பொலிஸார் மன்னார்குடி அருகே சுந்தரக்கோட்டையில் திவாகரனை நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு அவரது வீட்டில் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட திவாகரன் நீடாமங்கலம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு விசாரிக்கப்பட்டார். பின்னர் அவரை நீடாமங்கலம் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

## வாள் அல்ல சிலுவை

(எசாயா 50 : 4 - 7)
(லூக்கா 22 : 14 - 23, 56)

இது பாடுகளின் வாரம். இயேசுவின் பாடுகளை நாம் நினைவில் கொள்ளும் வாரம். சிலுவையே எங்கள் சிந்தனையின் குலிமையமாய் அமைகின்றது. ஏழை எளியோரின் உரிமைக் கோரலை, கலகத்தை, கிளர்ச்சியை அடக்குவதற்கு அரசவன்முறை அல்லது ஆட்சி வன்முறை உரோம அரசின் வடிவில் யூதாகாரமாகக் காட்சியளித்தது. சிலுவைகள் அவர்களின் இந்த வன்முறையை நினைவுபடுத்தும், எச்சரிக்கும் சின்னங்கள்.

மறுபக்கம் அடக்குமுறை ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஆயுதம் ஏந்துதலே ஒரேவழி, ஆயுதப் புரட்சியே விடுதலைக்கான ஒரே வழி என்ற செலோத்தேயரின் (கலசக்காரரின்) வன்முறை. இந்த வன்முறை இளைஞர்களை ஈர்த்துக்கொண்டிருந்தது. இந்த இரண்டு வன்முறைகளுக்கும் இடையில் சமய ஆட்சிப்பீடத் தலைவர்களின் வன்முறை தலைவிரித்தாடியது. தங்கள் பதவியைக் காத்துக்கொள்ள அவர்கள் எந்த வன்முறையையும் பாவிக்கத் தயங்கவில்லை.

வன்முறைக்குப் பதில் வன்முறையை மேற்கொள்வது அல்லது வன்முறைக்குப் பயந்து அதை எதிர்க்காமல், முகம் கொடுக்காமல் அதற்கு அடங்கிவிடுவது என்பது தான் மக்களின் போக்கு. இது இரண்டுமே இயேசுவின் போக்கு அல்ல.

"வாளை எடுப்போர் அனைவரும் வாளால் அழிந்து போவர்" (மத் 26 : 12) என்ற இயேசுவின் வார்த்தைகள் வன்முறையை சன்முறையால் தான் வெல்லலாம் என்ற வாதத்தின் பேதமையைப் புலப்படுத்துகின்றது. வன்முறையை அன்பு ஒன்றே வெல்லும். தியாகம் ஒன்றே தோற்கடிக்கும் போராடும் அகிம்சை ஒன்றே ஒரேவழி. வன்முறைகளுக்கான பதில் வாள் அல்ல சிலுவை.

வி.பி.தனேந்திரா.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# நீர்வளப்பாதுகாப்பில் ஐ.நா. அதிக கவனம்



பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப அவர்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாமல் உலகநாடுகள் தடுமாறுகின்றன. இத்தேவைகளில் முக்கியமானவை உணவும், தண்ணீரும்தான். இதில ஒரு மனிதனுக்கு 50 முதல் 100 லிட்டர் தண்ணீர் தினமும் தேவைபடுகின்றது என்று உலக சுகாதாரக் கழகம் கணக்கிட்டுள்ளது. முதன்முறையாக, ஐநா அமைப்பு நீர் பாதுகாப்பு குறித்து வெள்ளிக்கிழமை அன்று ஒரு செயல் முறை அறிக்கையை வெளியிட்டுள்ளது. உலக வானிலை மையத் தலைவரும் ஐ.நாவில் நீர்வளம் குறித்த தலைமைப் பொறுப்பில் இருப்பவரும் ஆன மைக்கேல் ஜராட், ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு இணையாக அந்நாட்டின் நீர்வள ஆதாரங்களும் கருதப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மக்களுக்குத் தேவையான நீர் தொடர்ந்து கிடைப்பது, அது குறித்த பிரச்சினைகள் விலக்கப்படுவது, சுற்றுப்புற சூழலைப் பாதுகாத்து நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காகப் பாடுபடுவது பற்றி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உலகில், 145 நாடுகள் தங்களுடைய நீராதாரத்தை அண்டை நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளுகின்றன என்று கூறிய அவர், இதுபோல் உள்நாட்டிலேயே மறைந்து கிடக்கும் 300இற்கும் மேற்பட்ட நீர் ஆதாரங்களை அந்தந்த நாடுகள் தகுந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். 7 மில்லியனாக இருக்கும் மக்கள்தொகை, 2050ஆம் ஆண்டிற்குள் 9 மில்லியனாகப் பெருகக்கூடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தட்பவெப்பநிலை மாறுபாடு பஞ்சம், நோய்கள் போன்ற இயற்கை அழிவுகள் தண்ணீர்ப் பிரச்சினையை அதிகரிக்கின்றன. 2010இல் பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு 2000இற்கும் மேற்பட்ட மக்களைப் பலிவாங்கியது. 2011இல், 1,85,000 சோமாலிய மக்கள் தங்களின் உணவு, நீர்த் தேவைக்காக அண்டை நாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ளனர்.

2012இல், தெற்கு சூடானில் ஏற்பட்ட கலவரத்திற்கு தண்ணீர்ப பிரச்சினையும் ஒரு காரணமாகும். அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் ஏற்பட்ட பற்றாக்குறை உணவுப்பொருட்களின் விலையை உலகளவில் அதிகரிக்கச் செய்தது. தண்ணீரினால் ஏற்படும் நோய்களால் பாதிக்கப்பட்டு, ஆண்டு ஒன்றிற்கு சராசரியாக 3.5 மில்லியன் மக்கள் இறக்கின்றனர்.

பிரேசில், பரகுவே, உருகுவே, ஆர்ஜென்டினா ஆகிய நாடுகள், ஒரு மில்லியன் சதுர பரப்பளவில் அமையப்பெற்ற குவரானி நீர்ப்பரப்பை, தங்களுகுள் எந்தவிதப் பிரச்சினைகளும் இல்லாமல் பகிர்ந்து கொள்வதாக, கடந்த 2010இல் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டதை, மைக்கேல் நீர்ப்பிரச்சினைகளில் ஒரு வரவேற்கத்தக்க முன்னேற்றமாகக் குறிப்பிட்டுள்ளார்.

# அகதிகள் முகாமில் தீ விபத்து 30 பேர் உடல் கருகி மாண்டனர்



தாய்லாந்து அகதிகள் முகாமில் ஏற்பட்ட தீ விபத்தில் 30 பேர் பரிதாபமாக உடல்கருகி பலியாகினர். தாய்லாந்து - மியான்மர் எல்லைப்பகுதியான வடக்கு மாயே ஹாங்சன் மாகாணத்தில் மாயே சூரின் என்ற அகதிகள் முகாம் உள்ளது.

இங்கு மியான்மரில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உள்ளனர்.

இங்கு நேற்று முன்தினம் இரவு திடீரென தீப்பிடித்ததில் 30 பேர் உடல்கருகி பலியாயினர், 200இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். வீட்டில் சமையல்செய்த போது இந்த தீ விபத்து ஏற்பட்டதாகவும், தீ மளமளவென அயல் வீடுகளுக்கும் பரவியதாகவும் கூறப்படுகிறது. எனினும் இதுகுறித்து விசாரணைக்கு அந்நாட்டு உள்துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.



ரஷ்யா வந்திருந்த ஐரோப்பிய யூனியன் குழுத் தலைவர் ஜோஸ் மானுவல் பிரசோ, அந்நாட்டு பிரதமர் டிமெட்ரி மித்வதேவை, மொஸ்கோவில் சந்தித்துப் பேசினார்.

# அமெரிக்க ஜனாதிபதியின் உரையை இடைமறித்த இஸ்ரேல் மாணவன்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பேச்சை இஸ்ரேல் மாணவன் இடைமறித்ததால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மூன்று நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

அங்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு மற்றும் ஜனாதிபதி ஷிமோன் பெரசை சந்தித்த அவர், பாலஸ்தீன ஜனாதிபதி முகம்மது அப்பாசையும், சந்தித்துப் பேசினார். சுற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாக இஸ்ரேல் பல்கலைக்கழக மாணவர்களிடையே ஒபாமா உரையாற்றினார்.

அப்போது பார்வையாளர் அரங்கில் இருந்த ஒரு மாணவர், ஒபாமாவின் உரையை இடைமறிக்கும் வகையில் ஹீப்ரு மொழியில் கோஷமிட்டார். இதனால் அங்கு சலசலப்பு ஏற்பட்டது. அம்மாணவரை அமரச் சொல்லி, மற்ற மாணவர்கள் கூச்சலிட்டனர். எனினும் கோபப்படாத ஒபாமா, நம் விவாதத்தின் ஒரு பகுதி தான் இதுவும். இது நல்ல விஷயம் தான்.

இப்போது தான் நான் சொந்த நாட்டில் இருப்பது போல் உணர்கிறேன். நான் பேசும் போது ஒருவராவது குறுக்கிடா மல் இருந்தால் தான் எனக்கு சங்கடமாய் இருந்திருக்கும் என பதிலளித்தார். அவரது சாமர்த்தியமான பதிலைக் கேட்ட மாணவர்கள் எழுந்து நின்று கைதட்டினர். பாலஸ்தீன விடுதலைக்காகவும், 1987இல் இஸ்ரேலில் உளவு பார்த்ததாக கைது செய்யப்பட்ட ஜொனாதன் பொல்லார்டு என்பவரை விடுவிக்கக் கோரியும். அம்மாணவர் குரல் கொடுத்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன.



உலகச் செய்திகள்

# சிலி கடற்கரையில் அதிசயம் இறந்து மிதக்கும் கடல்வாழ் உயிரினங்கள்



ஆயிரக்கணக்கான இறால்கள் மற்றும் நூற்றுக்கணக்கான நண்டுகள் இறந்து, சிலி கடலோர பகுதிகளில் கரை ஒதுங்கியுள்ளன. சிலி தலைநகரான சாண்டியாகோவிலிருந்து 532 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கோரோணல் கடற்கரையிலே மர்மமான இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்நிகழ்வுக்கு உள்ளூர் மின் உற்பத்தி நிலையங்களே காரணம் என்று சில மீனவர்கள் கூறுகின்றனர். இது சுற்றுச்சூழல் குற்றமாக இருக்கக் கூடும் என்பதினால் காவல்துறையினர் ஆதாரங்களை சேகரித்து வருகின்றனர். மேலும் மீனவர்கள் இதனால் பெரிதும் பாதிப் படையலாம் என்று தெரிகிறது.

சுற்றுச்சூழல் வல்லுநர்கள் நீர் வெப்பநிலை, ஆக்ஸிஜன் அளவு போன்றவற்றை பரிசோதித்துக் கொண்டு இருக்கின்றனர். இவ்வளவு அதிகமான கடல் உயிரினங்கள் இறந்துப்போக ஆழ்கடலில் எண்ணெய் ஆய்வு, வைரஸ்கள் போன்றவை கூட காரணமாக இருக்கலாம் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர். சிலர் கடலில் நீர் வெப்பத்தை அதிகரிக்கும் எல் நினோ எனப்படும் நிகழ்வு கூட இதற்க்கு காரணமாக இருக்கும் என்றும் கூறியுள்ளனர். உள்ளூர் சுற்றுச்சூழல் அதிகாரி இதைப்பற்றி கூறுகையில், "தற்போது கோரோணல் விரிகுடா நீரின் வெப்பம், மின் கடத்துத்திறன் மற்றும் ஆக்ஸிஜன் அளவுகளை பரிசோதித்து கொண்டு இருக்கிறோம். மேலும் விபரங்கள் விரிவான சோதனைக்கு பின்னரே தெரியும்" என்றார்.

# 4 சிறுநீரகங்கள் 3 கணையங்கள் பிரிட்டனில் அதிசயமனிதன்



பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த கார்ல் ஜோன்ஸ் என்பவர் 4 சிறுநீரகங்கள் மற்றும் 3 கணையங்களுடன் பல அறுவைச் சிகிச்சைகள் மேற்கொண்டும் தற்பொழுது ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றார். இளமைக் காலத்தில் டைப்- 1 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட இவரின் உறுப்புகள் செயலிழந்துள்ளதையடுத்து ஜோன்ஸ் பெரிதும் அவதிப்பட்டு வந்துள்ளார். எனவே இவருக்கு சிறுநீரக மற்றும் கணைய மாற்றுச் சிகிச்சைகளை மேற்கொள்ள மருத்துவர்கள் தீர்மானித்தனர்.

வேல்ஸ் மருத்துவமனையில் இதற்கான சிகிச்சைகள் மேற்கொண்டுள்ளார். ஆரம்பத்தில் இவரது பழைய உறுப்புகளை மாற்றி புதியவற்றை பொருத்தவே மருத்துவர்கள் தீர்மானித்திருந்தனர். ஆனால் அவ்வாறு செய்வதால் உடலில் வேறு எதுவும் பாதிப்புகள் ஏற்படலாம் எனக் கருதிய மருத்துவர்கள் அவற்றை அகற்றாமல் புதிய உறுப்புகளை பொருத்தியுள்ளனர்.

கடந்த 2004ஆம் ஆண்டு இவருக்கு கணைய மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது சிறுநீரக மாற்று சிகிச்சை நடைபெறவுள்ளது. பல அறுவைச் சிகிச்சைகளை மேற்கொண்டும் தற்போது இவர் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றார்.

# கிளிநொச்சியில் 544 குடும்பங்கள் வீட்டுத்திட்டத்தை இழக்கும் அபாயம்

(கிளிநொச்சி)

போரினால் இழப்புக்களைச் சந்தித்த மக்களுக்கான இந்தியாவின் வீடமைப்புத் திட்டத்துக்குள் உள்ளடங்க தகுதிபெற்ற 544 குடும்பங்கள், காணி மற்றும் காணிக்கான அனுமதிப்பத்திரம் இல்லாமை, உரிய காலத்தில் நடைமுறைகளைப் பின்பற்றாமை போன்ற காரணங்களினால் வீடமைக்கும் வாய்ப்பை இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீடமைப்புத் திட்டத்துக்கென தகுதி காண் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள போதிலும் காணிக்கான அனுமதிப்பத்திரம் மற்றும் உரிய காலத்தில் நடைமுறைகளைப் பின்பற்றாமை போன்ற காரணங்களினால் அவர்கள் இந்த வீடமைக்கும் வாய்ப்பை இழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவசரமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டிய இந்தக் குடும்பங்கள், இதனால் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற வீடமைப்பு தொடர்பான கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இவர்களுடைய பிரச்சினைக்கு முடிந்தவரையில் தீர்வு காண்பதற்கு முயற்சிக்குமாறு பிரதேச செயலர்களிடம் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டார்.

கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள், இந்திய வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் யூ.என்.ஹபிற்றட், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சீனிவாசன், மேல்மாகாண ஓட்டுத் தொழிற்சாலைகளின் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் தற்போது 5810 வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## தீர்மானத்தை...

படுத்த வேண்டும். அவர்கள் அனைத்துலக சமூகத்தின் சொல்லைக் கேட்க வேண்டும்.

உங்களுக்குத் தெரியும், நாம் முன்வைத்த தீர்மானத்தை வரவேற்று 24 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. தனது சொந்த மக்களுக்கு அதன் பொறுப்புகளை நிறைவேற்ற இலங்கை அரசுக்கு நாம் அழைப்பு விடுக்கிறோம்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புகூறலில் இன்னமும் நிறைவேற்றப்படாத விவகாரங்களுக்குப் பதிலளிப்பதற்கு இலங்கை அரசுக்கு அனைத்துலக சமூகத்தின் ஆதரவை, தீர்மானம் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. இலங்கைக்கு நாம் ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே எச்சரிக்கை விடுத்திருந்தோம்.

வொஷிங்டனுக்கு வந்த அந்நாட்டின் மூத்த அதிகாரி உள்ளிட்டோரிடம், நாம் மிகத்தெளிவாகவே கூறியிருந்தோம்.

நீங்கள் முன்னே அடியெடுத்து வைக்காவிட்டால் நாம் இதேபோன்று மீண்டும் தீர்மானத்தை கொண்டு வருவோம் என்று அவர்களிடம் கூறியிருந்தோம்.

அது ஆறு மாதங்களுக்கு முன்னர் நடந்தது. ஆனால் எந்த முன்னேற்றத்தையும் நாம் காணவில்லை. மீண்டும், இலங்கை என்ன முடிவுகளை எடுக்கப் போகிறது என்று பார்க்க வேண்டும்.

நாம் முன்னரே கூறியது போன்று, அவர்கள் எதையும் செய்யவில்லையென்று அனைத்துலக சமூகம் கருதினால், நாம் அடுத்த அடிகளை எடுத்து வைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## காலஅவகாசம்...

நாடியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோக பூர்வ நிலைப்பாடு குறித்து அதன் தலைவர் சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கையில் இறுதியுத்தத்தில் அரச படைகளினால் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன. இந்நிலையில், இலங்கை அரசுக்கு எதிராக தனது இரண்டாவது பிரேரணையை அமெரிக்கா நிறைவேற்றியுள்ளது. இது வரவேற்கத்தக்க விடயம். இந்தப் பிரேரணைக்கு ஆதரவளித்த இந்தியா உள்ளிட்ட 25 சர்வதேச நாடுகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதேவேளை, இந்தப் பிரேரணையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பரவலாகப் பேசப்படுகின்றன. ஆனால், சொற்பதங்களில் மட்டும்தான் சிறுசிறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் உள்விடயங்களில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை

அமெரிக்கா ஒரு வல்லரசு நாடு. அந்த நாடு தான் கொண்டுவரும் பிரேரணையை வெற்றிகரமாக நிறைவேற்றவேண்டுமெனில் உலக நாடுகளை இராஜதந்திர ரீதியில் தன்பக்கம் வளைத்துப் போட வேண்டும். அந்த அடிப்படையில் பிரேரணையை வெற்றிகரமாக நிறைவேற்றவேண்டும் என்பதற்காக அதில் சில சொற்பதங்களில் அமெரிக்கா திருத்தங்களை மேற்கொண்டிருக்கலாம்.

எனினும், இந்தப் பிரேரணை இலங்கையில் இறுதி யுத்தத்தில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையை வரவேற்றுள்ளது. அத்துடன் இலங்கை அரசின் பொறுப்புக்கூறலை வேண்டி நிற்கின்றது. சுயாதீன விசாரணையை எதிர்பார்த்துள்ளது

அதேவேளை, இந்தப் பிரேரணையில் இந்தியாவின் தூண்டுதலினால் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்றும் பேசப்படுகின்றது. ஆனால், இது தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் சர்வதேசம் ஏற்றுக் கொள்ளும் ஆக்கபூர்வமான விசாரணை நடத்தவேண்டும் என்பதில் இந்தியா குறியாகவுள்ளது. இந்தியாவின் ஐ.நா. பிரதிநிதி ஜெனிவாவில் இதனைத் தெளிவாகக் கூறியுள்ளார் என சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

## யுத்தத்தில்...

திராவிட முன்னேற்றக் கழகமும் அமைதியாக இருந்தன.

அவர்கள் நினைத்திருந்தால், யுத்தத்தை தடுத்து நிறுத்தி, தமிழ் மக்களை அழிவில் இருந்து பாதுகாத்திருக்கலாம்.

எனினும் தற்போது யுத்தம் நிறைவடைந்துவிட்டது. இராணுவத்தினர் அமைதியாகிவிட்டனர். இந்த நிலையில் இந்தியாவும், திராவிட முன்னேற்றக்கழகமும் கூச்சலிட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கப்...

நடைமுறை சாத்தியமான வழிமுறை.

கடந்த கால அழிவுகளில் இருந்து எமது மக்கள் மீண்டெழுவதற்கான வாழ்வியல் எழுச்சி.

தொடர்ந்தும் இங்கு நீடித்து நிலவ வேண்டிய மனித உரிமைகள், மற்றும் அடிப்படை ஜனநாயக உரிமைகள்.

வறுமையற்ற வாழ்வு,... வரலாற்று வாழ்விடங்களில் அபிவிருத்தி... இவைகளுக்காகவே நாம் ஏனையவர்கள் போல் அன்றி வெளிப்டையாகவே அரசுடன் இணக்கமாக பேசி செயற்பட்டு வருகின்றோம். அரசியல் தீர்விற்கான நல்லெண்ண சமிக்ஞையினையும் காட்டி வருகின்றோம்.

ஆனாலும், தமிழ் பேசும் மக்களை தவறாக வழிநடத்தி, தேர்தல் காலங்களில் அவர்களது நரம்புளை முறுக்கேற்றி பெரும்பான்மை பலத்தோடு நாடாளுமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் தமிழ் பேசும் மக்களை கடந்த காலங்களை போல் ஏமாற்றி வருகின்றனர்.

தைப்பொங்கலுக்கு தமிழீழம் என்றும், அடுத்த மேதினம் சுதந்திர தமிழீழத்தில் நடக்கும் என்றும் எமது மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தார்கள்.

இப்படி சொல்லடி வித்தை காட்டி எமது மக்களின் வாக்குகளை அபகரித்து தமது நாடாளுமன்ற நாற்காலி கனவுகளை நிறைவேற்றியது மட்டுமே இங்கு நடந்த மிச்சம்.

இலங்கை இந்திய ஒப்பந்தம், பிரேமதாசா - புலிகள் பேச்சுவார்த்தை, சந்திரிகா - புலிகள் பேச்சுவார்த்தை, ரணில் - புலிகள் பேச்சுவார்த்தை, இறுதியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ - புலிகள் பேச்சுவார்த்தை என அனைத்து சந்தர்ப்பங்களும் தமிழ் பேசும் தலைமைகளாலேயே திட்டமிட்டு கைவிடப்பட்டன.

கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்களிடம் வாக்கு கேட்டு ஆணை பெற்றவர்கள் எமது மக்களை ஏமாற்றியது போல், நடந்து முடிந்த தேர்தலிலும் அரசியல் தீர்வு பெற்று தருவதாக எமது மக்களிடம் வாக்கு கேட்டு 14 ஆசனங் களோடு ஆணை பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தத்தமது சொந்த சலுகைகளுக்காக மட்டும் அரசுடன் பின்கதவு தட்டி கை குலுக்கி இணக்கமாக பேசி அதில் வெற்றியும் பெறுகின்றார்கள்.

ஆனாலும் தமக்கு ஆணை வழங்கிய தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைப்பிரச்சினை விடயத்தில் மட்டும் தமது வெறும் சுயலாப எதிர்ப்பு அரசியலையே நடத்தி வருகின்றார்கள்.

அறுபது ஆண்டு காலமாக தமிழ் பேசும் மக்கள் ஏமாற்றப்பட்டு வருவதாகத் தமது தவறுகளை மூடி மறைத்து ஒப்பாரி வைக்கிறது தமிழ்த் தேசியகத் கூட்டமைப்பு.

ஆனாலும், ஆறு மாதங்கள் மட்டும் கால அவகாசம் கொடுத்து அதற்குள் அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காணலாம் வாருங்கள் என்று நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அழைக்கின்றது அரசாங்கம்.

இது ஒரு இறுதி முயற்சியாக இருக்கட்டும் என்று எண்ணித்துணிந்து ஆறு மாத கால அவகாசத்தை கூட அரசியல் தீர்வுக்கு முயன்று பார்க்க விரும்பாத தமிழ் தேசிய கூட்டமைப்பு தாம் அரசியல் தீர்வுக்கு விருப்பமற்றவர்கள் என்பதையே வெளிப்படுத்தி வருகின்றது.

எமது மக்களின் அரசியலுரிமைகளை, பிரச்சினையை தீராப்பிரச்சினையாக நீடித்து சென்று, அரசியல் சித்து விளையாடி, அடுத்து தேர்தலிலும் நாடாளுமன்ற நாற்காலிகளில் உட்கார்ந்து, நாடாளுமன்ற சுகங்களையும், சொந்த சலுகைகளையும் பெற்று, வாழ்நாள் நாடாளுமன்ற பிரதிநிதிகளாக இருந்து விட்டு போவதே தமிழ் தேசிய கூட்டமைப்பின் விருப்பமாகும்.

வெளியுலக தீர்மானங்கள் எவையும் எமது மக்களுக்கு விடிவு பெற்றுத் தரப்போவதில்லை.

எமது மக்களின் அரசியலுரிமைகளை எவரும் தாம்பாளத்தட்டில் வைத்து படைத்து ஏந்தி வந்து தரப்போவதும் இல்லை.

எமது மக்களின் பிரச்சினைகளை நாமே பேசி தீர்ப்பதற்கான வழிமுறையை நாமே தேட வேண்டும்.

அதற்காக எவரும் அரசாங்கத்தின் காலில் விழுந்து சரணகதி அடையவேண்டும் வேண்டும் என்று நாம் கூறவில்லை. அதை யாரும் விரும்பவும் இல்லை.

அரசாங்கம் அறிவித்திருக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொண்டு இறுதி முயற்சியாக அரசியல் தீர்வுக்கு முயன்று பார்க்க வருமாறு நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மீண்டும் பகிரங்க அழைப்பு விடுக்கின்றோம்.

வெற்று வீர அறிக்கைகளும், வெறும் வாய்ப் பேச்சுக்களும் எமது மக்களுக்கு எந்த விமோசனங்களையும் பெற்றுத்தரப்போவதில்லை.

மதிநுட்ப சிந்தனைகளும், அரசியல் சாணக்கிய தந்திரங்களும் எமது மக்களை வழி நடத்தி செல்லட்டும்.

இலங்கை அரசுக்கு அழுத்தங்களை கொடுக்கும் சர்வதேச சமூகம் அரசியல் தீர்வுக்கு கிடைத்திருக்கும் சந்தர்பங்களை சரிவரப் பயன்படுத்த மறுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீதும் அழுத்தங்களை கொடுக்கட்டும்.

நாம் சொல்லி வந்தவைகளே இது வரை இங்கு நடந்து முடிந்திருக்கிறது. இனி இங்கு நடக்கப்போவதும் எமது தீர்க்க தரிசனங்களே.

வரலாறு யாருக்காவும் காத்திருக்காது. வந்து சேருங்கள் நடைமுறை சாத்திய வழிமுறை நோக்கி என்று நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

இவ்வாறு அந்த ஊடக அறிக்கையில் தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தமிழ் பேசும் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்காக நடைமுறைச்சாத்திய வழி நின்று வெற்றி பெறும் காலம் விரைவில் நிகழும் என்றும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

## இராஜதந்திர....

கருதுகின்றனர். இலங்கை, இந்திய மாநில அரசுகளுடன் நல்லுறவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தால், அதன் ஊடாக சாதகமான நிலைமையை ஏற்படுத்த வாய்ப்பிருந்திருக்கும் என அவர்கள் கூறியுள்ளனர்.

கடந்த முறை இலங்கைக்கு எதிராக வாக்களித்த ஜப்பான், இம்முறை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. அதனையும் இலங்கை உரிய முறையில் பயன்படுத்தத் தவறி விட்டதாக குற்றம் சுமத்தப்படுகிறது. இலங்கைக்கு இராஜதந்திர சாதகங்கள அன்றி நாடுகளுக்கான விஜயங்களை மேற்கொள்ள அதிக பணத்தை செலவிட்ட போதிலும், இலங்கைக்கு இராஜதந்திர ரீதியில் நெருக்கமான நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்தத் தவறியுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இரு தடவைகள் ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கை தோல்வியடைந்தமை குறித்து உயர்மட்டத் தலைவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

## முள்மகுடம்...

தேசத்துக்கு மகுடம் நிகழ்வின் மூலம் கிழக்கு மாகாணம் மேலும் முன்னேற்றமடையும் என்றும் அவர் கூறினார்.

மக்கள் பொய்ப் பிரசாரங்களை நம்பக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

## ஐக்கிய...

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு பூரண உரிமைகளும் சுதந்திரம் வழங்கப்படக் கூடிய வகையிலான தீர்வுத் திட்டத்தையே இந்தியா வலியுறுத்தி நிற்கிறது.

பாதுகாப்பு மற்றும் நட்புறவு ஆகிய இரண்டு காரணிகளையும் சமனிலையாக பேணுவது மிகவும் சிரமமானது. இணையப் பயன்பாடு தகவல் தொழில்நுட்பம் போன்ற காரணிகளினால் பாதுகாப்பு தொடர்பான நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது

விண்வெளி, சைபர் (இணையத்தள வழி குற்றங்கள்), தகவல் தொழில்நுட்பம் ஆகியவை, பாதுகாப்பு என்பதற்கான இலக்கணத்தை மாற்றியமைத்திருக்கின்றன.

1998 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவின் பாதுகாப்புத் துறை மிகவும் முன்னேற்றமடைந்திருக்கிறது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பலம்பெற்றவர்களாக உள்ளோம். அணு ஆயுத சக்தி படைத்த நாடாக உள்ளோம். வழக்கமான பிரச்சினைகள், எல்லை தாண்டிய பயங்கரவாதம் ஆகியவற்றைச் சமாளிக்கும் திறன் பெற்றுள்ளோம் என்றார்.

# மனித உரிமைகள் தொடர்பாக பாடம் நடத்தத் தேவையில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமைகள் குறித்து எவரும் பாடம் கற்பிக்கத் தேவையில்லை என்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியப்போவதில்லை என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் மற்றும் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் விளக்கமளிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்று முன்தினம் இலங்கை மன்றத்தில் விசேட செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியது.

இதன்போது ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

1988, 1989 காலப்பகுதியில் நாட்டில் பல பிரச்சினைகள் இடம்பெற்றன. இருப்பினும், மனித உரிமை விவகாரம் தற்போது ஜெனிவா செல்வதற்கான காரணம் என்ன? புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரே மனித உரிமைகள் குறித்து பேசப்படுகின்றது. தோற்கடிக்கப்படாவிட்டால் இவை தொடர்பில் பேசப்பட்டிருக்கமாட்டாது.

வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு எமக்கு வேறெந்த நாடோ அல்லது அமைப்போ கூறமுடியுமா? வேறு நாடுகளுக்குள் இராணுவ முகாம்களை அமைத்து செயற்படுபவர்கள்தான் இவ்வாறு சொல்கின்றனர். லிபியா, எகிப்து, சிரியா போன்ற நாடுகளுக்குள் நுழைந்தது போன்ற நிலைமையை உருவாக்கப் பார்க்கின்றனர்

அதேவேளை, இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் பிரசாரங்களை முன்னெடுத்த அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதி கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக சுதந்திரமாக வந்து இறங்குகின்றனர். நாட்டில் வாழ்கின்றனர். இதிலிருந்தே எமது நாட்டில் மனித உரிமைகள் எவ்வளவு தூரம் மதிக்கப்படுகின்றது என்பதை அறியமுடியும். வேறு எந்த நாட்டிலும் இல்லாத சுதந்திரம் இங்கு இருக்கின்றது.

தேசிய பிரச்சினைகளின் போது ஒத்துழைத்துச் செயற்படுவதற்கு நாம் எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுக்கின்றோம். சர்வதேச அழுத்தங்களுக்கு நாம் அடிபணியமாட்டோம். மனித உரிமைகள் குறித்து எவரும் எங்களுக்குக் கற்பிக்கத் தேவையில்லை

எமது அரசு உறுதியான கொள்கையுடன் செயற்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அவர்கள் மீண்டும் நாட்டைப் பிரிக்கும் கட்டத்துக்குச் செல்வர், இவ்வாறு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தனதுரையில் தெரிவித்தார்.

# தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு; திருப்தி கொள்ளும் அமெரிக்கா

இலங்கை தொடர்பான தீர்மானத்தை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு இந்தியாவிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு தொடர்பில் திருப்தியடைவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆரம்பம் முதல் தீர்மானம் நிறைவேற்றப்படும் வரை இந்தியாவோடு மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டதாகவும் அமெரிக்காவின் மத்திய ஆசிய மற்றும் தெற்காசியப் பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் ரொபர்ட ஓ பிளேக் தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை செலுத்தக்கூடிய இந்தியாவின் ஒத்துழைப்போடே சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் செயற்பட முடியும் என்றும் ரொபர்ட் ஓ பிளேக் தெரிவித்தார்.

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் இலங்கைக்கு நெருக்கடி அளிக்கக்கூடிய தீவிரப் போக்கை குறைப்பதில் இந்தியா பங்காற்றியதாக சில தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டையும் அமெரிக்க இராஜதந்திரி ரொபர்ட் ஓ பிளேக் நிராகரித்தார்.

அமெரிக்கத் தீர்மானத்தின் தீவிரத்தன்மை குறைக்கப்படவில்லை என்றும் தீர்மானம் நியாயமானதாகவும் பக்கச்சார்பற்றதாகவும் தான் இருந்தது என்றும் மீள் இணக்கம் மற்றும் பொறுப்புகூறல் விடயங்களில் இலங்கை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை தீர்மானம் ஆணித்தரமாக வலியுறுத்துகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# முதலாவது ஒருநாள் போட்டியில் இலங்கை 8 விக்கெட்டால் வெற்றி

(கொழும்பு)

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட்களால் டக்வத் லூயிஸ் முறையில் வெற்றி பெற்றுள்ளது.

260 என்ற வெற்றியிலக்கு இலங்கை அணிக்கு பங்களாதேஷால் நிர்ணயிக்கப்பட்டது. எனினும் மைதானத்தில் ஏற்பட்ட மின்சார பிரச்சினையால் போட்டி தாமதமாகவே ஆரம்பமானது.

அதன்படி 41 ஓவர்களில் 238 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என இலங்கை அணி களமிறங்கியது. ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய தில்ஷான் இலங்கையை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றார்.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி நேற்றையதினம் அம்பாந்தோட்டை ராஜபக்ச மைதானத்தில் இடம்பெற்றது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை பங்களாதேஷ் அணிக்கு வழங்கியது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியபோதும் நின்று நிலைத்து ஆடிய தமிம் இக்பால் மற்றும் நசிர் ஹுசைன் ஆகியோரின் அபார ஆட்டத்தால் சிறந்த ஓட்ட எண்ணிக்கையை பங்களாதேஷ் பெற்றது.



தமிம் இக்பால் 112 நசிர் ஹுசைன் 79 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மத்தியூஸ், மலிங்க ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி டக்வத் லூயிஸ் முறைப்படி 41 ஓவர்களில் 238 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்தது.

தில்ஷானின் வீழ்த்தப்படாத 113 ஓட்டங்கள் மற்றும் சங்கக்காரவின் 63 ஓட்டங்கள் உதவியுடன் இலங்கை 35.4 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தது. போட்டியின் நாயகனாக தில்ஷான் தெரிவு செய்யப்பட்டார்.

## பிரிகேடியர் நிலைக்கு 45 கேணல்கள்

(கொழும்பு)

இலங்கை படைப்பிரிவைச் சேர்ந்த 45 கேணல்கள் பிரிகேடியர் நிலைக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளதாக இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மார்ச் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இப்பதவி உயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அனுமதியுடன் மேற்படி 45 கேணல்களும் பிரிகேடியர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

# பனிச்சங்கேணிப் பகுதியில் எலும்புக்கூடுகள் மீட்பு

மட்டக்களப்பு - பனிச்சங்கேணி பிரதேசத்தில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

பனிச்சங்கேணி - எல்லத்தீவு பிரதேசத்திலேயே நேற்று சனிக்கிழமை இவ் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் உணவு விடுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காக ஆரம்பக்கட்ட வேலைகளில் ஈடுபட்டபோதே இந்த எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோட்டல் நிர்மாண வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் இவ் எச்சங்கள் கொண்ட புதைகுழியைக் கண்டு வாகரைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

அதனையடுத்து அப்பிரதேசத்திற்குச் சென்ற பொலிஸார் ஹோட்டல் நிர்மாண வேலைகளை நிறுத்தி பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசியல் பிரச்சினை தற்காலிகம் இந்தியா - இலங்கை நட்பு நாடுகள்

## - தூதுவர் காரியவசம் விளக்கம்



இலங்கையில் செயற்படும் 46 சர்வதேச நிறுவனங்களில் 43 நிறுவனங்கள் இந்தியாவைச் சேர்ந்தவை என்று இந்தியாவுக்கான இலங்கை தூதர் பிரசாத் கரியவாசம் கூறியுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர்,

இந்தியாவும், இலங்கையும் நட்பு நாடுகள்தான். தற்போது ஏற்பட்டுள்ள சில அரசியல் பிரச்சினைகள் தற்காலிகமானதுதான். இதனால் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் எந்த பாதிப்பும் ஏற்படாது.

இலங்கை யின் அமைவிட உத்தியை பயன்படுத்தி இந்தியா ஏராளமான ஆதாயங்களை அடைய முடியும். இலங்கையை சிறந்த வர்த்தக மையமாக பயன்படுத்திக்கொள்ள முடியும்.

இலங்கையில் செயல்படும் 46 சர்வதேச நிறுவனங்களில் 43 நிறுவனங்கள் இந்தியாவைச் சேர்ந்தவை. இரு நாடுகளுக்கும் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் உள்ளது. ஆனால் இதை செயல்படுத்துவதில் போதிய முன்னேற்றம் காணப்படவில்லை.

இந்த ஒப்பந்தத்தை பயனுள்ள வகையிலும், அர்த்தமுள்ள வகையிலும் திறம்பட செயற்படுத்த இரு நாடுகளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகும். இந்தியாவில் இருந்து இலங்கைக்கும், இலங்கையில் இருந்து இந்தியாவுக்கும் சுற்றுலா பயணிகள் வந்து செல்வது அதிகரித்து இருப்பதால் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார் அவர்.

## பிரதம நீதியரசர் பதவி நீக்கம்;

# கனேடிய பிரதிநிதியின் கருத்தால் அமைச்சர் பீரிஸிற்கு தர்மசங்கடம்

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள கனேடிய பிரதிநிதி ஹக் சேகலுக்கும், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் இவ்வாறு வாக்கு வாதம் இடம்பெற்றுள்ளது. சேகலிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது இந்த சர்ச்சை ஏற்பட்டது.

அரசாங்கத்திற்கு எதிரான தீர்ப்புக்கள் அளிக்கப்பட்ட போதிலும் பிரதம நீதியரசரை பணி நீக்கம் செய்யும் நடைமுறை எமது நாட்டில் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் நான்கு வீத மக்கள் வாழும் பெஸ்ட் நேசன் பிராந்தியத்திற்கு சார்பாகவும் மத்திய அரசாங்கத்திற்கு எதிராகவும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புக்களை வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உச்ச நீதிமன்றின் தீர்ப்புக்களினால் மத்திய அரசாங்கம் பாதிப்புக்களை எதிர்நோக்கிய போதிலும், பிரதம நீதியரசரை பணி நீக்கம் செய்ய உத்தேசித்ததில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்துக்கள் வெளிவிவகார அமைச்சர். ஜீ.எல். பீரிஸை ஆத்திரமடையச் செய்துள்ளது. கனேடிய செனட்டரின் கருத்துக்கள் தேவையற்றவை என அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

விருந்தாளியாக இந்த நாட்டுக்கு விஜயம் செய்துள்ள காரணத்தினால் கடுமையாக நடந்து கொள்ள முடியாது எனவும். அது பண்பாக அமையாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவிற்கு விஜயம் செய்தால் நான் இவ்வாறு தர்மசங்கடமான கருத்துக்களை வெளியிட மாட்டேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.